# புதிய ஜனநாயகம்

ஏப்ரல் 2013
ரூ.10.00



## ஈழம்:

## மாணவர் எழுச்சியில் ஒளிந்துகொள்ளும் துரோகிகள், பிழைப்புவாதிகள்!

# “ஈழத் தமிழினப் படுகொலைக்கு நீதி கேட்டு ராஜபக்சேவின் கூட்டாளி டெல்லிக்கும், பங்காளி ஐ.நா.-வுக்கும் காவடி தூக்குவதை நிராகரிப்போம்! தமிழகத்தில் மீண்டும் மக்கள் எழுச்சியைத் தோற்றுவிப்போம்!!”

## – தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் போராட்டங்கள்



பாசிச ராஜபக்சே கும்பல் நடத்திய ஈழத் தமிழினப் படுகொலைக்கு எதிராக கடந்த மார்ச் மாதத்தில் மாணவர்களின் எழுச்சிமிகு போராட்டங்கள் தமிழகத்தை உலுக்கின. ராஜபக்சே கும்பலை இனப்படுகொலைக் குற்றவாளியாக அறிவித்து சர்வதேச விசாரணை நடத்தித் தண்டிக்க வேண்டும், ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை வலுவான திருத்தங்களுடன் இந்தியா ஆதரிக்க வேண்டும், தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் - எனப் பலவாறான முழக்கங்களுடன் இப்போராட்டங்கள் நடந்து வந்தன.

இந்நிலையில், அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் தயவிலோ, அல்லது இந்திய அரசின் தயவிலோ இவற்றை எப்போதுமே சாதிக்கவே முடியாது என்பதை உணர்த்தியும்,போர்க்குற்றவாளி ராஜபக்சேவைத் தண்டிப்பது, இனப்படுகொலைக்குத் துணைநின்ற இந்திய அரசுக்கும் தேசியக் கட்சிகளுக்கும் எதிராக அரசியல் ரீதியாக தாக்குதல் தொடுப்பது என்ற திசையிலே போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அறைகூவியும், ‘‘ஈழத் தமிழினப் படுகொலைக்கு நீதி கேட்டு ராஜபக்சேவின் கூட்டாளி டெல்லிக்கும், பங்காளி ஐ.நா.வுக்கும் காவடி தூக்குவதை நிராகரிப்போம்! நூரம்பர்க் போன்ற போர்க்குற்ற விசாரணைக்குக் குறைவான எதையும் ஏற்க மறுப்போம்! தமிழகத்தில் மீண்டும் மக்கள் எழுச்சியைத் தோற்றுவிப்போம்!’’ -என்ற அரசியல் முழக்கங்களோடு துண்டுப் பிரசுரங்கள்-முழக்கத் தட்டிகளுடன் ஆர்பாட்டங்களையும், மறியல் - முற்றுகைப் போராட்டங்களையும், மன்மோகன் - சோனியா கும்பலின் கொடும்பாவி எரிப்புப் போராட்டங்களையும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமது தோழமை அமைப்புகளுடன் இணைந்து தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் போர்க்குணத்தோடு வீச்சாக நடத்தி வருகின்றன.

இப்போராட்டத்தின் முன்னணியில் நிற்கும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியின் பிரச்சாரத்தால் உந்தப்பட்ட திருச்சி சட்டக் கல்லூரி, பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரிகளின் ஆயிரக்கணக்கான மாணவர்கள் மார்ச் 13 மற்றும் 14-ஆம் தேதிகளில் டோல் கேட் பகுதியில் மன்மோகன் - சோனியாவின் கொடும்பாவிகளை எரித்து சாலைமறியல் போராட்டத்தையும், தலைமை அஞ்சலகம், ஸ்டேட் வங்கி உள்ளிட்ட மைய அரசு அலுவலகங்களைச் செயல்பட விடாமல் முற்றுகையிட்டு முடக்கியும், பின்னர் ரயில் நிலையத்தை முற்றுகையிட்டும் போர்க்குணமிக்க போராட்டத்தை நடத்தினர். சென்னையில் 17-ஆம் தேதியன்று இந்திய தொழில்நுட்பக்கழக (ஐ.ஐ.டி.)த்தின் மாணவர்கள் ராஜபக்சே கும்பலை போர்க் குற்றவாளியாக அறிவித்து தண்டிக்கக் கோரி ஆங்கிலத்திலும் இந்தி, தெலுங்கு மொழிகளிலும் பிரசுரம் விநியோகித்து ஒருநாள் உண்ணாவிரதமும் பேரணியும் நடத்தினர்.

பெருகிவரும் மாணவர் போராட்டங்களை முடக்கும் நோக்கத்துடன் ஜெயா அரசு அனைத்து கல்லூரிகளுக்கும் காலவரையற்ற விடுமுறை அறிவித்துள்ளதை அம்பலப்படுத்தி, பு.மா.இ.முன்னணியினர் தமிழக முழுவதுமுள்ள அனைத்து கலை

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்






புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 28 இதழ்: 6
ஏப்ரல் 2013

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: *முகிலன்*

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

## ஈழம்:
# மாணவர் எழுச்சியில் ஒளிந்துகொள்ளும் துரோகிகள், பிழைப்புவாதிகள்!

''ஈழத் தமிழருக்கெதிராக இனப் படுகொலை நடத்திய ராஜபக்சே கும்பலின் போர்க் குற்றங்கள் மீதான சர்வதேச விசாரணை, தண்டனை வேண்டும்; பொது வாக்கெடுப்பு வேண்டும்; — இவ்விரண்டு சரியான, அவசியமான கோரிக்கைகளை முன்வைத்துத் தமிழக மாணவர்கள் நடத்தி வரும் போராட்டங்கள், 1983 ஜூலைக்குப் பிறகு நாம் கண்டதொரு தமிழகம் தழுவிய எழுச்சியை நினைவுபடுத்துகின்றன.

1983 ஜூலையில் தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் உட்பட 53 ஈழத் தமிழர்கள் வெளிக்கடை சிறையில் வைத்துச் சிங்களக் காடையர்களால் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்; அதைத் தொடர்ந்து சிங்கள இனவெறி இராணுவம் கட்டவிழ்த்துவிட்ட வெறியாட்டத்தில் பலநூறு ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் பலர் சிங்களக் காடையர்களின் வல்லுறவுக்குப் பலியாகினர். பல்லாயிரக்கணக்கான அகதிகள் தமிழகத்தில் வந்து குவிந்தனர். ஆத்திரமும் கோபமும் அடைந்த தமிழக மக்கள், தன்னெழுச்சியாக, இப்போது நடப்பதைவிட மிகப்பெரிய அளவில் ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டங்களில் குதித்தார்கள். தமிழகம் முழுவதும் பல நகரங்கள், கிராமங்களில் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பொது மக்கள் - என அனைத்துத் தரப்பும் தெருவில் இறங்கி, பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், முற்றுகைகள், அன்றைய சிங்கள இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே கொடும்பாவி எரிப்பு எனப் போராட்டங்கள் நடத்தினர். அதன் பிறகு, அவ்வாறான மிகப் பெரிய எழுச்சியைத் தமிழகம் கண்டதில்லை.

எனினும், புலிகளின் துப்பாக்கிக் கலாச்சாரம், பிரிவினைவாதம் என்று பீதி கிளப்பிப் பார்ப்பன ஆதிக்கச் செய்தி ஊடகங்கள் நடத்திய அவதூறுப் பிரச்சாரம், குறிப்பாக, ராஜீவ் கொலைக்குப் பிறகு ஜெயலலிதா அரசு கட்டவிழ்த்துவிட்ட ஈழ எதிர்ப்புப் பிரச்சாரம், ஈழத் தமிழர் வேட்டை - இவை காரணமாக முன்பு நிலவிய ஈழ ஆதரவு எழுச்சி மங்கி, மறைந்து போனது. கடைசியில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசுவதற்கே மக்கள் அஞ்சும் சூழல் நிலவியது. அந்த நிலையிலும் அரசு துரோக வழக்கு, ''தடா'' கைதுகளை எதிர் கொண்டும், புதிய ஜனநாயகப் புரட்சி அமைப்புகள் மட்டுமே ஈழ ஆதரவு இயக்கங்களை நடத்தின. அப்போது நெடுமாறன், வைகோ, ராமதாசு, வீரமணி, மணியரசன் போன்ற புலி ஆதரவாளர்கள்கூட முடங்கிப் போனார்கள்.

அடுத்த இரண்டு பத்தாண்டுகளின்போது, விடுதலைப் புலிகளின் படை வெற்றி முகத்தில் உள்ளதென்றும், ஈழத்தின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கிட்டத்தட்ட புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டனவென்றும், விரைவில் தனி ஈழம் பிரகடனப்படுத்தப் போகிறார்கள் என்றும், அதனைப் பிற நாடுகள் அங்கீகரிப்பது மட்டுமே தேவை என்றும் ஒருபுறம் புலி ஆதரவாளர்கள் பிரச்சாரம் செய்து வந்தார்கள். இன்னொருபுறம் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், அரசின் அச்சுறுத்தல்கள் அதிகரித்தன. புலிகளையும் அதன் ஆதரவாளர்களையும் ஒழித்துக் கட்டுவதென்பது ஜெயலலிதா அரசின் நடவடிக்கை என்பதைத் தாண்டி, அவரது சொந்த முறையிலான வெறி பிடித்த நடவடிக்கையாகவே இருந்தது. இருப்பினும், ஈழ விடுதலைக்கு ஆதரவான எழுச்சி எதுவும் தமிழகத்தில் நடைபெறவில்லை.

2006-இல் மகிந்த ராஜபக்சே அரசு புலிகளுக்கு எதிரான இறுதிப் போரைத் துவங்கியது. மாவிலாறில் தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை இரண்டரை ஆண்டு காலம் நீடித்த இந்தப் போர் அதிகரித்த அளவில் ஈழத் தமிழின

அழிப்புப் போராகவே இருந்தது. 2008-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சிங்கள இனவெறி இராணுவத்தின் கிளிநொச்சி முற்றுகையும் தாக்குதலுமாகத் தீவிரமடையத் தொடங்கின. புலிகளுக்கு எதிரான போர் என்று சொல்லிக் கொண்டு, போர் விமானங்களும், பீரங்கிகளும் பொருத்தப்பட்ட ஹெலிகாப்டர்களும், ஈழத் தமிழர் மீது கொத்துக்குண்டு மழை பொழிந்தன. நூற்றுக் கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட, எஞ்சியவர்கள் வீடிழந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் காடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். உணவும் மருந்துவமும் கிடைக்காமல் சொந்த மண்ணில் அகதிகளாகவும் நாடோடிகளாகவும் அலைந்தனர்.

அப்போதும்கூட தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க அளவு ஈழ ஆதரவு எழுச்சி எதுவும் நடந்துவிடவில்லை. கிளிநொச்சியைக் கைப்பற்றி, வன்னியைத் திறந்தவெளி வதை முகாமாக சிங்கள இராணுவம் மாற்றிவிட்ட நிலையில், புலிகள் முல்லைத் தீவுக்கு விரட்டப்பட்ட நிலையில், ''எப்படியாவது போரை நிறுத்துங்கள்; இங்கே நாங்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்படுகிறோம்'' என்று ஈழத்தமிழர்கள் துயரக்குரல் எழுப்பினர். முத்துக்குமார் தீக்குளிப்பும், வழக்குரைஞர்கள் போராட்டங்களும் தமிழகத்தில் ஈழ ஆதரவு உணர்வலைகளை ஏற்படுத்தின. இவற்றில் புதிய ஜனநாயகப் புரட்சி அமைப்புகளின் பங்கு குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. தமிழகமோ மக்களவைத் தேர்தல் திருவிழாக் கொண்டாட்டத்தில் மூழ்கடிக்கப்பட்டிருந்தது. ஈழப் போரோ, முல்லைத் தீவு, முள்ளிவாய்க்கால், இறுதியாக நந்திக் கடற்கரையில் வரலாறு காணாத தமிழின அழிப்புப் படுகொலையை நோக்கி நகர்ந்தது.

காங்கிரசு - கருணாநிதி தலைமையில் ராமதாசு, திருமா திரண்டு மன்மோகன் - சோனியா கும்பலுக்குக் கடிதம் - மனுப் போட்டு மன்றாடுவது, அரை நாள் உண்ணாவிரதம், மனித சங்கிலி, மேனன் - நாராயணன், பிரணவ முகர்ஜியின் போர் நிறுத்த வாக்குறுதிகள் - இலங்கை விஜயங்கள் எனப் பித்தலாட்ட நாடகங்களை அடுத்தடுத்து அரங்கேற்றிக் கொண்டிருந்தார்கள். மறுபுறம், ஜெயலலிதா தலைமையில் பா.ஜ.க. முதல் தா.பா.வரை புலி ஆதரவாளர்கள் உட்பட ஓரணியில் திரண்டார்கள். ''இந்திய இராணுவத்தை அனுப்பி தமிழீழத்தைப் பெற்றுத் தருவேன்'' என்ற வாக்குறுதியோடு ஜெயலலிதா ''ஈழத்தாய்'' அவதாரம் எடுத்தார். ''இலை மலர்ந்தால் ஈழம் மலரும்'' என்று நம்பச் சொன்னார்கள், புலி ஆதரவாளர்கள்.

2009 மே மாதம் இரண்டாவது வாரத்தில் ஈழத்தில் இனப் படுகொலை உச்சத்தில் நடந்தபோதுகூட, தமிழகத்தில் அதற்கெதிரான குறிப்பிடத்தக்க பெரும் எழுச்சி எதுவும் நடந்துவிடவில்லை. ''நாங்கள் தாய்த் தமிழகத்தை நம்பினோம்; அவர்களும் எங்களைக் கைவிட்டு விட்டார்கள்'' என்று ஈழத் தமிழர்கள் மனம் உடைந்து கூறினர். இத்தகைய நிலைக்குப் பொறுப்பானவர்கள் யார்? ஈழப் போரை வழிநடத்திய விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களின் தலைவர் பிரபாகரன் மீது ''உலகிலேயே சிறந்த அரசியல், இராணுவ வல்லுநர்; போரில் வெல்வதற்கு ஏதோ தந்திரங்கள் வைத்திருக்கிறார்; புலிகளை வெல்லவே முடியாது'' என்ற மாயையை இறுதிக் கட்டத்திலும் பேணியவர்கள் யார்? சோனியா - அத்வானி, கருணாநிதி - ஜெயலலிதா, அமெரிக்கா, சர்வதேச சமூகம் எனப்படும் அதன் எடுபிடி நாடுகள் ஆகிய மேலாதிக்க பாசிசசக்திகள், பிழைப்புவாதிகள் - துரோகிகள், ஏகாதிபத்திய வல்லரசுகள் மீது அடுத்தடுத்து நம்பிக்கை வைக்கும்படி வாதாடியவர்கள் யார்? ஈழத்தின் ''தலைவிதி'' முள்ளிவாய்க்கால் இறுதிப் போருக்கு சில நாட்களுக்கு முன்பு நடக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளைப் பொறுத்துத்தான் அமையவிருக்கிறது என்ற பிரமையை உருவாக்கியது யார்? அவர்கள்தான் அத்தகைய செயலற்ற நிலைக்குப் பொறுப்பானவர்கள்!

இந்தியா, இலங்கை அரசுக்கு நவீன ஆயுதங்களையும் விண்வெளி வேவுச் செய்திகளையும் வழங்குவது மட்டுமல்ல; நேரடியாக போர்க்களத்தில் இந்திய இராணுவ அதிகாரிகள் பங்கேற்கிறார்கள் என்பது 2008 அக்டோபரிலேயே அம்பலமானது. புலிகளின் எதிர்த் தாக்குதலில் இந்திய இராணுவ அதிகாரிகள் போர்க்களத்தில் நிற்பதையும், அவர்களில் சிலர் காயமடைந்ததையும் இலங்கை ஏடுகளே உறுதி செய்தன. இந்தியா ஈழத்தின் எதிரி நாடாகச் செயல்படுவதையும் ராஜபக்சேவுடன் ஈழப் போரை வழிநடத்துவதையும் அறிந்திருந்தபோதும், அப்போதே கருணாநிதியின் துரோகங்களை அறிந்திருந்த போதும், புலி ஆதரவாளர்கள் இந்த உண்மைகளை முன்வைத்து மன்மோகன் - சோனியா மற்றும் கருணாநிதி அரசுக்கு எதிராக எந்தப் போராட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. மாறாக, மன்மோகன் - சோனியா கும்பல் மீதும் இந்தியா மீதும் நம்பிக்கையைப் பேணினார்கள்; பார்ப்பன, மலையாள அதிகாரிகளின் தூண்டுதல், தவறான ஆலோசனைகள் காரணமாகத்தான் இந்திய அரசு போர் நிறுத்தம், ஈழ ஆதரவு நிலையெடுக்க மறுக்கிறது என்றும் இலங்கையிடம் இந்திய அரசு ஏமாந்து விட்டது என்றும், சீனா, பாகிஸ்தான் சதிகளை முறியடிக்க ஈழத்தமிழர் மீது நம்பிக்கை வைத்து ஆதரவளிக்க வேண்டும் என்றும், சோனியாவின் தாய்மையுணர்ச்சிக்கும் மன்மோகனின் மனிதாபிமானத்துக்கும் மன்றாடினார்கள்.

''ஈழம் மலர்வதற்கு உத்திரவாதம் இருந்தால் நான் பதவி விலகுகிறேன்'' என்ற கருணாநிதியை விட்டு விலகி, ''40 தொகுதிகளையும் உத்தரவாதப்படுத்தினால் ஈழம் தருகிறேன்'' என்ற ஜெயலலிதாவின் வாக்குறுதிக்குப் பின்னால் அணி அமைத்தார்கள், புலி ஆதரவாளர்கள். ''தனி ஈழம் கூடாது; ஒன்றுபட்ட இலங்கையே சரியானது; புலிகள் பயங்கரவாதிகள்'' என்பதுதான் பா.ஜ.க. மற்றும் இ.க.க. கட்சிகளின் அதிகாரபூர்வ நிலை என்றபோதும், அவற்றின் தமிழ்நாட்டுத் தலைவர்களான இல.கணேசன், தா.பாண்டியனை இலங்கைத்தமிழர் பாதுகாப்பு இயக்கத்தில் இணைத்துக் கொண்டார்கள்.

ஈழப்பிரச்சினையில் மட்டுமின்றி, வேறு பல பிரச்சினைகளிலும் இவர்களது அரசியல் சந்தர்ப்பவாதத்தையும் பிழைப்புவாதத்தையும் தம் சொந்த அனுபவத்தில் பார்த்திருக்கும் தமிழக மக்கள், ஈழத்தமிழ் மக்களின் துயரம் குறித்து தமிழக மக்களுக்கு அனுதாபம் இருப்பினும், காங்கிரசு- தி.மு.க. கூட்டணியின் மீது அதிருப்தியும் வெறுப்பும் இருப்பினும், ஈழ மக்களின் துயரத்தை ஜெ. அணியினர் துடைத்து விடுவார்கள் என்று நம்பிவிடவில்லை.

பிழைப்புவாதிகள், பாசிஸ்டுகள் மீது நம்பிக்கை வைத்து வாக்களிக்குமாறு மக்களிடமும் பிரச்சாரம் செய்தார்கள் புலி ஆதரவாளர்கள். உள்ளூர் பிரச்சினைகள், சாதி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஆளும் கட்சி மீது மக்களுக்குத் தோன்றியிருக்கக் கூடிய அதிருப்தியை, ஈழ ஆதரவாக அப்படியே மடைமாற்றிவிட முடியும் என்று கணக்குப் போட்டார்கள். அந்தக் கணக்கு பொய்த்து விட்டது. காங்கிசு-தி.மு.க., கூட்டணியே நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்றது.



அதேசமயம், ஈவிரக்கமற்ற முறையில் நடந்து கொண்டிருந்த ஈழப்போரின் கடைசி நாட்கள் இந்திய மேலாதிக்கத்தின் கோரமுகத்தை நமக்குக் காட்டுகின்றன. மே 13 அன்று தமிழகத்தில் தேர்தல் முடிந்த பின் இறுதித் தாக்குதலை வைத்துக் கொள்ளுமாறு இலங்கை அரசுக்கு வழிகாட்டி இயக்கியது, இந்திய அரசு. புலி ஆதரவாளர்களோ, மே 16 அன்று தேர்தல் முடிவுகள் வரும்வரை 'இறுதி முடிவு' எதுவும் எடுக்கவேண்டாமென புலிகளுக்கு ஆலோசனை கூறினார்கள்.

தோல்வியின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட நிலையிலும், ''துப்பாக்கிகளை மவுனிக்கச் செய்வது'' என்ற தங்களது இறுதி முடிவை அறிவிப்பதற்கு இந்தியத் தேர்தல் முடிவுகள் தெரியும் வரை (மே 16) புலிகள் காத்திருந்தார்கள். தோல்வியை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறோம் என்பதும், ஒபாமா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் கோரிக்கைகளை ராஜபக்சே அரசு நிராகரித்துவிட்டது என்பதும் புலிகள் அறியாததல்ல. புலிகளுக்கு நம்பிக்கையூட்டும் எந்த நிகழ்வும் இந்தக் கடைசி நாட்களில் நடந்துவிடவில்லை. இருப்பினும், அன்றாடம் பல்லாயிரம் மக்களும் புலிகளும் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்டபோதும், கடைசியாக புலிகள் இயக்கத் தலைவர்களே கொல்லப்படும் நிலைமை நெருங்கிய போதும், ''டில்லியில் ஆட்சி மாறினால் போர்நிறுத்தம் வந்துவிடும்'' என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். கடைசி நாட்களின் நிகழ்வுகள் இதனைத் தெளிவாக நமக்குக் காட்டுகின்றன. இந்த மூடநம்பிக்கை மிகவும் பாரதூரமான இழப்பை ஈழத்தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியது.

ஒருவேளை, ஈழ ஆதரவாளர்கள் எதிர்பார்த்த வெற்றியை ஜெயலலிதாவும் பாரதிய ஜனதாவும் பெற்றிருந்தால், மறுகணமே போர்நிறுத்தம் வந்திருக்குமா? அப்படி ஒரு பிரமை ஒருவேளை புலிகளுக்கு இருந்திருந்தாலும், இங்கிருக்கும் புலிகளின் ஆதரவாளர்கள் அந்தப் பிரமையை நீக்கி, அவர்களுக்குத் தெளிவை ஏற்படுத்தி இருக்கவேண்டும். மாறாக, அத்தகைய பிரமையை உருவாக்கும் திருப்பணியையே இவர்கள்தான் செய்து கொண்டிருந்தார்கள். இந்தப் பிரமைக்கு, தங்கள் உயிரையும் சொந்தங்களையும் காவு கொடுத்தார்கள், ஈழத் தமிழ் மக்கள்.

இவ்வாறு குற்றம் சாட்டுவதன் காரணமாக புலி ஆதரவாளர்கள் நம்மீது ஆத்திரப்படலாம். அது குறி தவறிய ஆத்திரம். மாறாக, இத்தகைய பிரமையை இன்னும் தொடர்வதற்காக அவர்கள் மீதுதான் தமிழ் மக்கள் ஆத்திரம் கொள்ள வேண்டும்.

மே 21-ஆம் தேதியன்று நெடுமாறன், வைகோ, ராமதாசு முதலானோர் நடத்திய பேரணிக்கு ஜெயலலிதாவை அழைத்தார்கள். அவர் வரவில்லை. அதுமட்டுமல்ல; ஜெயலலிதா விடுத்த அறிக்கையிலும் 'தனிஈழம்' என்பதோ, 'இனப்படுகொலை' என்பதோ 'ராஜபக்சே ஒரு போர்க்குற்றவாளி' என்பதோ வார்த்தை அளவில்கூட இடம்பெறவில்லை. இந்த அம்மையாரின் வெற்றிதான் போர்நிறுத்தத்தைக் கொண்டுவரும் என்று ஈழத் தமிழ் மக்களையும் புலிகளையும் நம்ப வைத்து அவர்களைப் படுகுழியில் தள்ளியிருக்கிறார்கள் புலி ஆதரவாளர்கள். எந்தப் புலிகளை இவர்கள் ஆதரித்தார்களோ, அந்தப் புலிகளையே காவு வாங்கிவிட்டது இவர்களுடைய பிழைப்புவாதத் தேர்தல் அரசியல்.

இவ்வளவுக்கும் பிறகு பார்ப்பன பாசிச ஜெயலலிதா தமிழக சட்டமன்றத்தில் ஈழப் பிரச்சினையில் மத்திய அரசிடம் வைக்கும் ''தனி ஈழம், போர்க்குற்றவாளி, சர்வதேச நீதி விசாரணை, பொருளாதாரத் தடை'' என்றெல்லாம் அடிக்கும் சவடால்கள், தீர்மானங்களை நம்பும்படி உலகத் தமிழர்களிடம் புலி ஆதரவாளர்கள் கூறுகிறார்கள்.

''ஈழத் தமிழருக்கு மிகப் பெரிய அளவு துரோகம் புரிந்தது யார்? கருணாநிதியா, ஜெயலலிதாவா?'' என்ற தலைப்பிலான இலாவணிதான் தமிழக அரசியலில் அடுத்த சில ஆண்டுகளுக்கு முதன்மை இடத்தைப் பெறப் போகிறது. ஈழத் தமிழினப் படுகொலை, பாசிச ராஜபக்சே கும்பலின் போர்க் குற்றங்களுக்கான விசாரணை, தண்டனை மற்றும் ஈழத் தமிழினத் தன்னுரிமை ஆகிய பிரச்சினைகள் மீதான கோரிக்கைகள், விவாதங்கள், போராட்டங்கள் எழும்போதெல்லாம் இந்தக் கேள்வி வருகின்றது.

2009 மே-யில் ஈழத் தமிழர் இன அழிப்புப் படுகொலைகள் நடந்தபோது ஆட்சியிலிருந்த கருணாநிதி என்ன செய்தார்? அப்படுகொலையை தி.மு.க., பங்கேற்கும் இந்திய அரசு வழிநடத்திய போதும் அதைக் கண்டு கொள்ளாமல், பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தவர்தானே கருணாநிதி. அந்தப் 'பாவச் செயல்' இந்த இலாவணியினூடே நம் கண் முன்பு வந்து நிற்கும். ராஜபக்சேவைப் போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும்; இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்; இந்திய இராணுவத்தை அனுப்பி ஈழத்தைத் தனிநாடாகப் பெற்றுத் தருவேன் என்றெல்லாம் ஜெயலலிதா என்னதான் நீலிக் கண்ணீர் வடித்தாலும், புலிகளின்துப்பாக்கிக் கலாச்சாரம், பயங்கரவாதம், பிரிவினைவாதம் என்ற பீதி கிளப்பியதும், ஈழத் தமிழ் அகதிகளை வேட்டையாடியதும், ராஜீவ் கொலைக் குற்றவாளி பிரபாகரனைப் பிடித்து வந்து தண்டிக்க வேண்டும் என்றும், போர் நடந்தால் மக்கள் கொல்லப்படுவது இயல்புதான் என்றும் ஈழத்தமிழர் மீது வெறுப்பை உமிழ்ந்த ஜெயலலிதாவின் குரூர - வக்கிர முகம் இந்த இலாவணியினூடே நம் கண் முன்பு தோன்றும்.

இந்த இலாவணியில் கருணாநிதி, ஜெயலலிதா தலைமையிலான இரு அணிகளில் அரசியல் ஆதாயம் அடிப்படையில் ஏதாவது ஒன்றில் அணி சேர்ந்து பக்க வாத்தியங்களை வாசிக்கவுள்ளவர்கள்தாம் நெடுமா, திருமா, சீமா, வைகோ, சுப.வீ., வீரமணி, இராமதாசு, பிற உதிரி இனவாத மற்றும் பெரியாரிய அமைப்பினர். பெ.ம., தியாகு போன்ற சிலர் 'கூச்சப்பட்டுக்கொண்டு' இந்த குரூப் போட்டோவில் (அல்லது அணிசேர்க்கைகளிலிருந்து) இரண்டடி விலகி நின்றாலும், இவர்களுக்கிடையிலான வித்தியாசம் வெறும் இரண்டடி மட்டும்தான்.

கருணாநிதியும் ஜெயலலிதாவும் ஈழத் தமிழினத்தின் எதிரிகளுடன் கைகோர்த்துக் கொண்டு நேரடியான துரோகம் செய்தார்கள்; ஆனால், இவர்கள் செய்தது, துரோகிகளுடன் கைகோர்த்துக் கொண்ட மறைமுகத் துரோகம். புலிகளின்தலைவர் பிரபாகரனிடம் இவர்கள் காட்டும் மாளாத விசுவாசம், தமிழீழத்துக்கானதணியாத தாகம், இவ்விரண்டுக்கான பெருங்கூச்சல் - இவை எதுவும் இவர்களின் மறைமுகத் துரோகத்தை மறைத்துவிட முடியாது.

பாசிசகாங்கிரசின்பிராந்திய மேலாதிக்க ஈழ எதிர்ப்பு, ராஜபக்சே கும்பலுடனான போர்க் குற்றங்களில் கூட்டு எல்லாம் தமிழக மக்களிடையே அம்பலப்பட்டு, அக்கட்சி தமிழ்நாட்டிலிருந்து துடைத்தெறியப்படும் நேரம் வந்துவிட்டது. மீண்டும் அக்கட்சி ஆட்சிக்கு வரவும் முடியாது. இனி அதனுடன் கூட்டுச் சேர்ந்தால், இங்கு ஒரு ஓட்டுக்கூடப் பெறவும் முடியாது. கருணாநிதி கட்சி ஆட்சியிழப்பதற்குக் காரணமாக அமைந்த 2-ஜி வழக்கில்கூட காங்கிரசின் முதன்மையான பங்கு அம்பலமாகி வருகின்றது. இந்த நிலையில் மூழ்கும் கப்பலில் இருந்து தப்பிக்கும் எலியைப் போல எகிறிக் குதித்து விட்டார், கருணாநிதி. 2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு காலம் இருப்பதால், காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து தான் செய்த குற்றங்களையும், முந்தைய ஆட்சிக் காலத்தின் ஊழல்களையும்விட தற்போதைய ஜெயலலிதா ஆட்சியின் தவறுகள்தாம் தமிழக மக்கள் முன் நிற்கும் என்பதால், எப்படியும் தனது குடும்ப ஆட்சியை மீட்டு விடலாம் — என்பது கருணாநிதியின் கணக்கு.

ஜெயலலிதாவின் கணக்கு வேறாக இருந்தாலும் நோக்கம் ஒன்றுதான். இனிமேலும் காங்கிரசு, பா.ஜ.க., எதனுடனும் தமிழ்நாட்டில் கூட்டுச் சேர்ந்து பயனில்லை; 40-உம் தனக்குதான்; கண்ணுக்கெட்டிய தூரத்தில் பிரதமர் பதவி என்ற கனவு நிறைவேறாவிட்டாலும், கணிசமான சீட்டுக்களைப் பெற்றுவிடலாம்; சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து தப்பிவிடவும், குவித்த சொத்துக்களைக் காத்துக் கொள்ளவும் தேர்தலுக்குப் பிறகு மத்தியில் யாருடனும் கூட்டுச்சேரலாம். ஈழச்சிக்கல் குறித்து சில தீர்மானங்களும், வாக்குறுதிகளும், சவடால்களும் அடித்தால் போதும்; தனது ஈழ எதிர்ப்பு நிலைப்பாடுகளால் தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள வெறுப்பை ஈழ ஆதரவாளர்கள் என்ற பெயரிலுள்ள தனது விசுவாசிகளே சரிக்கட்டிவிடுவார்கள்; நோட்டுகளையும், சீட்டுக்களையும் விட்டெறிந்தால் போதும், பழைய கசப்புகளை மறந்துவிட்டு தான் எட்டி உதைத்த இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும்கூடத் தன் காலில் வந்து விழுவார்கள் என்பது ஜெயாவின் கணக்கு.

தமிழகத்திலுள்ள புலி ஆதரவாளர்களும் தமது ஆதாயத்துக்காக இந்த இரு இலாவணிக்காரர்களில் ஏதாவது ஒருவரைத் தெரிவு செய்து அணிசேர்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால், அவர்கள் இந்திய ஆளும் வர்க்கங்களைச் சார்ந்து, இந்திய அரசு மற்றும் அதன் தேர்தல் அரசியல் கட்டமைப்புக்குள் மட்டுமே இயங்கக்கூடியவர்கள்; அதற்கு அப்பாற்பட்டுச் சிந்தித்து செயல்படக் கூடியவர்கள் அல்ல.

பின்வரும் உண்மையே இதை நிரூபிக்கிறது: ஈழப் பிரச்சினைக்காக இந்திய அரசை எதிர்த்துப் போராடுவதும்அதன்பொருட்டு பிற விடுதலைஇயக்கங்கள்மற்றும் மக்களின் ஆதரவைத் திரட்டுவதும் ஈழ விடுதலைப் போர்வெற்றி பெற அவசியமானது என்பதை எப்போதும் புலி ஆதரவாளர்கள் ஏற்றதில்லை. ஈழம் பிரிவதையோ, தெற்காசியப் பகுதியில் ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவதையோ இந்திய அரசும் இந்திய தேசியக் கட்சிகளும் ஒரு போதும் ஏற்கவில்லை; அது ஆளும் வர்க்கங்களின் நலன்களுக்கு எதிரானது; இது தான் சிங்கள இனவெறி அரசுடன் இந்திய அரசு கூட்டுச்

சேர்ந்து ஈழப்போரை நடத்தியதற்கு முதன்மைக் காரணம் என்பதை பலமுறை எடுத்துச் சொல்லியும் ஏற்றதில்லை.

இந்திரா-ராஜீவ், எம்.ஜி.ஆர்.,-ஜெயலலிதா, வாஜ்பாய் - அத்வானியையும் இந்திய அரசையும் இராணுவத்தையும் புலி ஆதரவாளர்கள் நம்பினார்கள். புலி பிரபாகரனே இம்மாதிரியான அணுகுமுறையைத்தான் கொண்டிருந்தார். முள்ளிவாய்க்காலில் முற்றான தோல்வியைச் சந்திக்கும் வரை தெற்கு ஆசியாவில் இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கு சிங்கள அரசைவிடப் புலிகள் உறுதியான ஆதரவளிப்போம் என்று நட்புக்கரம் நீட்டினார். நீட்டிய அந்தக் கரத்தை மடக்காமல் இருந்ததுதான் பிரபாகரனின் அரசுதந்திர ஆளுமை என்று இங்குள்ள புலி ஆதரவாளர்கள் புகழ்ந்தார்கள். அப்போதும், இப்போதும் இந்திய மேலாதிக்க எதிர்ப்பு, இந்திய தேசிய இனங்களின் தன்னுரிமை என்ற அரசியல் முழக்கங்களின் கீழ் தமிழ் மக்களை அணிதிரட்ட முயற்சிக்காமல், ஈழத் தமிழினப் படுகொலை தமிழக மக்களிடம் தோற்றுவித்த அனுதாப உணர்வை, அப்படியே குறுக்கு வழியில் இனவுணர்வாக உருமாற்றிவிடலாமென ஈழ ஆதரவாளர்கள் முயல்கிறார்கள். இன்னமும் ஈழத்தின் எதிரிகளையும், துரோகிகளையும் வைத்துத்தான் காரியங்களைச் சாதிக்கமுடியும் என்று நம்புகிறார்கள்.

ஈழத் துரோகிகளும்பிழைப்புவாதிகளும்கூட இப்போது தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மாணவர் எழுச்சிக்குள் முகம் புதைத்துக் கொண்டு எல்லாமும் புதிதாக நடப்பதைப் போல மீண்டும் அதே நாடகத்தை நடத்துகிறார்கள்.

ஆனால் சில மாணவர் குழுக்களின் தலைமை புலிகளும் புலி ஆதரவாளர்களும் செய்த அதே வகையிலான தவறுகளைச் செய்கின்றனர். இப்போது முன்வைக்கப்படும் இரண்டு கோரிக்கைகளை எவ்வாறு, எந்த வழிகளில் நிறைவேற்ற முடியும் என்பதை ஆழமாகப் பார்க்க மறுக்கின்றனர். இரண்டு கோரிக்கைகளில் ஒன்றான ''பொது வாக்கெடுப்பு'' என்பதைத் தமது குறுங்குழுவாத அகநிலைப் பார்வையைத் திணித்தும் திரித்தும் வியாக்கியானம் செய்து மாற்றி அமைத்துக் கொண்டு ஈழ ஆதரவு சக்திகளைப் பிளவுபடுத்தும் முயற்சிகளைச் செய்கிறார்கள். அவர்களும் புலி விசுவாசிகளைப் போலவே ''பொது வாக்கெடுப்பு'' என்ற முழக்கத்தை ''தனித் தமிழீழத்துக்கான வாக்கெடுப்பு'' என்பதாக மாற்றி அமைத்து ஈழ ஆதரவாளர்களைப் பிளவுபடுத்தவும் செய்கிறார்கள்.

''பொது வாக்கெடுப்பு'' என்பது ஒடுக்கப்படும் இனம் தனது சுயநிர்ணய உரிமையை (தன்னுரிமையை) நிறைவேற்றிக்கொள்ளும் செய்முறை. ஒடுக்கப்படும் இனம் (இங்கே ஈழத்தமிழினம்) தனது அரசியல் வாழ்வுரிமையைத்தானே முடிவுசெய்துகொள்ளும் உரிமைதான் தன்னுரிமை. அதாவது ஒடுக்கப்படும் இனம், ஒடுக்கும் இனத்தோடு (இங்கே சிங்கள இனத்தோடு) சேர்ந்து ஒரே அரசின் கீழ் வாழ விரும்புகிறதா அல்லது தனித்ததொரு அரசு (தனித் தமிழீழ அரசு) அமைத்துக்கொள்ள விரும்புகிறதா என்பதை முடிவு செய்வதற்காக ஒடுக்கப்படும் இன மக்களின் கருத்தறியும் பொது வாக்கெடுப்பு. மேலும் சொல்வதானால், ஒடுக்கப்படும் இன மக்களுக்குள்ளும் (ஈழத் தமிழ் மக்களுக்குள்ளும்) மாறுபட்ட கருத்துக்கள் இருப்பின், பெரும்பான்மையினர் எதை ஆதரிக்கின்றனர் என்பதைத் தீர்மானிப்பதற்கான வாக்கெடுப்பு.

ஆகவே, தன்னுரிமை என்பது ஒடுக்கப்படும் இனத்துக்கு தனியரசு அமைத்துக்கொள்ளும் உரிமையை உறுதி செய்வதாகும். அது ஒரு ஜனநாயக உரிமை என்பதால், ஒடுக்கப்படும் இனத்துக்குள்ளாகவே தனியரசு அரசு அமைப்பதற்கு மாற்றுக் கருத்து இருப்பின், அதாவது தனியரசு அரசு அமைப்பதற்கு உடன்படாதவர்கள் அதைத் சொல்லவும், அதுவே பெரும்பான்மைக் கருத்தாக இருந்தால் தனியரசு அமைப்பதைத் தடுப்பதற்கும் உரிமையுண்டு. இவ்வாறு எந்தவொரு முடிவையும் ஒடுக்கப்படும் மக்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கவில்லை. ஒடுக்கப்படும் மக்கள் தாமேவந்து முழு ஜனநாயக உரிமையுடன் தீர்மானித்துக் கொள்வதற்குத்தான் பொது வாக்கெடுப்பு. ஈழத் தமிழ் இனத்துக்குள்ள இந்த உரிமையைத்தான் ''ஈழத்தமிழர்க்கு தன்னுரிமை'' என்று சொல்கிறோம்.



பாலச்சந்திரன் படுகொலையைக் கண்டித்து வை.கோ., நெடுமாறன் தலைமையில் சென்னை - உயர்நீதிமன்றம் அருகே நடந்த ஆர்ப்பாட்டம்: பிழைப்புவாதக் கும்பலின் பெருங்கூச்சல்.

ஆனால், ''ஈழத் தமிழர்க்கு தன்னுரிமை'' என்பது ''மழுப்புவது, தனித்தமிழீழத்தை மறுப்பது, எதிர்ப்பது; அதை மூடிமறைக்கும் தந்திரம்'' என்று சொல்லிக் கொண்டு சில மாணவர் குழுக்கள், ''பொது வாக்கெடுப்பு'' என்ற முழக்கத்தை ''தனித் தமிழீழத்துக்கான வாக்கெடுப்பு'' என்பதாக மாற்றியும், குறுக்கியும் வியாக்கியானம் செய்கின்றனர். ''பொது வாக்கெடுப்பு'' என்றமுழக்கத்தை இவ்வாறு திரிப்பது, ''பொது வாக்கெடுப்பு''க்கான உரிமையைப் பெறுவதற்கு முன்பே

மாற்றுக் கருத்துக்கான உரிமையை மறுக்கும் சர்வாதிகார மாகும். இம்மாதிரியான போக்குதான் துரோகம் ஏதும் செய்யாமலேயே தமிழீழத்துக்காக உறுதியுடன் போராடிய ஈழத்தமிழர்கள் பலரையும், இசுலாமியர்களை யும் புலிகள் படுகொலை செய்வதற்கு அடிப்படையாக அமைந்தது. புலிகள் எத்தனை ஈழத் தமிழர்களை கொன்றுபோட்டார்கள், இசுலாமியர்களைக் கொன்று போட்டார்கள், எத்தனை ஈழத் தமிழர்களையும் இசுலா மியர்களையும் அகதிகளாக்கினர்கள்? இவர்களும்தானே புலிகளுடன் தமிழீழத்தில் சேர்ந்து வாழமுடியாத நிலை உருவாக்கப்பட்டது. இவர்களும் தமது கருத்துக்களைச் சொல்லவும்தானே ''பொது வாக்கெடுப்பு''? சிங்களப் பேரினவாத ஒடுககுமுறை மற்றும் இனப்படுகொலை மட்டுமல்ல, மேற்கூறியவை உள்ளிட்ட அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து ஈழத்தமிழ் மக்கள் தமது கருத்தினை சொல்வதற்குத்தானே பொதுவாக்கெடுப்பு?

ஆனால் தனித் தமிழீழத்தை ஏற்கிறீர்களா, இல்லையா? இப்போதே சொல்லுங்கள், சொல்லாவிட் டால் ஈழத் துரோகிகளாவீர்கள் என்று கையை முறுக்கிக் கருத்துத் திணிப்பு செய்வதன் பொருள் என்ன? தனித் தமிழீழந்தான் ஒரே முடிவு என்றால் அப்புறம் எதற்குப் ''பொது வாக்கெடுப்பு''?

''பொது வாக்கெடுப்பு'' உரிமையைப் பெற்ற பிறகு நடைமுறைக்கு வரக்கூடியதே தன்னுரிமை. வாக்கெடுப் புக்கு முன்னரே முடிவைச் சொல்லவேண்டுமென்றால் அப்புறம் எதற்கு அக்கோரிக்கை, போராட்டம் எல்லாம்? அதுவும் இந்த உரிமை உலகத் தமிழர் அனைவருக்கு மான உரிமை அல்ல. ஒடுக்கப்படும் ஈழத் தமிழ் இனத் துக்குள்ள இந்த உரிமையை, புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் அகதிகளாகவோ, குடியுரிமை பெற்றவர் களாகவோ வாழ்கின்ற மக்கள், தம் எதிர்காலம் குறித்து முடிவு செய்வதற்கான உரிமையை இங்குள்ள தமிழர் கள் எப்படித் தம் கையில் எடுத்துக் கொள்ள முடியும்? அந்த உரிமையை யார் கொடுத்தது? இதற்கும் இந்திய பெரியண்ணன்தனத்துக்கும் என்ன வேறுபாடு?

இராஜபக்சே மீது போர்க் குற்ற விசாரணை, ஈழத்தில் பொது வாக்கொடுப்பு ஆகிய இரண்டையும் நிறை வேற்றுவதில் பாரிய அக்கறை கொண்டவர்கள் பின் வரும் உண்மைகளில் கவனம் செலுத்தவேண்டும்: இவ் விரண்டு கோரிக்கைகளும் நிறைவேற வேண்டு மானால்,

ஒன்று, சர்வதேச சமூகம் எனப்படும் உலக நாடுகள் இலங்கைக்கு வெளியிலிருந்து சிங்கள இனவெறி, கொலைவெறி பாசிச ராஜபக்சே கும்பலின் அதிகாரக் கோரப்பிடியிலிருந்து இலங்கையையும் ஈழத் தமிழர் களையும் மீட்கவேண்டும்; ஈழத்தில் ஒரு பொது வாக் கெடுப்பை ஏற்கும் ஜனநாயக அரசை இலங்கையில் நிறுவி இதைச் செய்ய வேண்டும்.

அல்லது,

உள்நாட்டிலேயே சிங்கள இனவெறி, கொலைவெறி பாசிச ராஜபக்சே கும்பலைக் கொன்றொழிக்க வேண்டும்; அக்கும்பலைச் சிறைப் பிடிக்கவேண்டும். ஒருவேளை இது நிறைவேறினாலும், ஈழத் தமிழினத் தின் தன்னுரிமையையும் அதன் அடிப்படையிலான ஒரு பொது வாக்கெடுப்பையும் ஏற்கும் ஜனநாயக அரசு இலங் கையில் அமைய வேண்டும். இல்லையென்றால், அவ் வாறான அரசு அமைவதற்கான புரட்சி இலங்கையில் நடைபெறவேண்டும்.

ஆனால், போர்க் குற்றங்களில் பங்காளியான இந்தியா எத்தகைய நிலைமையிலும் இவ்விரண்டு கோரிக்கை களையும் ஏற்கப்போவதில்லை. புலிகளை ஒழித் துக்கட்டுவதென்று 2006-இல் கூடிப்பேசி, முடி வெடுத்து, ஈழப்போரில் ராஜபக்சேவுக்குத் துணை நின்ற அமெரிக்கா தலைமையிலான 20 உலக நாடுகளும் இவற்றை ஏற்கப்போவதில்லை.

ஆக, இராஜபக்சே மீது போர்க் குற்றவாளி, ஈழத்தில் பொது வாக்கொடுப்பு - ஆகிய இரண்டையும் நிறை வேண்டுமானால், இலங்கையில் ஒரு மாபெரும் அரசி யல் மாற்றம் ஏற்படவேண்டும் என்பது தவிர்க்கவியலாத அவசியம்.

அதை எப்படிச் சாதிப்பது என்பது ஈழத் தமிழர்களின் உடனடி, நீண்டகாலக் கடமையாக இருக்கவேண்டும். சிங்கள இனவெறி, பௌத்த மதவெறி பாசிச ராஜபக்சே கும்பலுக்கு எதிரான ஒரு ஜனநாயக ஐக்கிய முன்னணி யைக் கட்டுவது முதன்மையான பணியாகும். பாசிச ராஜ பக்சே கும்பல் ஈழத் தமிழர்கள் மீது நடத்திய இனப்படு கொலை மிகக்கொடூரமான போர்க் குற்றம். அதோடு ஒப் பிட முடியாதெனினும், சிங்கள ஜனநாயக சக்திகளுக் கெதிரான பாசிச வெள்ளைவேன் ஆள்கடத்தல்களும், படுகொலைகளும், அவசரநிலை-தடுப்புக்காவல் கைது களும் ஒடுக்கு முறைகளும் பெருமளவு நடந்து கொண்டு தானிருக்கின்றன. ஈழத் தமிழர்கள் மீது மட்டுமல்ல, சிங்கள ஜனநாயக சக்திகள் மீதுமான மனித உரிமை மீறல் களுக்காகவும் பாசிச ராஜபக்சே கும்பல் ஐ.நா. அவை யில் குற்றஞ்சாட்டப்படுகிறது. சிங்கள ஜனநாயக சக்தி களில் கணிசமான பேர் ராஜபக்சே அரசின் கும்பலாட்சி, இசுலாமிய எதிர்ப்பு பவுத்த வெறி, ஈழத்தமிழர் மீதான இராணுவக் கொடுங்கோன்மை ஆகியவற்றை வெறுக் கிறார்கள், எதிர்க்கிறார்கள், அத்தகைய சக்திகளுடன் ஒரு ஐக்கிய முன்னணி சாத்தியமே இல்லை என்று கத வடைத்துக் கொள்வது சரியான அரசியல் அணுகு முறையே கிடையாது.

இலங்கைத் தீவில் தற்போது காட்டப்படும் ஈழத்தின் வரைபடத்தைப் பார்த்தாலே பாமரனுக்கும் புரியும்! இவ் வளவு நீண்ட எல்லையைக் கொண்ட ஈழம் தனித்திருந் தால்கூட, போரும் பகையும் இனப் படுகொலைகளும் இல்லாமல் ஈழத் தமிழர்கள் நிரந்தரமான நிம்மதியோடு வாழவேண்டுமானால் பின்வரும் ஒரு நிபந்தனை நிறை வேற்றப்பட வேண்டும். ஈழத் தமிழினத்தின் தன்னு ரிமையை ஏற்கக்கூடிய ஜனநாயக அரசு அமைப்பு இலங்கையில் ஏற்படுத்தப்பட வேண்டும். சிங்கள இன வெறி, கொலைவெறி பாசிச ராஜபக்சே கும்பலின் அதி காரப்பிடியிலிருந்து சிங்களமும் விடுபடவேண்டும்.



யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் சிங்கள இராணுவத்தால் தாக்கப்பட்டதைக் கண்டித்து, கண்டி பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் (இடது); மற்றும் இன ஒற்றுமையை வலியுறுத்தி கிழக்கு இலங்கைப் பகுதியில் நடந்த ஊர்வலம்.

ஈழத் தமிழினத்துக்கெதிராக அது இழைத்த குற்றங்களுக்காக ''பாவமன்னிப்பும் பரிகாரமும்'' தேடும் நிலைக்குத் தள்ளப்பட வேண்டும்.

இது சாத்தியமா? யூத மக்கள் மீது தீராத பகைகொண்டு குரூரமான வதைகளும் இனப் படுகொலைகளும் புரிந்தான், நாஜி இட்லர். அவனது போர்வெறி, அதிகாரப் பிடியிலிருந்து விடுபட்டு யூத இனத்துக்கெதிராகத் தாம் இழைத்த குற்றங்களுக்காக ''பாவ மன்னிப்பும் பரிகாரமும்'' தேடும் நிலைக்கு ஜெர்மானியர்கள் தள்ளப்பட்டனர். பாசிசம் போரில் தோற்கடிக்கப்பட்டதும், நூரம்பர்க் விசாரணையும், தண்டனைகளும், சர்வதேசப் பொதுக் கருத்தின் மீது சோசலிசமும், கம்யூனிச சித்தாந்தமும் செலுத்திய செல்வாக்கும் இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியது. அம்மாதிரியான சர்வதேச நிலைமை இப்போது இல்லையாதலால், ராஜபக்சே கும்பலைத் தூக்கியெறியும் உள்நாட்டுப் புரட்சிதான் இலங்கையில் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த வல்லது. இதுதான் சாத்தியமானது.

இனப் படுகொலை நிகழ்ந்துள்ள நிலையில், சிங்கள இனவெறி தலைவிரித்தாடும் நிலையில் இத்தகையதொரு தீர்வே கோமாளித்தனமானது என்று புலி ஆதரவாளர்கள் கேலி பேசலாம். முள்ளிவாய்க்கால் படுகொலை முடிந்து தடயங்களை அழித்து முடிக்கும்வரை ராஜபக்சேவுக்கு வழிகாட்டி இயக்கிய இந்தியா மற்றும் சர்வதேசம் என்றழைக்கப்படும் அமெரிக்க - ஐரோப்பிய ஏகாதிபத்திய நாட்டாமைகளிடம் கெஞ்சுவதும், அவர்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தி விடலாம் என்று கனவு காண்பதும்தான் கோமாளித்தனமானது. புலி ஆதரவாளர்கள் இந்திய ஆளும் வர்க்கங்களுக்கும், கட்சிகளுக்கும் சலாம் போட்டும், மனுக்கொடுத்தும், தேர்தல் வேலை பார்த்தும், இவர்கள் மீது நம்பிக்கை வைக்குமாறு ஈழத்தமிழ் மக்களை இழுத்து விட்டும் 30 ஆண்டுகளை அழித்தார்கள். கடைசியாக முள்ளிவாய்க்காலில் பரிதாபத்துக்குரிய அந்த மக்கள் படுகொலை செய்யப்பட்ட பின்னரும், கொலையுண்ட அந்த உடல்களை வைத்துக் கொலையாளிகளே அரசியல் ஆதாயம் தேடுவதற்கு வழிவகை செய்கிறார்கள். இது கோமாளித்தனமானதல்ல, வக்கிரமானது.

சிங்களப் பேரினவாதமும் இனவெறியும்தான் ஈழத் தமிழ் மக்களின் துயரத்துக்கு அடிப்படைக் காரணமென்றாலும், சிங்களருக்கும் தமிழருக்கும் இடையிலான இன்றைய பகை நிலை நிரந்தரமானதென்றும், 200-க்கும் மேற்பட்ட அரச உயர்பதவிகளை ராஜபக்சே குடும்பமே கைப்பற்றிக்கொண்டு சிங்கள மக்களுக்கே எதிராக அது இழைத்துவரும் பாசிச பயங்கரவாதக் குற்றங்களும், இலங்கையில் அதிகரித்து வரும் அரசியல், பொருளாதார நெருக்கடிகளும் இந்தப் பகை நிலையை மாற்றாது என்றும் கருதிக் கொண்டு ஈழச் சிக்கலுக்குத் தீர்வைத் தேடக்கூடாது. அவ்வாறான தீர்வு, எளிமையானதாகவும் உடனடியானதாகவும் தோன்றினாலும் கற்பனையானது. இத்தீர்வும் வழிமுறையும் புலிகளையும் ஈழத்தமிழர்களையும் முள்ளிவாய்க்காலுக்குக் கொண்டுபோய் முடித்தது.

•••

இந்தப் பார்வை தனித் தமிழீழத்தை மறுப்பது என்றும் தமிழீழத்துக்கு எதிரானதென்றும் புலி ஆதரவாளர்களால் அவதூறுக்குள்ளாக்கப்படும் என்பது எமக்கு நன்கு தெரியும். எமது இந்தத் தீர்வு ஈழத்தமிழர்தன்னுரிமையை நிபந்தனையாகக் கொண்டதென்பதை மறந்துவிடக் கூடாது. ஈழத்தின் மூன்றில் இரண்டு பகுதியை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டு, 40,000 சிங்கள இராணுவத்தினரை யாழ்க் கோட்டையில் சூழ்ந்து கொண்டநிலையிலும் பிரபாகரன் தனித் தமிழீழத்தைப் பிரகடனம் செய்யவில்லை! பிரபாகரனின் அரசியல் குரு ஆண்டன் பாலசிங்கம் தனித் தமிழீழம் அல்ல, சுயாட்சிதான் எமது நோக்கம் என்று சொன்ன காலமும் உண்டு! ''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'' என்று சொன்னவர்கள், துப்பாக்கிகளை மௌனித்து இனி அரசியல் போராட்டம்தான் என்று அறிவிக்கும் நிலையும் வந்தது. ஆகவே, எல்லாக் காலத்திலும் எல்லா நிலையிலும் ஒரே தீர்வு என்பது பகுத்தறிவுக்குப் பொருந்தாதது! •



## ஹியுகோ சாவேஸ் (1954-2013):

# அமெரிக்காவை மண்டியிட வைத்த வெனிசுலாவின் வீரப்புதல்வன்!

**மக்கள் சக்தியின் முன், அமெரிக்க மேலாதிக்கம் காகிதப்புலிதான் என்பதைத் தனது ஆட்சி நெடுகிலும் நிரூபித்துக் காட்டியவர் சாவேஸ்.**

வெனிசுலாவின் அதிபர் ஹியுகோ சாவேஸ் மார்ச் 5-ஆம் தேதியன்று மறைந்தார். அவருக்கு வயது 58. ‘‘யோ ஸாய் சாவேஸ்’’ (நானே சாவேஸ்) என்று கண்களில் நீர் வழிய முழங்கியபடியே இருபது இலட்சம் மக்கள் தங்களுடைய தேசத்தின் வீரப்புதல்வனது உடலை ஏந்திச் சென்றனர். ‘‘வாழ்வதும் மரிப்பதும் வேறுவேறல்ல. வாழ்தலின் மரித்தல் சிறந்ததாகவும் இருக்கலாம் - வாழும் காலத்தில் செய்யவேண்டியதை ஒருவன் செய்திருந்தால்’’ என்று கூறினான் கியூபாவின் மறைந்த விடுதலைப் போராளியும் கவிஞனுமான ஜோஸ் மார்ட்டி. செய்யவேண்டியதைச் செய்தவர்தான் சாவேஸ் என்ற போதிலும், அரியதொரு தலைவனைத் திடீரென்று இழந்த அதிர்ச்சியில் தவிக்கின்றனர் வெனிசுலா மக்கள்.

‘‘அவர் மீது புற்றுநோய் ஏவப்பட்டிருக்கிறது என்றும், அந்தச் சதியை விரைவில் கண்டுபிடிப்போம்’’ என்றும் கூறியிருக்கிறார் கூறுகிறார், சாவேஸிற்குப் பின் பொறுப்பேற்றிருக்கும் நிக்கோலஸ் மாதுரோ. ‘‘விரைவிலேயே இந்த மர்மம் வெளியே வரும்’’ என்கிறார் பொலிவிய அதிபர் இவா மொரேல்ஸ். தென் அமெரிக்க கண்டத்தில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை எதிர்த்து நிற்கும் தலைவர்கள் 6பேர் அடுத்தடுத்து புற்றுநோய்க்கு ஆட்பட்டிருக்கின்றனர். உணவு, பரிசுப் பொருட்கள், உள்ளாடைகள் போன்றவற்றை இரகசியமாக கதிரியக்கத்துக்கு ஆளாக்குவதன் மூலம், தமது அரசியல் எதிர்களைக் கொலை செய்வதாக சி.ஐ.ஏ-வைப் பலரும் குற்றம் சாட்டுகின்றனர். பிடல் காஸ்டிரோவைக் கொல்வதற்குப் பல வழிகளில் முயன்று தோற்ற இழிபுகழ் பெற்றது தான் சி.ஐ.ஏ. என்பதால் இந்தக் குற்றச்சாட்டு அலட்சியப்படுத்தக் கூடியது அல்ல.

சாவேஸின் மீது கொலைவெறி கொள்வதற்கான எல்லா முகாந்திரங்களும் அமெரிக்காவுக்கு இருந்தன. அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பின் வலிமையான குறியீடாக சாவேஸ் இருந்தார். 2001-இல் இராக்கிற்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதித்து, சதாமுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று உலக நாடுகள் அனைத்தையும் அமெரிக்கா மிரட்டி வைத்திருந்தபோது, சாவேஸ் இராக் சென்றார். புஷ் கண்டனம் தெரிவித்தபோது, ‘‘வெனிசூலா இறையாண்மை கொண்ட ஒரு நாடு என்பதை புஷ்ஷுக்கு நினைவுபடுத்துகிறேன்’’ என்று அலட்சியமாக பதிலளித்தார். ஆப்கான், இராக் ஆக்கிரமிப்புகளை வெளிப்படையாக எதிர்த்துக் குரல் கொடுத்தார். 2008-இல் காசாவின் மீது இசுரேல் படையெடுத்த மறுகணமே, தூதரக உறவைத் துண்டித்துக் கொண்டார்.

2006-ஆம் ஆண்டு ஐ.நா.-வில் உரையாற்றிய சாவேஸ், ‘‘நேற்று சாத்தான் இங்கே வந்திருந்தது. இதே இடத்தில், இதோ நான் நிற்கிறேனே இதே இடத்தில் நின்றிருந்தது. கந்தக நெடிகூட இன்னும் போகவில்லை’’ என்று ஐ.நா.-வில் முந்தைய நாள் உரையாற்றிச் சென்றிருந்த போர்வெறியன் ஜார்ஜ் புஷ்ஷை எள்ளி நகையாடினார். அது அவை நாகரிகத்தில் பொருந்திய ராஜ

தமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அதிபர் ஹியுகோ சாவேஸின் மரணச் செய்தியைக் கேள்வியுற்றுக் கதறியழும் வெனிசுலா மக்கள்.



தந்திர மொழியன்று. ஆனால், அமெரிக்காவின் நடத்தைக்குப் பொருந்திய மொழி. ஆகவேதான் சங்கடத்தில் நெளிந்தாலும் அவையோரால் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

1954-இல் மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்து பிழைப்புக்காக இராணுவத்தில் சேர்ந்தவர் சாவேஸ். இராணுவத்தில் சேர்ந்தவுடன், செங்கொடி இயக்கம் என்றழைக்கப்பட்ட மாவோயிஸ்டு கொரில்லாக்களை ஒடுக்குவதற்கான படைப்பிரிவுக்குத்தான் அனுப்பப்பட்டார். ஏழைகளுக்காகப் போரிட்ட மாவோயிஸ்டுகள் மீது அரசு ஏவிய சித்திரவதைகளும் படுகொலைகளும் அவரைச் சிந்திக்கத் தூண்டின. 1989-இல் சர்வதேச நாணய நிதியத்தின் ஆணைக்கேற்ப வெனிசுலாவில் அதிரடியாக அமல்படுத்தப்பட்ட மானியவெட்டுகள் மற்றும் தனியார்மய நடவடிக்கைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த மக்கள் போராட்டம் ஒடுக்கப்பட்டு, நாடு முழுவதும் 3000 பேர் கொல்லப்பட்டனர்.

1973-இல் சிலியில் நிகழ்ந்த ஆட்சிக்கவிழ்ப்பு, அலண்டே கொலை, இலத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்திலும் அமெரிக்காவால் திணிக்கப்பட்ட இராணுவ சர்வாதிகார ஆட்சிகள் என்ற பின்புலத்தில் தென் அமெரிக்கக் கண்டம் முழுவதும், அமெரிக்க எதிர்ப்பும் சோசலிசநாட்டமும் கொண்ட பலவிதமான ஆயுதக் குழுக்கள் தோன்றியிருந்தன. அத்தகைய குழுவொன்றை இராணுவத்திற்குள் சாவேஸும் உருவாக்கியிருந்தார். 1992-இல் ஒரு ஆட்சிக்கவிழ்ப்பை நடத்த முயன்று தோற்றார். ‘‘தோழர்களே, துரதிருஷ்டவசமாக எங்கள் இலட்சியத்தில் வெற்றி பெற இயலவில்லை - இப்போதைக்கு’’ என்று தொலைக்காட்சியில் பேசினார் சாவேஸ். ‘‘இப்போதைக்கு’’ என்ற அந்த ஒரு சொல் மக்கள் நினைவில் பதிந்திருந்தது. சிறைத்தண்டனை முடிந்து வெளியே வந்த பின்னர், 1998-ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் போட்டியிட்ட சாவேஸ் வெற்றி பெற்றார்.

பல இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட சாவேஸின் இறுதி ஊர்வலம்.



வெனிசுலாவின் எண்ணெய் வளம் முழுவதையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அமெரிக்காவின் எக்சான் மொபில் உள்ளிட்ட நிறுவனங்கள் தம் இலாபத்தில் ஒரு விழுக்காட்டை மட்டுமே ராயல்டியாக கொடுத்து வந்ததை 13 சதவீதமாக உயர்த்திச் சட்டமியற்றியவுடன், சாவேஸுக்கு எதிரான இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை அமெரிக்கா அரங்கேற்றியது. ஆனால், உலகம் முழுவதும் பல நூறு ஆட்சிக்கவிழ்ப்புகளை நடத்திய அனுபவம் கொண்ட அமெரிக்கா, வெனிசுலாவில் மண்ணைக் கவ்வியது. பல்லாயிரக்கணக்கான மக்கள், குறிப்பாகப் பெண்கள் இராணுவத்தை முற்றுகையிட்டுப் பணிய வைத்தனர். 28 மணி நேரத்தில் ஆட்சிக்கவிழ்ப்பு தோற்றது. சாவேஸ் மீண்டும் பதவியில் அமர்ந்தார். தமக்குச் சொந்தமான எண்ணெய் நிறுவனங்களில் வேலை நிறுத்தத்தை அமெரிக்க முதலாளிகளே தூண்டிவிட்டனர். பொருளாதாரம் நிலைகுலைந்தது. உள்நாட்டிலேயே மக்களுக்கு எரிபொருள் இல்லை. ‘‘முதலாளிகளிடம் பணியாதே சாவேஸ். நாங்கள் தாக்குப்பிடிக்கிறோம்’’ என்று கூறி அத்தனை துன்பங்களையும் சகித்துக் கொண்டார்கள் மக்கள்.

நாட்டின் எண்ணெய் வளம் தந்த வருவாயை மக்கள் நலத்துக்குப் பயன்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியதுதான் சாவேஸின் வெற்றிக்கு காரணம். 2005-இலேயே நூறு விழுக்காடு கல்வியறிவு சாதிக்கப்பட்டுவிட்டது. மக்களுக்கு உணவு உத்திரவாதம் செய்யப்பட்டிருக்கிறது. சுமார் 3 இலட்சம் பேருக்கு நிலம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான கூட்டுறவுக் கழகங்கள் எல்லாத் துறைகளிலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. கியூபாவிலிருந்து சுமார் 25,000 மருத்துவர்கள் பணியிலமர்த்தப்பட்டு மக்களுக்கு தரமான மருத்துவம் இலவசமாக வழங்கப்படுகிறது. முதல் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரையில் கல்வி இலவசமாக வழங்கப்படுகிறது. வீடற்றவர்களுக்கு 5 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. வெனிசுலாவில் வீடற்றவர்களே இல்லை என்று கூறும் விதத்தில், அடுத்த 6 ஆண்டுகளில் மேலும் 20 இலட்சம் வீடுகள் கட்டப்படுகின்றன. மற்ற உற்பத்தி சார்ந்த உழைப்புகளைப் போலவே பெண்களின் குடும்ப உழைப்புக்கும் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று கூறி, குடும்ப உழைப்பில் ஈடுபடும் பெண்களுக்கு அரசு ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.





இந்தியா உள்ளிட்ட பல்வேறு ஏழை நாடுகளில் மருத்துவமும், பொது சுகாதாரமும் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு வரும் வேளையில், சாவேஸ் அச்சேவைகளைத் தேசியமயமாக்கினார். கியூபா நாட்டைச் சேர்ந்த மருத்துவர்களால் பரிசோதிக்கப்படும் வெனிசுலாவின் ஏழைக் குழந்தைகள். (கோப்புப் படம்.)

சாவேஸின் திட்டங்கள் வெனிசுலாவின் கஜானாவைக் காலியாக்கிவிடும் என்றும் பொருளாதார வீழ்ச்சிக்கு வழி வகுக்கும் என்றும் முதலாளித்துவ ஊடகங்கள் கடந்த பத்தாண்டுகளாகக் கூக்குரலிட்டுப் பார்த்தன. வெனிசுலாவின் பொருளாதாரம் கடந்த பத்து ஆண்டுகளில் சராசரியாக 5.8 % வளர்ச்சியைக் கண்டது. மானியவெட்டு, மக்கள் மீது வரிவிதிப்பை அதிகப்படுத்துவது, தனியார்மயம் போன்ற வழிமுறைகள் மூலம்தான் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும் என்ற சர்வதேச நிதி நிறுவனங்களின் தீர்வை சாவேஸ் பொய்ப்பித்தார். இதன் காரணமாக வெனிசுலாவின் முன்னுதாரணத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற குரல்கள் நெருக்கடியில் சிக்கியிருக்கும் ஐரோப்பிய நாடுகளில் எழத்தொடங்கின.

ஏழை, எளிய உழைக்கும் மக்கள் மீது இயல்பிலேயே அவரிடம் ததும்பிய நேசத்தையும், உண்மையான அக்கறையையும் அவரது எதிரிகள்கூட மறுக்க முடிந்ததில்லை. சாவேஸ் மக்களுடன் நேருக்குநேர் உரையாடி, அவர்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் ''ஹலோ பிரசிடென்ட்'' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி இதற்கு சான்றாக அமைந்தது.

கல்வி, மருத்துவம் போன்றவற்றை மக்களின் அடிப்படை உரிமைகளாக சாவேஸ் மாற்றியதை எதிர்க்கவும் முடியாமல், இத்துறைகளிலிருந்து தனியார் முதலாளிகள் விரட்டப்பட்டதை ஏற்கவும் முடியாமல் தவித்தனர் அமெரிக்க சார்பு முதலாளிகள், ''மாதம் 25,000 ரூபாய் (450 டாலர்) தருகிறோம். நீங்கள் விரும்பிய வண்ணம் தரமான சேவையை விலை கொடுத்து வாங்கிக்கொள்ளலாம்'' என்று 'உங்கள் பணம் உங்களை கையில்' திட்டத்தைப் போலவே தனியார்மயத்தின் தந்திரத்தை கடைவிரித்துப் பார்த்தனர். மக்கள் மசியவில்லை.

எண்ணெய், மின்சாரம், தொலைபேசி, சிமென்டு உற்பத்தி உள்ளிட்ட கேந்திரத் தொழில்துறைகளை பொதுச் சொத்தாக்குவது, மற்ற தென் அமெரிக்க நாடுகள் மற்றும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுடனான வணிகத்துக்கு முதன்மை முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் வணிகத்துக்கு அமெரிக்க-ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களைச் சார்ந்திருப்பதிலிருந்து விடுவிப்பது, தென் அமெரிக்காவைத் தனது சுதந்திர வர்த்தக வலையத்துக்குள் கொண்டு வர முயன்ற அமெரிக்காவின் சதியை முறியடித்து, தென் அமெரிக்கக் கண்டத்தின் நாடுகளுக்கான தனி வர்த்தக வலையத்தை உருவாக்கியது, உலக வங்கிக்குப் போட்டியாக தென் அமெரிக்க நாடுகளுக்கான ஒரு பொது வங்கியை உருவாக்கியது, தேசிய எல்லைகளைக் கடந்து தென் அமெரிக்கக் கண்டம் என்ற முறையில் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிராக நாடுகளை ஒன்றுபடுத்தியது, வணிகம்-இலாபம் என்ற முதலாளித்துவ அளவுகோல்களை நிராகரித்து வெனிசுலா

அமெரிக்க ஆதரவுடன் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்து வெனிசுலா மக்கள் கார்கஸ் நகரில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம் (இடது); வெனிசுலா இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருந்த சாவேஸ், மக்களின் போராட்டத்தையடுத்து விடுதலை செய்யப்படுகிறார். (கோப்புப் படம்)





வெனிசுலாவின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சாவேஸின் உற்ற தோழர் நிக்கோலஸ் மாதுரோ.

வின் எண்ணெய், எரிவாயுவை கியூபாவுக்கும் பிற தென் அமெரிக்க நாடுகளுக்கும் மலிவு விலையில் வழங்கியது — போன்றவையெல்லாம் மிகவும் குறுகிய காலத்தில் சாவேஸ் நிகழ்த்திய சாதனைகள்.

இவையனைத்தும் வெனிசுலாவின் முதலாளித்துவ அரசமைப்புக்கு உட்பட்டு, முதலாளித்துவக் கட்சிகளையும், பெரும் தனியார் முதலாளிகளையும், அவர்களால் அவர்களுக்காக உருவாக்கப்பட்ட அரசு எந்திரத்தையும், 95% அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஊடகங்களையும் வைத்துக்கொண்டே செய்யப்பட்ட சீர்திருத்தங்கள். ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் இவர்கள் தடைக்கற்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

மென்மேலும் மக்களிடம் செல்வதன் மூலமும், தங்களுடைய கோரிக்கைக்கான போராட்டத்தில் அவர்களையும் ஈடுபடுத்துவதன் மூலமும் சாவேஸ் அவற்றை எதிர்கொண்டிருக்கிறார். முதலாளித்துவத்தைக் கட்டுப்படுத்துகின்ற, அதிகாரவர்க்கத்தின் அதிகாரங்களைக் குறைத்து மக்களின் அதிகாரத்தை அதிகப்படுத்துகின்ற சட்டங்கள், திட்டங்களைக் கொண்டுவரும்போது, அவை குறித்துத் தேசம் தழுவிய வாக்கெடுப்பு நடத்தி முடிவெடுப்பது என்ற முறையின் மூலம், எதிரிகளை அரசியல்ரீதியில் பலமிழக்கச் செய்திருக்கிறார்.

தேர்ந்தெடுத்தவர்களைத் திருப்பி அழைக்கும் உரிமை என்பதை வெனிசுலாவின் அரசியல் சட்டத்தில் சாவேஸ் தான் அறிமுகப்படுத்தினார். சாவேஸ் ஒரு சர்வாதிகாரி என்ற அவதூறு பிரச்சாரத்தில் தொடங்கி ஆட்சிக் கவிழ்ப்பு வரையில் அனைத்தையும் முயன்று பார்த்த அமெரிக்க அடிவருடிகள், திருப்பி அழைக்கும் உரிமையையும் பயன்படுத்திப் பார்த்தனர். அதிலும் தோற்றனர்.

சாவேஸ் தன்னை ஒரு சோசலிஸ்டு என்றும் கிறித்தவர் என்றுமே சொல்லிக் கொண்டார். அவருடைய கட்சி பல்வேறு விதமான குட்டி முதலாளித்து, தேசியவாத, சோசலிச சக்திகளின் கூட்டணியாகவே இருந்தது. 19-ம் நூற்றாண்டைச் சேர்ந்த வெனிசுலாவின் விடுதலைப் போராளியான சைமன் டி பொலிவாரையே தனது வழிகாட்டியாக அவர் அறிவித்துக் கொண்டிருந்தார். ஏகாதிபத்திய எதிர்ப்பு, தென் அமெரிக்க ஒற்றுமை, சகோதரத்துவம் ஆகியவை இணைந்த, கம்யூனிசத்தின்பால் பெருமதிப்பு கொண்ட ஒரு கண்ணோட்டம் சாவேஸை வழி நடத்தியது. தான் படைக்க விரும்புவது 21-ஆம் நூற்றாண்டின் சோசலிசம் என்று அவர் கூறிக்கொண்ட போதும், அதனை அவர் விளக்கவுமில்லை. ரசிய - சீன சோசலிசங்களுக்கு எதிராக நிறுத்தவுமில்லை.

''சாவேஸ் ஒரு புரட்சிகரமான தேசியவாதி. அவருடைய ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியத்தின் புரட்சிகரமான தன்மை அவரை சோசலிசத்தை நோக்கித் தள்ளிக்கொண்டே இருந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, தேசிய எல்லை கடந்து தென் அமெரிக்க கண்டத்தை ஒற்றுமைப்படுத்த முயன்ற பொலிவார், ஜோஸ் மார்டி ஆகியோர் விதைத்த மரபு சாவேஸின் பின்புலமாக அமைந்தது'' என்று மதிப்பிடுகிறார் அய்ஜாஸ் அகமது.

தனது கொல்லைப்புற சோதனைச்சாலையாக தென் அமெரிக்க நாடுகளைப் பயன்படுத்தி வரும் அமெரிக்கா, 1970-களில் தனது கைப்பாவை ஆட்சிகளைப் பல நாடுகளில் நிறுவியதுடன், 1980-களிலேயே தனியார்மய தாராளமயக் கொள்கைகளை அந்த நாடுகளில் சோதிக்கத் தொடங்கியது. இதன் விளைவாக, 1980-களின் இறுதியில், ஆசிய நாடுகளில் புதிய தாராளவாதக் கொள்கை தீவிரமாக கடைவிரிக்கப்பட்ட காலத்தில், அங்கே ''ஏகாதிபத்தியங்களின் கடையை மூடுவதற்கான'' மக்கள் கலகங்கள் வெடிக்கத் தொடங்கி விட்டன.

இந்தப் பின்புலம் வலிமையானதொரு கம்யூனிஸ்டு கட்சியை அதிகாரத்துக்குக் கொண்டுவரும் அளவுக்கு மக்களைப் புரட்சிகரமான மாற்றத்துக்கு உள்ளாக்கவில்லை என்ற போதிலும், சாவேஸ் என்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆளுமையைத் தோற்றுவித்திருக்கிறது. ''நானே சாவேஸ்'' என்ற கதறியபடியே அவரது உடலைப் பின் தொடர்ந்து செல்லும் வெனிசுலாவின் உழைக்கும் மக்கள், சாவேஸ் தங்களைக் காலத்தால் முந்திக் கொண்டு விட்டதைத் தம் கண்ணீரால் உணர்த்துகிறார்கள்.

அமெரிக்காவில் இருக்கும் வெனிசுலா அரசின் வழக்குரைஞர், சில ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைவு கூர்கிறார். வெனிசுலாவில் பள்ளிக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சி ஒன்றிற்குச் சென்றிருந்த சாவேஸ், நிகழ்ச்சி முடிந்த பின் மேடையேறி, ஒரு சிறுமியிடம் ''நீ அணிந்திருப்பது என்ன உடை கண்ணு?'' என்று கேட்க, ''நான் ஒரு மாஜிக் நிபுணர்'' என்று பதிலளித்தாள் அந்தச் சிறுமி.

''அய்யய்யோ, அப்படியானால் என்னை காணாமல் போக வைத்து விடுவாயா?'' என்றாராம் சாவேஸ். ''இல்லை. உங்களைப் போலவே பல பேரை உருவாக்கிக் காட்டுவேன்'' என்றாளாம் அந்தச் சிறுமி. அந்தச் சிறுமி சொன்னதைத்தான் வெனிசுலா மக்கள் எதிரொலிக்கிறார்களோ!

● சூரியன்

## பெண்கள் மீதான வன்கொடுமை:

# நீர்த்துப்போன சட்டமும் திருந்தாத அதிகார வர்க்கமும்

**பாலியல் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைக் கண்டு ஆணாதிக்க வெறியர்கள் அஞ்சிவிடவில்லை. சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரிகளும் போலீசும் குற்றங்களைத் தடுப்பதுமில்லை.**

டெல்லியில் நடந்த வல்லுறவுக் கொலைக்குப் பின்னர் அமைக்கப்பட்ட வர்மா கமிசனின் பரிந்துரைகளை நீர்த்துப் போக வைத்துவிட்டு, ஒரு அவசரச் சட்டத்தை அரசு பிறப்பித்தது. வர்மா கமிசனின் அறிக்கையின் அடிப்படையில் ஒரு மசோதாவைத் தயாரித்து, அதை நாடாளுமன்றத்தில் விவாதித்துச் சட்டமாக்கி, பின்னர் அரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று இச்சட்டத்தை அமலாக்க வேண்டுமென்பதால், இடைக்காலத்தில் குற்றவாளிகள் தப்பிவிடக்கூடாது என்பதற்காக இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளதாக அரசு அறிவித்தது.




கெல்கத்தாவின் பூங்காதெரு பகுதியில் ஒரு பெண்ணை கும்பல் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கிய குற்றவாளிகள் மீது தாமதமின்றி விசாரணை நடத்தி தண்டிக்கக் கோரி பெண்கள் நடத்தும் ஆரப்பாட்டம்.

இப்படியொரு அவசரச் சட்டம் வந்த பிறகாவது பெண்களின் மீதான பாலியல் தாக்குதல்கள் குறைந்து விட்டதா? அல்லது ஆணாதிக்க வெறியர்கள் இந்த அவசரச் சட்டத்தைக் கண்டு அஞ்சி நடுங்கிவிட்டார்களா? அல்லது சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரிகளும் போலீசும் குற்றங்களைத் தடுக்க முனைப்பாகச் செயல்படுகிறார்களா? எதுவும் கிடையாது. உலகமே கைகொட்டிச் சிரிக்கும் அளவுக்கு இந்தியா அவமானப்பட்டுள்ள போதிலும், முன்னைவிட அதிக அளவிலும் வக்கிரமாகவும் பெண்களுக்கு எதிரான பாலியல் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மே.வங்கப் பெண் முதல்வரான மம்தா பானர்ஜியோ, மக்கள் தொகையும், கார்களும், சினிமா அரங்குகளும் அதிகரிக்கும்போது, பாலியல் குற்றங்களும் அதிகரிக்கத்தான் செய்யும் என்று 'சமூக அக்கறை'யுடன் பேசிக் கொண்டிருக்கிறார்.

டெல்லி மங்கோல்புரியில் 7 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதை எதிர்த்து பகுதிவாழ் உழைக்கும் மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் - போலீசின் அடக்குமுறை ஓய்ந்த பின்னர் காணப்பட்ட போர்க்களம்



நாடாளுமன்ற அமைச்சர்கள் குழு பாலியல் வன்கொடுமை தடுப்பு மசோதாவின் மீது மயிர்பிளக்கும் விவாதத்தை நடத்திக் கொண்டிருந்த போதே, தாஜ்மஹாலைப் பார்க்க வந்த சுற்றுலாப் பயணியான ஜெசிகா டேவிஸ் எனும் லண்டனைச் சேர்ந்த பெண்ணை, ஆக்ரா நகரில் அவர் தங்கியிருந்த ஓட்டல் முதலாளி பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதால், அப்பெண் இரண்டாவது மாடியிலிருந்து குதித்துக் கால்கள் முறிந்து, தலையில் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்.

கடந்த மார்ச் 15 அன்று ம.பி.யில் சுற்றுலாப் பயணிகளான சுவிட்சர்லாந்து நாட்டைச்சேர்ந்த கணவனும் மனைவியும் சைக்கிளில் பல இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, இரவில் காட்டுப்பகுதியில் ஓய்வெடுத்தபோது, அங்கு ஒரு கும்பல்

கணவனைத் தாக்கிவிட்டு, அப்பெண்ணைப் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கியது. பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக மக்களின் போராட்டங்கள் வீச்சாக நடந்துள்ள தலைநகர் டெல்லியின் மங்கோல்புரி பகுதியிலுள்ள மாநகராட்சிப் பள்ளியில் இரண்டாம் வகுப்புப் படிக்கும் சிறுமி பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாக்கப்பட்டுள்ள கொடூரம் நடந்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலம் பண்டாரா மாவட்டத்தில் 3 பள்ளிச் சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். அதே மகாராஷ்டிராவின் வசாய் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 13,11,10,9 மற்றும் 7 வயது நிரம்பிய 5 சகோதரிகளையும் அச்சிறுமிகளின் சித்தப்பா கடந்த ஈராண்டுகளாகப் பாலியல் பலாத்காரம் செய்து வந்துள்ள கொடுமை இப்போது வெளியே வந்து, நாட்டையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் மதுரை மாவட்டம், கூடல்நகர் அருகிலுள்ள குலமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் பழநி அருகேயுள்ள பதினாறுபுதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் ஆசிரியர் ஆகியோர் மாணவிகளிடம் பாலியல் சீண்டல்களில் ஈடுபட்ட விவகாரம் மக்களது போராட்டத்தால் அம்பலமானது. கடந்த ஓரிரு மாதங்களாக நடந்துள்ள இக்கொடூரங்கள் அனைத்தும் கடுமையான அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்னரும் நிலைமைகள் மாறிவிடவில்லை என்பதையும், இத்தகைய கொடூரங்களில் ஈடுபடும் கிரிமினல்கள் எவரும் அதற்காக அச்சப்படவில்லை என்பதையும் நிரூபித்துக் காட்டுகின்றன.

பஞ்சாபில் தரண்தரண் மாவட்டத்தில், திருமண நிகழ்ச்சிக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த ஹர்பிந்தர் கவுர் என்ற பெண்ணை, லாரி ஓட்டுநர் ஒருவன் பாலியல் தொல்லை செய்துள்ளான். உடனடியாக அருகிலுள்ள போலீசு நிலையத்துக்குச் சென்று ஹர்பிந்தர் கவுரின் தந்தை காஷ்மீர சிங்கும், அவரது சகோதரரும் உதவி கேட்டுள்ளனர். போலீசார் இது குறித்து லாரி ஓட்டுநரிடம் விசாரித்துவிட்டு, அவன் கொடுத்த மாமூல் பணத்தை வாங்கிக் கொண்டு உதவி கேட்ட ஹர்பிந்தர் கவுரையும் அவரது தந்தை மற்றும் சகோதரரையும் சரமாரியாக அடித்து நொறுக்கியுள்ளனர். காக்கிச் சீருடை அணிந்த கிரிமினல்கள் நடத்திய இந்தக் கொடூரத்தை நேரில் பார்த்த ஒருவர்

# ஆள்மாறாட்டக் குற்றவாளிக்கு உடந்தையாக நிற்கும் அரசியலமைப்பு முறை!


பிட்டி மொகந்தி

கடந்த ஏழாண்டுகளாகத் தலைமறைவாகிவிட்ட பாலியல் வல்லுறவுக் குற்றவாளியான பிட்டி மொகந்தி, ஆள்மாறாட்டம் செய்து புதிய வாழ்க்கையை நடத்திவந்த நிலையில், அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளான்.

ஒரிசாவின் ஊர்க்காவல்படை போலீசு தலைமை இயக்குனரான வித்ய பூஷண் மொகந்தியின் மகனாகிய பிட்டி மொகந்தி, கடந்த 2006-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், ராஜஸ்தானின் ஆல்வார் நகரில் ஒரு ஜெர்மானியப் பெண்ணைப் பாலியல் வல்லுறவு கொண்ட குற்றத்திற்காக ஏழாண்டு தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையிடப்பட்டான். ஏழு மாதங்கள் கழித்து, உடல்நிலை மோசமாக உள்ள தனது தாயாரைப் பார்த்துவர அனுமதி பெற்று 15 நாட்கள் பரோலில் ஒரிசாவுக்கு வந்த அவன், தலைமறைவாகிவிட்டான்.

போலீசு தலைமை இயக்குநரான வித்யபூஷண் மொகந்தி, தனது அதிகாரத்தைக் கொண்டு தனது மகனை தனது வீட்டிலேயே வைத்துப் பாதுகாத்ததோடு,போலீசையும் அதற்காகப் பயன்படுத்தியுள்ளான். குற்றவாளியான பிட்டி மொகந்தி தப்பிச் செல்வதற்கு உதவிய குற்றத்துக்காக வித்ய பூஷண் மொகந்தி 2008-இல் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு, பின்னர் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு, 2012-இல்தான் பணி ஓய்வு பெற்றுள்ளான்.

வித்யபூஷண் மொகந்தியின் அதிகாரத் தொடர்புகள் மூலம் இரகசியமாக புட்டபர்த்திக்குச் சென்ற பிட்டி மொகந்தி, அங்குள்ளவர்களின் ஏற்பாட்டின்படி தனது பெயரை ராகவராஜன் என்று மாற்றிக்கொண்டதோடு, அதற்கேற்ப வாக்காளர் அட்டை, கல்விச் சான்றிதழ் உள்ளிட்டு ஏராளமான சான்றாதாரங்களையும் திரட்டிக் கொண்டு எம்.பி.ஏ. பட்டம் பெற்று, வங்கித் தேர்வு எழுதி கண்ணூர் மாவட்டத்தில் சாலை எனும் ஊரிலுள்ள திருவாங்கூர் ஸ்டேட் வங்கிக் கிளையில் பணியாற்றிக் கொண்டு புதிய வாழ்க்கையை நடத்தி வந்துள்ளான்.

இடைப்பட்ட காலத்தில், வங்கியின் சக ஊழியர்களுக்கே ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தும் வகையில் ராகவராஜன் பெயருக்கு வங்கிக் கணக்கில் பெருந்தொகை வந்து கொண்டே இருந்துள்ளது. அவனது உறவினர்களும் இரகசியமாக வந்து அவனைச் சந்தித்துள்ளனர். அந்த வங்கியில் உடன் பணியாற்றிய ஒரு இளம்பெண்ணைக் காதலித்துள்ள பிட்டி, அப்பெண்ணிடம் தன்னைப் பற்றிய உண்மைகளை உளறிக் கொட்டியதும், அதிர்ந்து போன அப்பெண் அவனைத் தோலுரித்துக் காட்டியதைத் தொடர்ந்து அவன் கைது செய்யப்பட்டுள்ளான். இல்லையெனில், இன்னும் பல ஆண்டுகளுக்கு அவனது புதிய வாழ்க்கைக்குச் சிக்கல் வந்திருக்காது.

இத்தனையும் இப்போது வெளிவந்துள்ள போதிலும், பிட்டி மொகந்தி மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளானே தவிர, ஓய்வு பெற்ற போலீசு இயக்குநரானஅவனது தந்தை வித்யபூஷண் மொகந்தி, அவனுக்கு உதவியாக இருந்த ஒரிசா மாநிலப் போலீசு அதிகாரிகள், அவனுக்கு போலி ஆவணங்களை உருவாக்கிக் கொடுத்து ஆள்மாறாட்டம் செய்வதற்கு உதவியாகச் செயல்பட்டவர்கள் - என ஒரு பெருங்கும்பலே இதில் சம்பந்தப்பட்டுள்ள போதிலும், அவர்கள் எவருமே கைது செய்யப்படவில்லை. இதுதான் பெருமையாகப் பீற்றிக் கொள்ளப்படும் இன்றைய அரசியலமைப்பு முறையின் யோக்கியதை.



பாலியல் தொல்லை கொடுத்தவனிடம் மாமூல் வாங்கிக் கொண்டு, புகார் கொடுத்த பெண்ணையே தாக்கும் பஞ்சாப் போலீசு.

தனது கைபேசி காமிராவில் பதிவு செய்து, அதனை ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தினார். இந்த வீடியோ, தொலைக்காட்சிகளிலும் நாளேடுகளிலும் வெளியாகி பரபரப்பானதைத் தொடர்ந்து இத்தாக்குதலை நடத்திய 4 பொறுக்கி போலீசாரும் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால், மாவட்டப் போலீசு தலைமைக் கண்காணிப்பாளரோ, அப்பெண்ணின் தந்தை குடித்துவிட்டுத் தகராறு செய்ததாகவும், அதைத் தடுக்க முயற்சித்த போலீசாரை அப்பெண் தடுத்ததால் அடித்ததாகவும் நியாயவாதம் பேசி கிரிமினல் போலீசுக்கு வக்காலத்து வாங்குகிறார். பெண்களுக்கான பாதுகாப்பை மேம்படுத்த சட்டத்தை மேலும் கடுமையாக்கி, தண்டனையை அதிகரிப்பதும், போலீசு ரோந்தை விரிவுபடுத்துவதும் வேண்டும் என்று முன்வைக்கப்படும் தீர்வின் அபத்தத்தை இந்த நிகழ்ச்சி நிரூபித்துக் காட்டுகிறது.

உ.பி.யின் டியோரியா பகுதியைச் சேர்ந்த 35 வயதான தாழ்த்தப்பட்ட விவசாயப் பெண், வயல்வெளியில் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டதோடு, அவரது கழுத்தை நெறித்துக் கொல்லவும் ஆதிக்க சாதியைச் சேர்ந்த காமுகர்கள் முயற்சித்துள்ளனர். உள்ளூர் போலீசில் இது பற்றி புகார் கொடுத்த போதிலும் நடவடிக்கை எடுக்காததால், மாவட்டப் போலீசு கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தபோது, பல குழந்தைகளுக்குத் தாயாகியுள்ள 35 வயதான பெண்ணை எவனும் பாலியல் பலாத்காரம் செய்வானா என்று கிண்டலடித்து நக்கல் செய்திருக்கிறார், அவர். அருகே இருந்த பத்திரிகையாளர்கள் இந்த வக்கிரத்தை உள்ளூர் நாளேடுகளில் அம்பலப்படுத்தினர். பாலியல் வன்கொடுமை பற்றி புகார் கொடுக்கும் பெண்களிடம் பரிவோடும் ஆறுதலாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்று சட்டம் போட்டு உபதேசங்களைச் செய்தாலும், போலீசுத்துறை கடுகளவும் மாறிவிடவில்லை என்பதற்கு இந்நிகழ்ச்சியே சான்று கூறப் போதுமானது.

பாலியல் வன்முறையிலிருந்து தப்பிக்க ஆக்ரா மஹால் விடுதியின் இரண்டாவது மாடியிலிருந்து குதித்து படுகாய மடைந்துள்ள ஜெசிகா டேவிஸ் என்ற லண்டனைச் சேர்ந்த சுற்றுலாப்பயணி.



ம.பி.யில் சுவிட்சர்லாந்து பெண் பாலியல் வல்லுறவுக்கு ஆளானதைத் தொடர்ந்து அம்மாநில முதல்வரோ, ஒவ்வொரு பெண்ணுக்கும் தனித்தனியாக அரசால் பாதுகாப்பு கொடுக்க இயலாது என்கிறார். அவரது பேச்சை பொன்மொழி போல ஐரோப்பாவின் ஊடகங்கள் விளம்பரப்படுத்துகின்றன. ''இந்தியாவுக்குப் போகும் பெண்களுக்குச் சில எச்சரிக்கைகள்'' என்று ஐரோப்பிய ஊடகங்களும் அரசும் விளம்பரப்படுத்தும் அளவுக்கு, இந்தியாவின் யோக்கியதை கொடிகட்டிப் பறக்கிறது. பாலியல் வல்லுறவு நோயால் இந்திய ஜனநாயகம் சீக்குப் பிடித்துக் கிடக்கிறது என்று பல நாடுகளும் பரிகசிக்கின்றன. இவ்வளவுக்குப் பின்னரும் பெருகிவரும் இத்தகைய குற்றங்களைத் தடுக்கவும் பெண்ணினத்தின் உரிமைகளையும் சமத்துவத்தையும் நிலைநாட்டவும் உருப்படியாக எந்த நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை.

மாறாக, டெல்லியில் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகி மாண்டுபோன இளம்பெண்ணுக்கு நிர்பயா (அச்சமற்றவர்) என்று பெயர்சூட்டி, அவருக்கு வீரப்பெண்மணி விருதளித்தும், ரூ. 1000 கோடி முதலீட்டில் நிர்பயா என்ற பெயரில்பெண்களுக்கென தனி வங்கி தொடங்கப்போவதாக அறிவித்தும், பெண்ணினத்தின் மீது அதீத அக்கறை கொண்டுள்ளதைப் போல ஆட்சியாளர்கள் காட்டிக் கொள்கின்றனர். இதன் தொடர்ச்சியாக, பெண்கள் மீதான வன்கொடுமைகளைத் தடுக்கப் போவதாகக் கூறிக்கொண்டு கடந்த மார்ச் 19 அன்று புதிய குற்றவியல் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றியுள்ளனர்.

தொந்தரவு செய்யும் நோக்கில் பெண்களைப் பின்தொடர்வது, பாலியல் நோக்கத்துடன் பார்ப்பது, அமிலம் வீசுவது, ஒளிந்திருந்து பெண்களின் மறைவிடங்களைப் படம் பிடிப்பது-பரப்புவது உள்ளிட்ட குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள், பாலியல் வன்முறையில் ஈடுபடுவோருக்கு 20 ஆண்டுகளுக்குக் குறையாமல் தண்டனை - முதலானவை இப்புதிய சட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், வர்மா கமிசனும் பல்வேறு மகளிர் அமைப்புகளும் அளித்த முக்கியமான பரிந்துரைகளை முற்றாகப் புறக்கணிக்கத்துவிட்டு, ஆணா

திக்கப் பிற்போக்குத்தனத்தைக் கட்டிக்காக்கும் வகையிலேதான் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

''காப்'' எனப்படும் சாதியப் பஞ்சாயத்துகள் சட்ட விரோதமானவை என்றும், அவை திருமண உறவு தொடர்பாக எந்த தீர்ப்பும் அளிக்க உரிமை கிடையாது என்றும் வர்மா கமிசன் பரிந்துரைத்தது. ஆனால், இச்சாதியக் கட்டப்பஞ்சாயத்துகளையும் கௌரவக் கொலைகளையும் தடுத்து நிறுத்துவதற்கான எந்தவொரு முயற்சியும் இச்சட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை. வரைமுறையற்ற பாலியல் குற்றங்களில் ஈடுபடும் இராணுவப் படையினரை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தித் தண்டிக்கும் வகையில் ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற வர்மா கமிசனின் பரிந்துரை கிடப்பில் போடப்பட்டுள்ளது. பெண்ணின் ஒப்புதல் இல்லாமல் அவள் மீது ஏவப்படும் பாலியல் உறவு முயற்சி அனைத்தும் வல்லுறவுக் குற்றமே என்றும், மனைவியின் சம்மதம் இல்லாமல் கணவன் அவள் மீது பாலுறவைத் திணிப்பதும் வல்லுறவுக் குற்றமே என்றும் வர்மா கமிசன் பரிந்துரைத்ததையும் தற்போதைய சட்டம் நிராகரித்துள்ளது.

சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ஆதிக்கத்திலும் உள்ள ஒருவர் பாலியல் குற்றம் செய்தால் அது கொடிய குற்றம் என்று கருதப்பட வேண்டும் என்ற முந்தைய 2010-ஆம் ஆண்டின் உத்தேச மசோதாவின் விதிகளை நீர்த்துப் போக வைத்து, ''சமூக, பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தில் உள்ளவர்'' என்ற சொல் திட்டமிட்டே இச்சட்டத்தில் நீக்கப்பட்டுள்ளது. வல்லுறவுக் குற்றம் சாட்டப்பட்ட அரசியல்வாதிகளைத் தேர்தலில் நிற்க அனுமதிக்கக் கூடாது என்ற பரிந்துரையும் ஏற்கப்படவில்லை.

ஒருவர் பாலுறவுக்கு மனப்பூர்வமாக இசைவு தெரிவிக்கும் வயது வரம்பு 16-ஆகத்தான் நீண்டகாலமாக நம் நாட்டில் இருந்தது. இருப்பினும், ஆணாதிக்கப் பிற்போக்குச் சிந்தனை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிர்ப்பந்தத்தால், அதை 18 வயதாக தற்போதைய குற்றவியல் சட்டத் திருத்த மசோதா(2013)வில் இந்திய அரசு மாற்றியமைத்துள்ளது.

உடல் மற்றும் மன வளர்ச்சியைக் கணக்கில் கொண்டு, உலகின் பெரும்பாலான நாடுகளில் பாலுறவுக்கான மனப்பூர்வ ஒப்புதல் அளிக்கும் வயது வரம்பு 16-ஆகத்தான் இருக்கிறது. பாலுறவுக்கான இசைவு வயது 16 என்று தீர்மானித்துள்ள நாடுகள், பாலியல் குற்றங்களுக்கு எதிரான கடுமையான சட்டங்களை இயற்றியுள்ளதோடு, பள்ளிகளிலும் பாலியல் குறித்த விழிப்புணர்வை அறிமுகப்படுத்துகின்றன. ஆனால், நம் நாட்டில் சாதிய- மதவாத அமைப்புகள் குழந்தைத் திருமணங்களை ஆதரித்துக் கொண்டே, பாலுறவுக்கு இசைவு தெரிவிக்கும் வயதை 16-ஆக இருப்பதையும் எதிர்க்கின்றன. தங்களது குடும்பம்




## “பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கு முடிவு கட்டுவோம்!”

### – புரட்சிகர அமைப்புகளின் தொடர் பிரச்சாரம்.

பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைத் தாக்குதல்களை தனியார்மய - தாராளமயக் கொள்கைகள் தீவிரப்படுத்துவதை உணர்த்தியும், இம்மறுகாலனியாதிக்கக் கொள்கைகளைக் கட்டிக்காக்கும் இன்றைய அரசியலமைப்பு முறையை வீழ்த்திப் புதிய ஜனநாயக அரசியலமைப்பு முறையை நிறுவும் திசையில் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல அறைகூவியும் கடந்த பிப்ரவரி மாதத்தில் புரட்சிகர அமைப்புகள் தொடர் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டன.

அதன் தொடர்ச்சியாக, ''பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கு முடிவு கட்டுவோம்! ஆணாதிக்கத் திமிரை ஒழிப்போம்! மனித மதிப்பீடுகளை மழுங்கடிக்கும் மறுகாலனியாக்க கலாச்சாரத்தைத் துடைத்தெறிவோம்! ''என்ற முழக்கத்துடன் மார்ச் முதல் நாளன்று தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் வி.வி.மு சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியுடன் நடந்த இப்பொதுக்கூட்டத்தில் ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார்.

மார்ச் 2 அன்று திருவாரூர் பழைய ரயில் நிலையம் அருகிலிருந்து பிரம்மாண்டமான பேரணியை நடத்திய ம.க.இ.க, பு.மா.இ.மு; வி.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் அதன் தொடர்ச்சியாக பனகல் சாலையில் பொதுக்கூட்டத்தை நடத்தின. ம.க.இ.க. தோழர் துரை.சண்முகத்தின் சிறப்புரையும் மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் பார்வையாளர்களிடம் சிறப்பான தொரு வரவேற்பைப் பெற்றன.

மார்ச் 8 - அனைத்துலக மகளிர் தினத்தன்று, பெருகிவரும் பெண்கள் மீதான பாலியல் தாக்குதல்களை எதிர்த்தும், பெண் விடுதலைக்காகப் போராட அறைகூவியும் திருச்சி சிந்தாமணி அண்ணாசிலை அருகில் பறை முழக்கத்துடன் பெ.வி.மு. ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. தோழர் நிர்மலா தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பெ.வி.மு. தோழர் மலர், ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கத்தின் தோழர் தர்மராஜ் ஆகியோரின் எழுச்சியுரையும், ம.க.இ.க.மையக் கலைக்குழுவின் புரட்சிகர பாடல்களும் போராட்ட உணர்வுக்குப் புத்துயிரூட்டுவதாக அமைந்தன.

– பு.ஜ. செய்தியாளர்கள்.

மற்றும் சாதியைச் சேர்ந்த ஒரு இளம் பெண் வேற்று சாதி இளைஞனைக் காதலிப்பதையும் திருமணம் செய்வதையும் தடுத்து தண்டிக்கும் நோக்கத்துடன்தான் ஆணாதிக்கப் பிற்போக்குவாதிகள் பாலியல் உறவுக்கான இசைவு தெரிவிக்கும் வயதை 18-ஆக உயர்த்த வேண்டுமென்கின்றனர். இதன் மூலம் பெருகிவரும் பாலியல் வன்முறைகளைத் தடுக்கப் போவதாக அரசு கூறிக் கொண்டாலும், காதலர்களை மிரட்டிப் பணம் பறிப்பதற்கான வாய்ப்பையும் அதிகாரத்தையும்தான் இது போலீசுக்கு வழங்கியுள்ளது.

கடந்த பிப்ரவரி 6-ஆம் தேதியன்று, டெல்லி சிறீராம் வணிகவியல் கல்லூரியில் சிறப்புச் சொற்பொழிவுக்கு வந்த இந்துவெறி பயங்கரவாத மோடிக்கு எதிர்ப்பு தெரிவித்து அக்கல்லூரி வாயிலில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அங்கு வந்த இந்து வெறி ஆர்.எஸ்.எஸ் மற்றும் பஜ்ரங்தள குண்டர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டிருந்த மாணவர்களை மிருகத்தனமாகத் தாக்கி, மாணவிகளின் ஆடைகளைக் கிழித்தும், மார்பகங்களைப் பிடித்து இழுத்தும் அவமானப்படுத்தினர். நூற்றுக் கணக்கில் போலீசு நிறுத்தப்பட்டிருந்தபோதிலும், இக்குண்டர்களைத் தடுக்கவோ, கைது செய்யவோ முன்வரவில்லை. பட்டப்பகலில் நடக்கும் ஒரு பாலியல் தாக்குதலைக் கூட தடுக்க முன்வராத இத்தகைய போலீசிடம்தான், பெண்கள் மீதான பாலியல் குற்றங்களைத் தடுக்கவும், சட்டத்தை அமலாக்கவும் அதிகாரம் தரப்பட்டுள்ளது. ஆணாதிக்கத் திமிர்த்தனத்தில் ஊறிப்போயுள்ள நீதித்துறையிடம்தான் பெண்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

வன்கொடுமைத்தடுப்புச்சட்டம் எவ்வாறு தீண்டாமைக் கொடுமையை ஒழிக்கவில்லையோ, அதுபோலவே இப்புதிய சட்டமும் பெண்கள் மீதான வன்கொடுமைகளையும் அடக்குமுறைகளையும் ஒழித்துவிடாது என்பதையே இவையனைத்தும் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

• பாலன்

# "அய்யங்கார்" என்பது டிகிரியா, டிப்ளமோவா?

## – இந்து அறநிலையத்துறையே பதில் சொல்!

அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கும் சட்டத்துக்கு எதிராக மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் பார்ப்பன சிவாச்சாரியார்கள் பெற்றிருக்கும் இடைக்காலத் தடை காரணமாக அர்ச்சகர் பயிற்சி பெற்ற 207 மாணவர்கள் பணி நியமனம் பெறாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கெதிரான வழக்கை உச்சநீதிமன்றத்தில் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் நடத்தி வருகிறது.

''குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள்தான் அர்ச்சகராக வேண்டும் என்று கூறுவதற்குக் காரணம் வருணசாதிப் பாகுபாடோ தீண்டாமையோ அல்ல என்றும், ஒரு சம்பிரதாயம் அல்லது மரபு என்ற வகையில் தான் இதனைப் பார்க்க வேண்டும்'' என்றும் சிவாச்சாரியார்கள் தரப்பில் ஆஜராகும் வழக்குரைஞர் பராசரன் வாதிடுகிறார். தீண்டாமை என்ற அடிப்படையில் தங்களது சம்பிரதாயம், அரசியல் சட்டத்துக்கு விரோதமாகக் காட்டப்படாமல் தடுப்பதற்கான தந்திரமே இந்த வாதம்.

மதுரை சிவாச்சாரியார்களின் இந்த பித்தலாட்ட வாதத்தை முறியடிப்பதற்கு சிறீரங்கம் பட்டாச்சாரியார்கள் நமக்கு உதவியிருக்கிறார்கள். 13.2.2013 அன்று திருவரங்கம் கோயிலின் அறநிலையத்துறை இணை ஆணையர் பெயரில் வெளிவந்திருக்கும் ஒரு வேலை வாய்ப்பு விளம்பரம், கோயிலில் 7 விதமான பணிகளுக்கு ஆள் தேவை என்று கூறியது. அவற்றில் 4 பணிகளுக்குக் கல்வித்தகுதி என்ற தலைப்பில் ''இந்து பிராமணர் அய்யங்கார்'' என்று குறிப்பிட்டிருந்தது.

மேற்படி 'கல்வித்தகுதி' இருந்தால் மட்டுமே செய்ய முடியும் என்று இந்து அறநிலையத்துறை கருதும் அதி உயர் தொழில்நுட்ப பணிகளாவன:

தி.மு.க. அரசு கொண்டுவந்த அனைத்துச் சாதியினரும் அர்ச்சராகும் சட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள நீதிமன்ற இடைக்காலத் தடையை நீக்குவதற்குப் போராடிவரும் மனித உரிமைப் பாதுகாப்பு மையமும், அர்ச்சகர் பயிற்சிப் பெற்ற மாணவர்கள் சங்கமும் இணைந்து, இப்பிரச்சினை குறித்தும், தமது போராட்ட அனுபவங்கள் குறித்தும் வெளியிட்டுள்ள நூலின் முகப்பு அட்டை.



*1.பிரதான ஆலய ஸ்ரீபாதம் - அரங்கன் சிலை தூக்குபவர்*

*2. உபகோவில் ஸ்ரீபாதம் - சுற்றுப் பிரகார சிலை தூக்குபவர்*

*3. சன்னதி வாசல் - சுற்றுப் பிர கார சிலைகளின் அர்ச்சகர்*

*4. உபகோவில் பரிசாரகர் - சிலைகளுக்குச் சமைத்துப் போடுபவர்.*

அறநிலையத்துறையின் இந்த விளம்பரத்திற்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரி, அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தின் தலைவர் அரங்கநாதன் சார்பில் மனித உரிமைப் பாதுகாப்பு மையம், மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது.

''மரபு, சம்பிரதாயம் என்று எந்தப் புனை பெயரிட்டு மறைத்தாலும், இந்த விளம்பரத்தின் உள்ளடக்கம் சாதி தீண்டாமைதான். பார்ப்பனர்கள் மட்டும்தான் இந்தப் பணிகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று இந்து அறநிலையத்துறையே விளம்பரம் கொடுப்பதன் மூலம், அரசியல் சட்டத்தின் 14, 16, 17, 21 - வது பிரிவுகளை அரசே மீறுகிறது; தீண்டாமையை நியாயப்படுத்துகிறது. மேலும், அரசுப்பணிகளில் இட ஒதுக்கீட்டு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை மீறுவதுடன், அறநிலையத்துறை குறிப்பிட்ட இந்த பணிகளுக்கு பார்ப்பனர்களுக்கு மட்டுமே 100% இட ஒதுக்கீடு அளிக்கிறது என்பதும் இதன் பொருளாகும்'' என்ற வாதத்தை ஏற்று, மேற்படி ஆளெடுப்பிற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார், நீதிபதி அரி பரந்தாமன்.

ஆலயங்கள், ஆதீனங்கள் ஆகிய அனைத்தின் சொத்துக்களும் மக்களுடையவை. அவற்றின் விவகாரங்களில் தலையிடும் உரிமை மக்களுக்கு உண்டு. இத்தகைய சாதித்திமிர் நடவடிக்கைகளை, மக்கள் உடனுக்குடன் 'தட்டி'க் கேட்காத வரையில், கிடைக்கின்ற சந்துகளில் எல்லாம் பார்ப்பனியம் தலைதூக்கவே முயற்சிக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

– மனித உரிமைப் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு.

# ஈழத்தமிழரின் தன்னுரிமைக்கான மாணவர் முன்னணியின்

## எழுச்சிமிகு பேரணி – ஆர்ப்பாட்டம்!





''அமெரிக்காவின் ஜெனிவா தீர்மானம் ஒரு ஏமாற்று! இனப்படுகொலையை நடத்திய ராஜபக்சே கும்பலைத் தண்டிக்க நூரம்பர்க் போன்ற ஒரு விசாரணையே சரியான மாற்று!'' – என்ற முழக்கங்களுடன் ஈழத்தமிழருக்கு ஆதரவாகவும், கடந்த 21.03.2013 அன்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட பச்சையப்பன் கல்லூரி மாணவர்களை மிருகத்தனமாகத் தாக்கிய போலீசை எதிர்த்தும், அனைத்துக் கல்லூரி மாணவர்களையும் அணிதிரட்டி மார்ச் 28 அன்று சென்னை பாரிமுனை பேருந்து நிலையம் அருகிலிருந்து பேரணியையும் மெமோரியல் ஹால் அருகே ஆர்ப்பாட்டத்தையும் ஈழத் தமிழரின் தன்னுரிமைக்கான மாணவர் முன்னணி நடத்தியது.

ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு மாணவர்களின் போராட்டம் ஓய்ந்துவிடும் என்ற கருத்தைப் பொய்யாக்கிக் காட்டிய இந்தப் பேரணியில், 27 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளின் மாணவர்கள் ஏறத்தாழ 400 பேர் பங்கேற்றனர்.

ஈழத் தமிழினப் படுகொலையை வழிநடத்திய கொடூரத்தை ராஜபக்சே, ஒபாமா, மன்மோகன் ஆகியோரின் வேடமணிந்த மாணவர்கள் காட்சி விளக்கமாக நடித்துக் காட்டினர்.

மாணவர்கள் என்றால் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி அராஜகமாக இருப்பார்கள் என்ற கருத்தைப் பொய்யாக்கி, கட்டுக்கோப்புடன் சோர்வடையாமல் நடந்த இப்பேரணியைக் கண்டு, வழியெங்கும் உழைக்கும் மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றதோடு, குடிநீரும் குளிர்பானங்களும் கொடுத்து ஆதரித்தனர்.

தென்னக ரயில்வே தலையகம் அருகே செல்லவிடாமல் போலீசு தடுத்ததால், மெமோரியல் ஹால் அருகில் மாணவர்கள் சாலையை மறித்து முழக்கங்கள் எங்கும் எதிரொலிக்கும் வகையில் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். ஜெனிவா தீர்மானத்தின் மோசடியையும், மாணவர் போராட்டத்தை அறுவடை செய்யத் துடிக்கும் ஓட்டுக்கட்சிகளை அம்பலப் படுத்தியும்,மாணவர்களை வெறியோடு தாக்கிய காங்கிரசுக் கயவாளிகளைச் செருப்பால் அடித்து மாணவர்களும் பொது மக்களும் உரிய மரியாதை செலுத்த அறைகூவியும் இம் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் கணேசன் எழுச்சியுரை யாற்றினார்.

–பு.ஜ. செய்தியாளர்.

# நில அபகரிப்பே இனி விவசாயக் கொள்கை!

**விளைநிலங்களை அபகரித்துப் போடப்படும் 'வளர்ச்சி'த் திட்டங்களுக்கும் சாமானிய மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்கும் இடையே எந்தவொரு சம்பந்தமும் கிடையாது.**

தமிழகத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த 138 கிராமங்களில் நடந்துவந்த எரிவாயுக் குழாய்களைப் பதிக்கும் பணிகள், விவசாயிகளின் எதிர்ப்பின் காரணமாக நிறுத்தப்பட்டு, சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி இப்பிரச்சினை தொடர்பாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டது. இதனையடுத்து, ''கெய்ல் நிறுவனம் எரிவாயுக் குழாய்களை விளைநிலங்களில் பதிப்பதைக் கைவிட்டு, நெடுஞ்சாலை ஓரமாகப் பதிக்க வேண்டும்; இத்திட்டத்தினால் பழவகை மரங்களையும் மற்றும் பிற கட்டுமானங்களையும் இழந்துள்ள விவசாயிகளுக்கும், நில உரிமையாளர்களுக்கும் உரிய இழப்பீட்டினை வழங்க வேண்டும்'' என முடிவெடுத்துள்ள தமிழக அரசு, இம்முடிவுகளை உயர் நீதிமன்றத்திடம் தெரிவிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

கெய்ல் நிறுவனமோ, ''குழாய்களை நெடுஞ்சாலையோரமாகப் பதித்தால் கூடுதல் செலவு ஏற்படும்; குழாய்களுக்குப் பாதுகாப்பு இருக்காது; குழாய்களைப் பதிக்கும் வரை போக்குவரத்து இடையூறு ஏற்படும்; நெடுஞ்சாலையில் பதிப்பதற்குத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அனுமதி அளிக்காது'' என்ற நொண்டிக் காரணங்களைக் கூறி, குழாய்களை விளைநிலங்களில் பதிக்கும் தனது முடிவை நியாயப்படுத்தி வருகிறது.

குழாய்களை நெடுஞ்சாலைகளில் பதிக்கும் வரைதான் போக்குவரத்து இடையூறு ஏற்படும். ஆனால், விளைநிலங்களில் பதிப்பதால் அம்மாவட்டங்களைச் சேர்ந்த 5,842 விவசாயிகளின் வாழ்வாதாரம் அடியோடு நாசமாகிவிடும். இந்த எளிமையான உண்மையைக்கூடப் புரிந்துகொள்ள மறுக்கும் அளவிற்கு அதிகாரத் திமிர் கொடிகட்டிப் பறக்கிறது.

திட்டத்தை மாற்றிக் கொண்டு குழாய்களை நெடுஞ்சாலையில் பதிக்கக் கூடுதல் செலவாகும் என்றால், அச்செலவை இந்தத் திட்டம் யாருக்காக போடப்படுகிறதோ, அவர்களிடம் வசூலித்துக் கொள்வதுதான் நியாயமாக இருக்கும். மாறாக, திட்டச் செலவைக் குறைக்க, இத்திட்டத்தால் எந்தப் பயனும் அடைய முடியாத விவசாயிகள், தங்களின் விளைநிலங்களை அற்பமான நட்டஈட்டிற்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்பது அடிப்படையிலேயே அநீதியானது.

நெடுஞ்சாலைகளில் குழாய்களைப் பதிப்பதைத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மறுக்க முடியுமென்றால், தமது விளைநிலங்களில் குழாய்கள் பதிப்பதை விவசாயிகள் மறுக்கக் கூடாதா? ஆனால், இந்த உரிமை விவசாயிகளுக்கு அநியாயமான முறையில் மறுக்கப்படுகிறது. மாறாக, பொது நோக்கத்திற்காகக் கொண்டு வரப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்கு விவசாயிகள் தங்கள் நிலங்களை விட்டுத் தர வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். மறுத்துப் போராடினால், போலீசு, வழக்கு, சிறை போன்ற அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, விளைநிலங்களை வலுக்கட்டாயமாக அபகரித்துக் கொள்கிறது அரசு.

தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஏதாவதொரு காரணத்தைச் சொல்லி விவசாய நிலங்களைக் கையகப்படுத்துவது இப்பொழுது சர்வ சாதாரணமாகவும் துரிதமாகவும் நடந்துவருகிறது. விளைநிலங்களை வலுக்கட்டாயமாகப் பிடுங்கி, அவற்றின் மேல் கொண்டுவரப்பட்டுள்ள விரைவுச் சாலைகள், மேம்பாலங்கள், தகவல்-தொழில்நுட்பப் பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், சுரங்கங்

கெய்ல் நிறுவனம் எரிவாயு கொண்டு செல்லும் குழாய்களை விளைநிலங்களில் பதிப்பது தொடர்பாகத் தமிழக அரசு நடத்திய கருத்துக் கேட்புக் கூட்டத்தில் பங்கேற்ற திருப்பூர் மாவட்ட விவசாயிகள்.



கள், புதிய வேலியிடப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள் போன்றவற்றால் நிலத்தை இழந்த விவசாயிகளுக்கு எந்தப் பலனும் கிட்டவில்லை என்பது மட்டுமல்ல, இத்திட்டங்கள் பெரும்பான்மையான மக்களின் நலனில் இருந்தும் போடப்படுவதில்லை.

இந்த எரிவாயுக் குழாய் திட்டத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். இத்திட்டம் தொழிற்சாலைகளுக்கு எரிவாயு விநியோகிப்பதற்காகப் போடப்படுகிறது. இந்தத் திட்டத்தால் பலனடையப் போவது பெரும்பாலும் தனியார் முதலாளிகள்தான். ஆனால், அது மூடி மறைக்கப்பட்டு, ஏதோ நாட்டின் முன்னேற்றத்துக்காகவும், பொது நோக்கத்திற்காகவும்தான் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக ஒரு புளுகுணிப் பிரச்சாரம் நடத்தப்படுகிறது. இது போன்ற திட்டங்களை எதிர்ப்பவர்களை, அதற்கு நிலம் தர மறுப்பவர்களை நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானவர்கள் என்றும், நக்சலைட்டுகள் என்றும் குற்றஞ்சுமத்தி, அவர்களை ஒடுக்குவது நியாயமானதென்றும் கருத்து பரப்பப்படுகிறது. சத்தீஸ்கர், ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் மீது ஏவிவிடப்பட்டுள்ள காட்டு வேட்டை; ஒரிசாவின் கலிங்காநகர் பழங்குடியின மக்கள் மீதும், உ.பி.யின் நொய்டா விவசாயிகள் மீதும் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.



மத்தியப் பிரதேச மாநிலத்தில் நர்மதா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுவரும் இந்திரா சாகர் அணைக்கட்டின் உயரத்தைக் குறைக்கக் கோரி, ஹர்தா மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் நடத்திய ''ஜல் சத்யாகிரக''ப் போராட்டம். (கோப்புப் படம்)

எனினும், இத்தகைய அடக்குமுறைகளையும் மீறி, சிங்குரிலும் நந்திகிராமத்திலும் விவசாயிகள் நடத்திய போராட்டங்கள் வெற்றி பெற்றுள்ளன; ஒரிசாவில் கோண்டு இனப் பழங்குடி மக்கள் நடத்திய போராட்டத்தையடுத்து, நியம்கிரி மலைப்பகுதியில் பாக்சைட் சுரங்கம் அமைக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அம்மாநிலத்தில் கோக்ராஜர் மாவட்ட விவசாயிகளும் மீனவர்களும் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நடத்திவரும் போராட்டம் காரணமாக போஸ்கோ நிறுவனத்திற்காக விவசாய நிலங்களைக் கையகப்படுத்துவது முழுமையாக வெற்றியடையவில்லை. மகாராஷ்டிரா மாநிலம், ராய்காட் மாவட்டத்தில் ரிலையன்ஸ் நிறுவனம் அமைக்கத்திட்டமிட்டிருந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அம்மாவட்ட விவசாயிகள் போராடித் தடுத்து நிறுத்திவிட்டனர்.

நிலம் கையகப்படுத்துவதற்கு எதிராக நடந்துவரும் இத்தகைய போராட்டங்களால் 5 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பு கொண்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்த முடியாமல் கிடப்பில் இருப்பதாக ஆளும் கும்பலும் அவர்களது எடுபிடிகளும் புலம்பி வருகின்றனர். இந்த தேக்க நிலையை உடைக்க விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும் விதத்தில் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை திருத்தப் போவதாக அறிவித்தது, காங்கிரசு கூட்டணி அரசு.

இது தொடர்பான அறிவிப்பை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அரசு வெளியிட்டவுடனேயே, ''தனியார் திட்டங்களுக்கு நிலத்தைக் கையகப்படுத்திக் கொடுக்கும் புரோக்கரைப் போல அரசு செயல்படக் கூடாது. அரசு திட்டங்களுக்கு மட்டுமே நிலத்தைக் கையகப்படுத்தலாமென்றாலும், விவசாயிகளின் விருப்பத்திற்கு எதிராக வலுக்கட்டாயமாகக் கையகப்படுத்தக் கூடாது. நிலத்தைத் தர மறுக்கும் உரிமை விவசாயிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு நில உரிமையாளர்களின் ஒப்புதலை மட்டுமின்றி, அந்த நிலத்தைச் சார்ந்து வாழும் மற்ற தொழிலாளர்களின் ஒப்புதலையும் பெற வேண்டும். முப்போகம் விளையும் நிலங்களை மட்டுமல்ல, ஒருபோகம் விளையும் நிலங்களை கையகப்படுத்தக்கூடாது'' என்பது உள்ளிட்டுப் பல்வேறு திருத்தங்களையும் நிபந்தனைகளையும் விவசாய சங்கங்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் முன்வைத்தன.

ஆனால், நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கும் புதிய நிலம் கையகப்படுத்தும் மசோதாவிற்குப் பெயர்தான் கவர்ச்சிகரமாகச் சூட்டப்பட்டுள்ளதே தவிர, அதற்கும் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், 118 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டுவரப்பட்டு தற்போது வரை நடைமுறையில் இருந்துவரும் பழைய சட்டத்திற்கும் அடிப்படையில் எவ்வித வேறுபாடும் இல்லை. நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மீள்குடியமர்வில் நியாயமான நட்ட ஈடு மற்றும் ஒளிவுமறைவற்ற தன்மையைப் பெறும் உரிமை மசோதா (Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilition and Resettlement Bill) என்ற இப்புதிய மசோதா, நட்ட ஈட்டைக் கொஞ்சம் கூட்டிக் கொடுத்து

விவசாயிகளிடமிருந்து நிலத்தை அபகரித்துக் கொள்வதைத்தான் தனது அடிநாதமாகக் கொண்டுள்ளது.

தனியார் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிலத்தை அவர்கள்தான் வாங்கிக் கொள்ள வேண்டும்; ஆனால், பொதுத்துறை-தனியார் துறை இணைந்து செயல்படுத்தும் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிலத்தை அரசு கையகப்படுத்திக் கொடுக்கும் எனப் புதிய சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. பொதுத்துறை-தனியார்துறை கூட்டு என்பது சாராம்சத்தில் கேந்திரமான துறைகளையும் அவற்றின் மூலம் கிடைக்கும் அளப்பரிய வருமானத்தையும் சுற்றிவளைத்துத் தனியாருக்குத் தாரை வார்க்கும் சதித்தனமான, மோசடியான கொள்கையாகும். அப்படிபட்ட திட்டங்களுக்குத் தேவைப்படும் நிலங்களை அரசு கையகப்படுத்திக் கொடுக்கும் என்ற திருத்தத்தின் மூலம் தனியாருக்கு அரசு புரோக்கராகச் செயல்படுவது மீண்டும் சட்டப்படி உறுதி செய்யப்பட்டுள்ளது.



தமது விளைநிலங்கள் அபகரிக்கப்படுவதை எதிர்த்துப் போராடிய உ.பி.நொய்டா பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த விவசாயி. (கோப்புப் படம்)

தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் மிகப் பெரும் முதலீட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்குவதையும் பொது நோக்கம் எனப் புதிய சட்டம் வரையறுத்துள்ளதால், அரசின் திட்டங்களுக்கு மட்டுமல்ல, கார்ப்பரேட் நிறுவனங்களின் திட்டங்களுக்கும் நிலம் தர முடியாது எனக் கூறும் உரிமை விவசாயிகளுக்கு மறுக்கப்பட்டுள்ளது. முப்போகம் விளையும் நிலங்களைக் கையகப்படுத்துவதைக் கடைசி வாய்ப்பாகத்தான் கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையைத் தவிர, விளைநிலங்களைக் கையகப்படுத்துவதற்கு வேறெந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லை.

நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நில உரிமையாளர்களின் ஒப்புதலைத் தாண்டி, அந்நிலத்தை நம்பி வாழும் கூலித் தொழிலாளர்களின் ஒப்புதலைப் பெற வேண்டியதில்லை என்ற கார்ப்பரேட் நிறுவனங்களின் கோரிக்கை மசோதாவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நிலத்தின் மதிப்பைத் தீர்மானிப்பது, நட்ட ஈடு மற்றும் புனர் வாழ்வு வழங்குவதிலும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சாதகமான அம்சங்கள் மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ளன. பழங்குடியின மக்களின் நிலங்களையும் காடுகளையும் கையகப்படுத்துவதற்கு கிராம சபையின் ஒப்புதலைப் பெற வேண்டும்; பாதிக்கப்படும் குடும்பத்தினருக்கு வேலை கொடுக்க வேண்டும்; அதிக நட்ட ஈடு வழங்க வேண்டும் என்ற பழைய பல்லவிதான் புதிய மசோதாவிலும் சேர்க்கப்பட்டுள்ளது.

இம்மசோதாவில் தப்பித்தவறிக்கூட கார்ப்பரேட் நிறுவனங்களுக்குப் பாதகமான அம்சங்கள் இருந்துவிடக் கூடாது என்பதற்காகவே, சுற்றுப்புறச் சூழல் அமைச்சராக இருந்தபொழுது பன்னாட்டு விதைக் கழகங்களின் கைத்தடியாக நடந்துகொண்டு பி.டி. கத்திரிக்காய்க்கு ஆதரவாக வாதாடிய ஜெய்ராம் ரமேஷ்; விவசாயிகளைப் பற்றிக் கிஞ்சித்தும் அக்கறை காட்டாத சரத் பவார் ஆகியோர் இம்மசோதாவை உருவாக்கி முடிவு செய்யும் கமிட்டிகளுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கும் மேலாக, இம்மசோதாவை கார்ப்பரேட் முதலாளிகளுக்குச் சாதகமாக உருவாக்குவதில் மைய அரசின் வர்த்தக அமைச்சகம், நகர மேம்பாட்டு அமைச்சகம், சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சகம், மின்சாரத் துறை அமைச்சகம், தொழில்துறை அமைச்சகம் ஆகிய ஐந்து துறைகளைச் சேர்ந்த அமைச்சர்களும் அதிகாரிகளும் காட்டிய முனைப்பு அளப்பரியதாகும்.

●●●

**வி**வசாய நிலங்களைக் கையகப்படுத்துவதை, விவசாயிகளையும், விவசாயக் கூலித் தொழிலாளர்களையும் அவர்களின் வாழ்வாதாரத்திலிருந்து அப்புறப்படுத்தும் கொடிய செயலாக ஆளும்கும்பல் கருதுவதில்லை. மாறாக, இதனை ஒரு வர்த்தக நடவடிக்கையாகவும், இதில் பணத்தைத் தவிர, வேறு உணர்ச்சிகளுக்கு இடமில்லை என்றே கருதுகிறது. இது மட்டுமின்றி, நட்ட ஈடாகக் கிடைத்த பணத்தைப் பங்குச் சந்தையில் முதலீடு செய்து, ஒரு நடுத்தர வர்க்க வாழ்க்கையைத் தொடங்குமாறு விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கவும் இவர்கள் தயங்குவதில்லை. குறிப்பாக, பழம்பெரும் தரகு அதிகார வர்க்க முதலாளிகளுள் ஒருவரான ஆதி கோத்ரேஜ், ''விவசாயிகள் அனைவரும் தமது நிலங்களை விற்றுவிட்டு, கிடைக்கும் பணத்தைப் பங்குச் சந்தையிலும் பரஸ்பர நிதி நிறுவனங்களிலும் முதலீடு செய்யுமாறு'' வெளிப்படையாகக் கூறி வருகிறார். இந்தியாவிற்கு இனி விவசாயமும் விவசாயிகளும் தேவையில்லை என்பது ஆதி கோத்ரேஜ் என்ற முதலாளியின் கருத்து மட்டுமல்ல, மன்மோகன் சிங் உள்ளிட்டு அனைத்து ஓட்டுக்கட்சிகளின் கருத்தும் ஏறத்தாழ இதுதான்.

சிங்குரிலும், நந்திகிராமிலும் சி.பி.எம். தலைமையில் அமைந்த இடதுசாரிக் கூட்டணி அரசுதான் விவசாயிகளிடமிருந்து நிலங்களைப் பறிப்பதில் மிகவும் மூர்க்கமாக நடந்துகொண்டது. தலித் சகோதரி மாயாவதி ஆட்சி

யில்தான் நொய்டா பகுதி விவசாயிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

அடுத்த ஆண்டு வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை மனதில் நிறுத்தி கெய்ல் நிறுவனத்திற்கு எதிராக முடிவெடுத்துள்ள ஜெயா, 1990-களில் சென்னையையடுத்து ஃபோர்டு கார்கம்பெனியை நிறுவுவதற்காக, 400 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய-மேய்ச்சல் நிலங்களை வலுக்கட்டாயமாகப் பறித்துக் கொடுத்தவர்தான்.

இந்தியத் தொழில் கூட்டமைப்பு என்ற தரகு முதலாளிகள் சங்கம் வெளியிட்டுள்ள ''2025-இல் தமிழகம்'' என்ற அறிக்கையில், ''தற்போது 50 சதவீதமாக இருக்கும் தமிழக நகர்ப்புற மக்கள் தொகையை, 2025-இல் 75 சதவீதமாக உயர்த்த வேண்டும்; 2025-இல் விவசாயத்தைச் சார்ந்திருக்கும் கிராமப்புற மக்கள் தொகையை 25 சதவீதமாகக் குறைக்க வேண்டும். அப்படிக் குறைப்பதற்கு நகரமயமாவதைத் தற்பொழுதுள்ளதைக் காட்டிலும் 18 மடங்கு வேகத்தில் தீவிரப்படுத்த வேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளது.

தரகு முதலாளிகள் தமிழகம் குறித்துச் சொல்லியுள்ள இந்த அபாயகரமான ஆலோசனையைத் தற்போதைய நிதி மந்திரியான ப.சிதம்பரம் வழிமொழிந்துள்ளதோடு, இந்தியா முழுவதும் நகர்ப்புற மக்கள் தொகையை 85 சதவீதம் ஆக்குவதுதான் காங்கிரசின் இலட்சியம் எனச் சபதம் போட்டுள்ளார். பழங்குடியின மக்கள் பெரும்பான்மையாக வாழும் சத்தீஸ்கர் மாநிலத்தில் ஏறத்தாழ 70 சதவீத மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். அம்மாநிலத்தைத் தொழில்மயப்படுத்துவதற்கு இந்த எண்ணிக்கையை 30 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என அம்மாநில அரசே அறிவித்திருக்கிறது. கிராமப்புற மக்களை விவசாயத்திலிருந்து அப்புறப்படுத்தாமல் இந்த இலக்குகளை எட்ட முடியாது. விவசாயிகளைக் கிராமப்புறங்களிலிருந்து வெளியேற்ற வேண்டுமானால், ஒன்று அவர்களது நிலங்களைப் பிடுங்கிக் கொள்ள வேண்டும்; இல்லையென்றால், நிலங்களைத் தரிசாகப் போடும் அவலநிலைக்கு அவர்களைத் தள்ள வேண்டும்.

விவசாயிகளைக் கிராமப்புறங்களிலிருந்து அப்புறப்படுத்துவதன் மூலம், கார்ப்பரேட் கும்பலுக்கு அடிமாட்டு விலைக்கு நிலம் கிடைப்பது மட்டும் உறுதி செய்யப்படவில்லை. இதன் மூலம் வேலை தேடி நகரங்களுக்கும்; தமிழ்நாடு, மகாராஷ்டிரா, டெல்லி போன்ற 'வளர்ந்து' வரும் மாநிலங்களுக்கும் ஓடிவரும் விவசாயிகளைக் கொண்டு ஒரு பெரும் ரிசர்வ் தொழிலாளர் பட்டாளமும் உருவாக்கப்படுகிறது. இப்படி ஒரு ரிசர்வ் பட்டாளத்தை உருவாக்குவதன் மூலம், மிகவும் குறைவான கூலிக்குத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் வாய்ப்பு முதலாளிகளுக்கு உருவாக்கித் தரப்படுகிறது. இத்தகைய நில அபகரிப்பும் உழைப்புச் சுரண்டலும்தான் இந்தியத் தரகு முதலாளிகளை உலகக் கோடீசுவரர்களின் பட்டியலில் கொண்டு போய் குந்த வைத்திருக்கிறது; பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக் காடாக இந்தியாவை மாற்றியிருக்கிறது.



உ.பி.மாநில நொய்டா பகுதியில் விளைநிலங்களை வளைத்து, மேட்டுக்குடிக் கும்பலின் களிவெறியாட்டத்திற்காகக் கட்டப்பட்டுள்ள கோல்ஃப் மைதானம் (மேல்படம்) மற்றும் 875 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள எஃப்-1 கார் பந்தய மைதானம்.

நிலமற்ற கூலி விவசாயிகளுக்கு உபரி நிலம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதற்கு ஏற்ப நில உச்சவரம்புச் சட்டமும், நிலச் சீர்திருத்த சட்டமும் அமல்படுத்த வேண்டும் என்பதையெல்லாம் காங்கிரசு உள்ளிட்டு எந்தவொரு ஓட்டுக்கட்சியும் வாயளவில்கூட இன்று ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக, நடுத்தர மற்றும் சிறு விவசாயிகளின் நிலங்களை அபகரிப்பதுதான் இக்கட்சிகளின், இந்திய அரசின் கொள்கையாக உள்ளது. தனியார்மயம்-தாராளமயத்தின் ஆன்மாவாக இருக்கும் இந்த நில அபகரிப்புக்கு எதிராக விவசாயிகள் ஒரு நீண்ட நெடிய போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது. இந்த நெடிய போராட்டத்தில் சிங்குரிலும், நந்திகிராமிலும், நியம்கிரியிலும், தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களிலும் விவசாயிகளுக்குக் கிடைத்துள்ள வெற்றிகள் குறிப்பிடத்தக்கவை என்றபோதும், அவற்றை தற்காலிகமானதாகக் கருதமுடியுமே தவிர, இறுதி வெற்றியாகக் கொள்ள முடியாது என்பதை விவசாயிகள் உணர்ந்து கொள்ள வேண்டிய தருணமிது.

● திப்பு

## விவசாயக் கடன் தள்ளுபடி ஊழல்:

# கோமான்கள் நடத்திய வக்கிரக் கொள்ளை!

**கடனில் தத்தளித்துக் கொண்டிருக்கும் விவசாயிகளின் பெயரால் நடந்துள்ள இந்த ஊழல், காங்கிரசு ஆட்சியின் கேடுகெட்டத்தனத்தைக் காட்டுகிறது.**

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் முதல் பருவ ஆட்சியில், அக்கூட்டணி அரசு 2008-ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த பொழுது, 2009-ஆம் ஆண்டு நடக்கவிருந்த நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்து, விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் நிவாரணத் திட்டம் ஒன்றை அறிவித்தது. இத்திட்டத்திற்காக 71 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கவுள்ளதாகக் கூறிய அன்றைய நிதியமைச்சர் ப.சிதம்பரம், ‘‘விவசாயிகளுக்கு இந்நாடு கடன் பட்டுள்ளது. அந்தக் கடனைத் திருப்பி அடைத்திருக்கிறோம்’’ என்று சுயதம்பட்டம் அடித்துக் கொண்டார்.

இக்கடன் திட்டத்தால் ஏறத்தாழ 3.45 கோடி விவசாயிகள் பலனடைவார்கள் எனக் கூறப்பட்டாலும், சிறு-குறு விவசாயிகள் அனைவரும் இக்கடன் தள்ளுபடியைப் பெற முடியாதபடியும், விவசாயிகளின் வங்கிக் கடன் முழுவதும் தள்ளுபடி ஆகிவிடாதபடியும், இந்நிவாரணத் திட்டம் நரித்தனமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

‘‘ஐந்து ஏக்கருக்கும் குறைவாக நிலம் உள்ள விவசாயிகளுக்கு மட்டுமே இக்கடன் நிவாரணத் திட்டம் பொருந்தும்; 50,000 ரூபாய் வரையிலும் கடன் பெற்ற விவசாயிகள் மட்டும்தான் முழுத் தள்ளுபடி கோர முடியும். 50,000 ரூபாய்க்கு மேல் கடன் பெற்ற விவசாயிகள், தாம் வாங்கிய கடனில் 75 சதவீதத்தை ஜூன் 30, 2010-க்குள் திருப்பிச் செலுத்தியிருந்தால், மீதி 25 சதவீதக் கடனைத் தள்ளுபடி செய்யக் கோர முடியும். இந்த 25 சதவீத தள்ளுபடியும் இருபதாயிரம் ரூபாய் என்ற வரம்பைத் தாண்டாது’’ என்றவாறு விதிகள் உருவாக்கப்பட்டிருந்தன. அதேசமயம், ஏற்றுமதி சார்ந்த பணப் பயிர்களைப் பயிரிடும் விவசாயிகள் ரூ. 1 இலட்சம் வரையிலும்; கோழிப்பண்ணை, பால்பண்ணை நடத்துவோர் மற்றும் சுய உதவிக் குழுக்களும் இக்கடன் நிவாரணத் திட்டத்தின் கீழ் தள்ளுபடி பெறத் தகுதி வாய்ந்தவர்களாக வரையறுக்கப்பட்டிருந்தது.

இப்படிப்பட்ட ஏறுக்குமாறான விதிகளின் காரணமாக, நாட்டிலேயே விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் அதிகமாக நடந்துவரும் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த விதர்பா பகுதி பருத்தி விவசாயிகளுக்கு இந்தக் கடன் தள்ளுபடியால் எந்தவிதமான பலனும் கிடைக்காது என்று இத்திட்டம் அறிவிக்கப்பட்ட சமயத்திலேயே விமர்சனங்கள் எழுந்தன.

ஆந்திராவின் அனந்தபூர் மாவட்டத்தில் கடன்சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் சடலங்களைக் கண்டு கதறும் உறவினர்கள். (கோப்புப் படம்)



கடன் தள்ளுபடித் திட்டத்தின் இவ்வர்க்கச்சார்பு ஒருபுறமிருக்க, இக்கடன் தள்ளுபடித் திட்டம் செயல்படுத்தப்பட்ட விதம் குறித்து நாடெங்கிலும் 800 வங்கிக் கிளைகளையும், அக்கிளைகளில் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட கணக்குகளுள் 90,576 கணக்குகளையும் வகை மாதிரியாக எடுத்துக் கொண்டு ஆய்வு செய்த மையத் தணிக்கைத் துறை, ‘‘இவற்றுள் கடன் தள்ளுபடி பெறத் தகுதியற்ற 20,216 கணக்குகளுக்கு முறைகேடாகக் கடன் தள்ளுபடி தரப்பட்டிருப்பதை’’ அம்பலப்படுத்தியிருக்கிறது. மேலும், ‘‘கடன் தள்ளுபடி பெற அனைத்துத் தகுதிகளும் இருந்தும் 9334 விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி மறுக்கப்பட்டுள்ளது. 4826 விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி நீட்டிப்பு வழங்கப்படவில்லை’’ என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறது.

தகுதிவாய்ந்த விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்ய மறுத்த வங்கிகள், நவீன கந்துவட்டிக் கும்பலான நுண்கடன் நிறுவனங்களை இத்தள்ளுபடித் திட்டத்தின்

மூலம் மஞ்சள் குளிக்க வைத்துள்ளன. ஒரு தனியார் வணிக வங்கி விதிமுறைகளுக்கு மாறாக நுண்கடன் நிறுவனங்களின் கடன்களை விவசாயக் கடன்களாகக் காட்டி ரூ.164.6 கோடி ரூபாயை அரசிடம் இருந்து சுருட்டியுள்ளதை, அவ்வங்கியின் பெயரைக் குறிப்பிடாமல் அம்பலப்படுத்தியுள்ள தணிக்கை அறிக்கை, அந்நுண் கடன் நிறுவனங்களிடம் கடன்பட்ட விவசாயிகளின் கடன்கள் தள்ளுபடியாகியிருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்கிறது.

தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வேளாண் கடன் தொகையில் 7 சதவீதத் தொகை சென்னையைச் சேர்ந்த புள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இரகசியத்தைத் தமிழகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு ஊழியர் சங்கம் அம்பலப்படுத்தியிருக்கிறது. ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் சொர்க்க பூமியாக மாறிவிட்ட சென்னையில், மொட்டை மாடியில் காய்கறிகளைப் பயிரிடும் 'விவசாயிகளுக்கு' இந்தக் கடன் தள்ளுபடியை வங்கிகள் வழங்கியுள்ளன போலும்.



இத்திட்டம் 3.45 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்குப் பலனளிக்கும் என்ற அரசின் அறிவிப்பையும் தணிக்கையில் அம்பலமாகியிருக்கும் முறைகேடுகளையும் ஒப்பிட்டால், ஒட்டுமொத்தமாக இத்திட்டத்தின் கீழ் 24 இலட்சம் பேர் முறைகேடாகக் கடன் தள்ளுபடி பெற்றிருக்கக்கூடும்; தகுதிவாய்ந்த 34 இலட்சம் விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி மறுக்கப்பட்டிருக்கக் கூடும். இம்மோசடியால் கடன் தள்ளுபடி செய்வதற்கு இதுவரை ஒதுக்கப்பட்ட 52,000 கோடி ரூபாயில் தோராயமாக 10,000 கோடி ரூபாய்க்கும் மேலாக ஊழல் நடந்திருக்கக்கூடும் என்ற முடிவுக்கு வர முடியும்.

அரசியல் புள்ளிகள், ஆதிக்க சாதியைச் சேர்ந்த பணக்கார விவசாயிகள் உள்ளிட்ட கும்பல்தான் வேளாண் கூட்டுறவு வங்கிகளை இயக்கி வருவதால்; இவர்களோடு நுண்கடன் நிறுவனங்கள், நவீன பண்ணை விவசாயத்தில் இறங்கியிருக்கும் புதியவகை தரகு முதலாளிகள் மற்றும் பொதுத்துறை வங்கி அதிகாரிகள், வருவாய்த் துறை அதிகாரிகள் ஆகியோர் கூட்டுச் சேர்ந்து இந்த ஊழலை நடத்தியிருப்பதால், விவசாயத் துறை அமைச்சர் சரத் பவார் இந்த ஊழலை அமுக்குவதில் முன்னணியில் நின்றார். அதனால், இக்கடன் தள்ளுபடி ஊழல் நாடாளுமன்றத்திலோ, தேசியப் பத்திரிகைகளிலோ பெரிய அளவில் விவாதிக்கப்படாமல், வந்த சுவடே தெரியாமல் அமுங்கிப் போய்விட்டது.

வங்கிகளில் கோடிகோடியாய் தொழில்கடன் வாங்கி ஏப்பம் விட்ட தரகு முதலாளி விஜய் மல்லையா.



இவ்வூழலால் பலனடைந்த கும்பலைக் கண்டுபிடித்துக் கைது செய்ய முன்வராத அரசு, முறைகேடாகக் கடன் தள்ளுபடி பெற்றவர்களிடமிருந்து அத்தொகையைத் திரும்பப் பெறுமாறு பொத்தாம் பொதுவாக வங்கிகளுக்கு அறிவுறுத்தியிருக்கிறது. வங்கிகளோ, இதைச் சாக்காக வைத்துக் கொண்டு நியாயமாகக் கடன் தள்ளுபடி பெற்ற விவசாயிகளுக்கு பணத்தைத் திரும்பக் கட்டுமாறு நோட்டீஸ் அனுப்பி வருகின்றன. மகாராஷ்டிராவில் கோலாப்பூர் மாவட்டக் கூட்டுறவு வங்கி மட்டும் 49,000 விவசாயிகளுக்கு நோட்டீஸ் அனுப்பி, அவர்களின் தலையில் இடியை இறக்கியிருக்கிறது.

தமிழ்நாட்டிலோ, சில பொதுத்துறை வங்கிக் கிளைகள் விவசாயக் கடனைத் திருப்பிச் செலுத்தாத விவசாயிகளின் புகைப்படங்களை வங்கிகளின் வாசலில் ஒட்டி, விவசாயிகளை ஏதோ ஜேப்படி திருடர்களைப் போல அவமானப்படுத்தும் அடாவடித்தனத்தில் இறங்கியுள்ளன. கடன் தள்ளுபடியை ஏப்பம் விட்ட கும்பலோடு, வங்கியில் தொழில்கடன் வாங்கிவிட்டு ஏப்பம் விட்டுள்ள விஜய் மல்லையா போன்ற தரகு முதலாளிகளோடு இணக்கமாகவும், அக்கொள்ளையில் பங்காளியாகவும் நடந்துவரும் வங்கி நிர்வாகம், சிறு விவசாயிகளைக் கிள்ளுக்கீரைகளாக நடத்துவதையும் எட்டி உதைப்பதையுமே வாடிக்கையாகக் கொண்டுள்ளன என்பதைத்தான் இந்த விவகாரங்கள் மீண்டும் எடுத்துக்காட்டியுள்ளன.

• அழகு

# பட்ஜெட் 2013 - 14:

# பன்னாட்டு நிதிச் சூதாடிகளுக்குச் சமர்ப்பணம்!

**பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்க அந்நிய நிதிமூலதனமே கதி என்கிறார், ப.சி.**

**மை**ய அரசின் 2013-14 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு அறிக்கையை காங்கிரசின் விசுவாசிகள் மட்டுமின்றி, இரண்டு சர்வதேச தர நிர்ணய நிறுவனங்களும் பாராட்டியிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. ஆறேழு மாதங்களுக்கு முன்பு, இந்தியாவின் தரச் சான்றைக் குறைக்கப் போவதாக மிரட்டிவந்த சர்வதேச தர நிர்ணய நிறுவனங்கள், இன்று பட்ஜெட்டைப் பாராட்டுகின்றன என்றால், இந்த மனமாற்றம் ஆதாயமில்லாமலா ஏற்பட்டிருக்கும்?

முடிவடையப் போகும் இந்த நிதியாண்டில் (2012-13) நிதிப் பற்றாக்குறை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.7 சதவீதமாக அதிகரிக்கும் எனப் பொருளாதார வல்லுநர்கள் எதிர்பார்த்திருந்த நிலையில், சிதம்பரம் அப்பற்றாக்குறையை 5.2 சதவீதமாகக் கட்டுப்படுத்திவிட்டதாக பட்ஜெட்டில் கணக்குக் காட்டியிருக்கிறார். இது மட்டுமின்றி, வரும் நிதியாண்டில் (2013-14) அப்பற்றாக்குறையை 4.8 சதவீதமாகக் குறைக்கும் அளவிற்கு பட்ஜெட்டைத் தயாரித்திருப்பதோடு, 2014-15 நிதியாண்டில் நிதிப் பற்றாக்குறை, சர்வதேச நிதி நிறுவனங்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு - 3 சதவீதமாகக் குறைந்துவிடும் என்றும் உறுதியளித்திருக்கிறார். சர்வதேச தர நிர்ணய நிறுவனங்கள் சிதம்பரத்தின் பட்ஜெட்டைப் பாராட்டியிருப்பதன் பின்னணி இதுதான்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, பெட்ரோலுக்குக் கொடுத்து வந்த மானியத்தை முற்றிலுமாக நிறுத்திய மைய அரசு, அதன் விலையை நிர்ணயம் செய்யும் உரிமையை அதிகார வர்க்கக் கும்பலிடம் ஒப்படைத்தது; இதனையடுத்து, ஆண்டொன்றுக்கு 6 சமையல் எரிவாயு உருளைகள் மட்டுமே மானிய விலையில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, பின்னர் அந்த எண்ணிக்கை ஒன்பதாக உயர்த்தப்பட்டது. டீசலின் விலையை மாதாமாதம் 50 காசு உயர்த்தி விற்கும் முடிவினை அறிவித்து, டீசலுக்கு வழங்கி வந்த மானியத்திற்கும் மங்களம் பாடிவிட்டது, மைய அரசு. இந்தச் சீர்திருத்தங்களின் மூலம் பட்ஜெட்டிற்கு முன்பாகவே பல ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு எரிபொருள் மானியத்தை வெட்டித் தள்ளினார், ப.சிதம்பரம்.



கடந்த ஆண்டு (2012-13) பட்ஜெட்டில் உணவு மானியத்திற்கு 80,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. பின்னர், அதில் 5,000 கோடி ரூபாய் வெட்டப்பட்டு, உணவு மானியம் 75,000 கோடி ரூபாயாகச் சுருக்கப்பட்டது. மைய அரசு கொண்டு வந்துள்ள உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால், குறைந்தது 1,35,000 கோடி ரூபாய் மானியமாக ஒதுக்க வேண்டும் என்ற நிலையில், ப.சி., தனது பட்ஜெட்டில்

உணவு மானியத்திற்கு ஒதுக்கியிருக்கும் தொகை 90,000 கோடி ரூபாய்தான். உணவு மானியத்திற்கு 45,000 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கியிருப்பதைப் பற்றிப் பேச மறுக்கும் காங்கிரசு கும்பல், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு உணவு மானியத்திற்குச் சற்றுக் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைக் காட்டித் தன்னை ஏழைப் பங்காளனாகக் காட்டிக் கொள்ள முயலுகிறது.

இப்படி எரிபொருள், உணவு, உரம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட மானியங்களை வெட்டியதன் மூலம் அல்லது குறைவாக ஒதுக்கியதன் மூலம் 26,571 கோடி ரூபாயும்; கடந்த ஆண்டு பட்ஜெட்டில் கல்வி, சுகாதாரம், சாலை வசதி, பாசன வசதி உள்ளிட்ட சமூக நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வெட்டியதன் மூலம் ஏறத்தாழ 90,000 கோடி ரூபாயும் மக்களிடமிருந்து மறைமுகமாகப் பிடுங்கியிருக்கிறார், ப.சிதம்பரம். மேலும், பொதுத்துறை நிறுவனத்தின் பங்குகளையும், அலைக்கற்றை உள்ளிட்ட இயற்கை வளங்களையும் தனியாருக்குத் தாரை வார்ப்பதன் மூலம் 50,000 கோடி ரூபாய் திரட்டவும் திட்டமிட்டுள்ளார். நிதிப் பற்றாக்குறையைக் குறைக்க ப.சிதம்பரம் கையாண்டுள்ள இந்த வழிகளை ஜேப்படித் திருட்டுத்தனத்தோடு மட்டுமே ஒப்பிட முடியும்.



**கடந்த 2005-06 ஆம் ஆண்டு தொடங்கி 2012-13 ஆம் ஆண்டு முடியவுள்ள எட்டு ஆண்டுகளில் தங்கம், வைரம் மற்றும் நகைகளுக்கு வழங்கப்பட்ட கலால் மற்றும் சுங்கவரிச் சலுகைகள் 3,14,456 கோடி ரூபாயாகும். இதுவும் உள்ளிட்டு, கடந்த எட்டு ஆண்டுகளில் மேட்டுக்குடிப் பணக்காரர்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மொத்த வரிச்சலுகை 31,11,169 கோடி ரூபாய். வரிச்சலுகைகள் என்ற பெயரில் சட்டபூர்வமாக நடந்துவரும் இப்பகற்கொள்ளைதான் பற்றாக்குறை என்ற புதைசேற்றுக்குள் இந்தியாவைத் தள்ளிவிட்டுள்ளது.**

தனியார்மயம்-தாராளமயம் நடைமுறைக்கு வந்த பிறகு, நிதிப் பற்றாக்குறையைக் குறைக்க வேண்டும் என்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் கட்டளையை, இந்திய அரசு புனிதமான மதக் கட்டளையைப் போலக் கடைப்பிடித்து வருகிறது. தற்போதைய காங்கிரசு கூட்டணி அரசு மட்டுமின்றி, இதற்கு முன்பிருந்த அரசுகளும் கூட இக்கட்டளைக்கு ஏற்றபடிதான் பட்ஜெட்டைத் தயாரித்து வந்தன. பற்றாக்குறையைக் குறைப்பதற்கு மக்களுக்கு அளிக்கும் மானியங்களையும், சமூக நலத் திட்டங்களுக்குச் செலவு செய்வதையும் படிப்படியாக வெட்டுவது என்ற வழிமுறையைத்தான் இதற்கு முன்பிருந்த அரசுகளும் கடைப்பிடித்தன.

ப.சிதம்பரமும் இதேவழியில்தான் இந்த ஆண்டு பட்ஜெட்டைத் தயாரித்து, பற்றாக்குறையைக் குறைத்துக் காட்டியிருக்கிறார். பழைய கள்ளு புதிய மொந்தை என்றபடிதான் பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றபோதும், அடுத்த ஆண்டு தேர்தல் வரவுள்ள சூழ்நிலையில்கூட, விலைவாசி உயர்வு மக்களை வாட்டி வரும் வேளையிலும்கூட ப.சிதம்பரம் மானியங்களை வெட்டத் தயங்கவில்லை என்பதனால்தான் சர்வதேசத் தர நிர்ணய நிறுவனங்கள் சிதம்பரத்தின் பட்ஜெட்டைப் பாராட்டியுள்ளன.

கோடிக்கணக்கான மக்களுக்குக் கிடைக்க வேண்டிய மானிய உதவிகளை வெட்டியது குறித்து குற்ற உணர்வோ, வருத்தமோ கொள்ளாத ப.சிதம்பரம், கையளவேயான பணக்காரர்கள் (42,800 பேர்) மீது, அவர்கள் ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஈட்டும் வருமானத்தின் மீது மட்டும் கொஞ்சம் கூடுதலாக, எறும்பு கடித்தாற் போல வரி விதிக்க நேர்ந்த துயரத்திற்காகப் பெரிதும் சஞ்சலப்படுகிறார். ‘‘நாட்டிலுள்ள ஏழை மக்களின் நலன் கருதி இந்தக் கூடுதல் சுமையை நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும்’’ என மன்றாடும் ப.சிதம்பரம், இந்தக் கூடுதல் வரி விதிப்பை அடுத்த ஆண்டே ரத்து செய்துவிடுவதாக அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கிறார்.

‘‘பல லட்ச ரூபாய் மதிப்பு கொண்ட சொகுசுக் கார்கள் இந்தியச் சந்தையில் ஒவ்வொரு ஆண்டும் 27,000-க்கும் அதிகமாக விற்கப்படும் வேளையில்; இந்தியாவில் ஒவ்

வொரு ஆண்டும் 5.5 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டுவோரின் எண்ணிக்கை 1,25,000 ஆக இருக்கும் என சர்வதேசப் பொருளாதாரப் பத்திரிகைகள் குறிப்பிட்டு வரும் நிலையில், வெறும் 42,800 பேர்தான் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டுவதாக பட்ஜெட்டில் காட்டப்பட்டுள்ள கணக்கே மோசடியானது'' எனக் கேலி செய்கிறார், சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தைச் சேர்ந்த எஸ்.குருமூர்த்தி.




இந்த 42,800 பேர் மீது 3 சதவீத அளவிற்குக் கூடுதல் வருமான வரி விதிக்கப்பட்டிருப்பதை மட்டும் பெரிதுபடுத்தியிருக்கும் ப.சிதம்பரம், கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வருமான வரியில் மட்டும் 1,90,000 கோடி ரூபாய் அளவிற்கு இந்த பட்ஜெட்டில் வரி விலக்குகள் அளித்திருப்பதை வெளிப்படையாக அறிவிக்காமல் மூடிமறைத்திருக்கிறார்.

2012-13 ஆம் ஆண்டில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் மொத்த வரிச் சலுகைகள் 5,28,163 கோடி ரூபாய். அதே ஆண்டில் ஏற்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறை 5,20,925 கோடி ரூபாய். பட்ஜெட்டில் துண்டு விழுவதற்கான காரணத்தை இந்தப் புள்ளிவிவரமே தெளிவுபடுத்திவிடுகிறது.

2005-06 ஆம் ஆண்டு முதல் 2012-13 ஆம் ஆண்டு முடியவுள்ள காலக்கட்டத்தில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட 31,11,169 இலட்சம் கோடி ரூபாய் பெறுமான வரிச்சலுகைகள் இந்தியாவை நிதிப் பற்றாக்குறை என்ற புதைசேற்றுக்குள் மட்டும் சிக்க வைக்கவில்லை. கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சாதகமான தனியார்மயம் - தாராளமயம் என்ற இப்பொருளாதாரக் கொள்கை தேக்கவீக்கம் என்ற கட்டுமான நெருக்கடிக்குள்ளும் இந்தியாவைத் தள்ளிவிட்டுள்ளது. குறைந்த கூலி, சம்பள வெட்டு, வேலையிழப்பு, விலைவாசி உயர்வு, மானிய வெட்டு, விவசாய நசிவு என மக்கள் சந்தித்துவரும் பிரச்சினைகள் அனைத்தும் இந்நெருக்கடியின் விளைவுகளாகும்.

உலகமயம் இந்தியாவைப் பொருளாதார வல்லரசாக மாற்றிவிடும் என ஆளும்கும்பல் கூறி வந்த சரடுகளையெல்லாம் இந்தத் தேக்கவீக்கம் வெளுத்துப் போகச் செய்து விட்டதை இன்று யாராலும் மறைக்க முடியவில்லை. ''பொருளாதாரத் தேக்கம், விலைவாசி உயர்வு, நடப்புக் கணக்குப் பற்றாக்குறை ஆகியவைதான் நாம் தற்பொழுது எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள்'' எனத் தனது பட்ஜெட் உரையில் குறிப்பிட்டுள்ள ப.சிதம்பரம், இதிலிருந்து நம்மைக் காப்பாற்ற அந்நிய மூலதனத்திடம் சரணடைவதைத் தவிர வேறு நாதி நமக்கில்லை என்று பிரகடனம் செய்வதோடு, அந்நிய மூலதனத்திற்கு காட்டப்படும் சலுகைகளை யாரும் எதிர்க்கக் கூடாது என்றும் அறிவுரை சொல்கிறார்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த ரேஷன் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படுவதைப் பலப்படுத்தக் கூடாது; மாறாக, சில்லறை வர்த்தகத்தில் பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிக்க வேண்டும். நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் வரிச்சலுகைகள் மீதும் கைவைக்கக் கூடாது; அவர்கள் வரி ஏய்ப்பு செய்வதையும் கண்டுகொள்ளக் கூடாது; மாறாக, மக்களுக்கு வழங்கப்படும் மானியத்தை வெட்ட வேண்டும். இந்த மானிய வெட்டைக் கவர்ச்சிகரமான முறையில் நடைமுறைப்படுத்த ''உங்கள் பணம், உங்கள் கையில்'' திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைச் சமாளிக்க பங்குச் சந்தை, வங்கி, காப்பீடு, ஓய்வூதியம் உள்ளிட்ட நிதிச் சந்தையில் அந்நிய மூலதனத்திற்கு இருக்கும் கட்டுப்பாடுகளை அறவே நீக்க வேண்டும் - இவைதான் மன்மோகன் சிங் - ப.சிதம்பரம் கும்பல் தற்போதைய நெருக்கடியைத் தீர்க்க முன்வைக்கும் தீர்வுகள்.

எந்த விஷக்கிருமி இந்திய மக்களை மேலும் மேலும் வறுமை படுகுழிக்குள் தள்ளி வருகிறதோ, எந்த விஷக் கிருமி இந்தியப் பொருளாதாரத்தைத் தேக்க வீக்கம் என்ற கட்டமைப்பு நெருக்கடிக்குள் சிக்க வைத்ததோ, அதே விஷக் கிருமியை இன்னும் தீவிரமாக இந்தியாவிற்குள் இறக்கிவிட்டால், இந்தியா அடுத்த ஆண்டே 13 சதவீதப் பொருளாதார வளர்ச்சியைச் சாதித்துவிடும் என நம்மை நம்பச் சொல்கிறார், ப.சிதம்பரம். 13 சதவீத பொருளாதார வளர்ச்சி என்ற வாய்வீச்சு நிறைந்துள்ள ப.சிதம்பரத்தின் பட்ஜெட் பற்றிச் சுருக்கமாகச் சொன்னால், அது இந்தியாவைப் பன்னாட்டு நிதிச் சூதாடிகளிடம் முழுமையாக அடகு வைக்கும் இன்னொரு அடிமைச் சாசனம் தவிர வேறில்லை.

● செல்வம்

# ஹைதராபாத் குண்டுவெடிப்பு:

# காக்கிச்சட்டை வெளியே! காவிப்புத்தி உள்ளே!!

**அப்பாவி முசுலீம்கள் எவ்வித ஆதாரமும் இன்றித் தீவிரவாதிகளாக முத்திரை குத்தப்பட்டு வேட்டையாடப்படுவது நாடெங்கிலும் கேள்விமுறையின்றி நடந்து வருகிறது.**

**க**டந்த பிப்ரவரி மாதம் ஹைதராபாத் நகரில், தில்சுக் நகர் எனுமிடத்தில் நடந்த குண்டுவெடிப்பில் 16 பேர் இறந்துபோனார்கள்; ஏறத்தாழ நூறு பேர் படுகாய மடைந்தனர். இந்தக் குண்டு வெடிப்பு தொடர்பாக விசாரணை தொடங்கும் முன்பே, இன்னும் சொல்லப் போனால் குண்டுவெடிப்பில் இறந்து போனவர் களையும் காயமடைந்தவர்களையும் அப்புறப்படுத்தும் முன்னரே, ‘‘அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதற்குப் பழி தீர்த்துக் கொள்வதற்காகவே இக்குண்டு வெடிப்பு நடத் தப்பட்டதாகவும்; இந்தியன் முஜாஹிதீன் என்ற முசுலீம் தீவிரவாத அமைப்புதான் இக்குண்டு வெடிப்பை நடத் தியதாகவும்’’ மைய அரசு, மாநில அரசு, போலீசு, உளவுத் துறை, பத்திரிகைகள், தொலைக்காட்சி ஊடகங்கள் என அனைத்து நிறுவனங்களும் ஒரே குரலில் அடித்துக் கூறின.

ஆனால், இக்குண்டு வெடிப்பு நடந்து ஒரு மாதத் திற்கு மேலாகிவிட்ட பின்னும் இக்குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக ஒரு துரும்பைக்கூட போலீசாலும் உளவு நிறு வனங்களாலும் காட்ட முடியவில்லை. இக்குண்டு வெடிப்பு குறித்து தற்பொழுது போலீசிடமும் உளவுத் துறையிடமும் இருப்பதெல்லாம் ஏதாவதொரு முசுலீம் தீவிரவாதி அமைப்பு இக்குண்டு வெடிப்பை நடத்தி யிருக்கலாம் என்ற சந்தேகம் மட்டும்தான். இப்படி யொரு சந்தேகம் கொள்வதற்குக்கூட அதனிடம் வலு வான ஆதாரங்கள் கிடையாது. மாறாக, நாடெங்கும் போலீசுத்துறையிடம் ஊறிப்போயுள்ள முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறி அரசியல் அடிப்படையிலிருந்து மட்டுமே இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

இது காழ்ப்புணர்ச்சி காரணமாக போலீசு மீது சுமத் தப்படும் அபாண்டமான குற்றச்சாட்டு அல்ல. ‘‘ஏதா வது தீவிரவாதத் தாக்குதல் நடந்தால், அது முசுலீம்களின் வேலையாகத்தான் இருக்கும்; அந்த முசுலீம் இந்தியன் முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்தவனாகத்தான் இருப் பான். இந்தியன் முஜாஹிதீன் அமைப்பு பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ., உத்தரவுப்படிதான் இயங்கியிருக்கும் என்று தான் தற்பொழுது போலீசு சிந்திப்பதாக’’ ராமன் என்ற முன்னாள் உளவுத்துறை அதிகாரி கூறியிருப்பதை முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியும் பிரஸ் கவுன்சில் தலைவருமான மார்க்கண்டேய கட்ஜுவும் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

எனினும், ஆந்திர மாநில போலீசோ தனது சந்தே கத்தை மட்டுமே முன்னிறுத்தி இக்குண்டு வெடிப்பு தொடர்பாக பல அப்பாவி முசுலீம் இளைஞர்களைச் சட்டவிரோதமாகக் கைது செய்து விசாரணை நடத்தி வரு கிறது. இந்த அப்பாவி முசுலீம் இளைஞர்களுள் முப்பத் திரண்டு வயதான முகம்மது ரயீசு தினும் ஒருவர்.

ஹைதராபாத் - தில்சுக் நகரில் குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் தடயங்களைச் சேகரிக்கும் போலீசு.




ஆந்திர போலீசார் ரயீசு தினைத் தீவிரவாதி என முத்திரை குத்தி வேட்டையாடுவது இது முதன் முறை யல்ல. 2007-ஆம் ஆண்டு ஹைதரா பாத் நகரில் நடந்த தொடர் குண்டு வெடிப்பு வழக்கிலும் ரயீசுதின் ஹைத ராபாத் நகர போலீசாரால் கைது செய் யப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டார். இரண்டு ஆண்டு சிறைவாசத்திற்குப் பின் நீதிமன்றம் அவரைக் குற்ற மற்றவர் எனக் கூறி விடுதலை செய்தது. பொய் வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டதால் ஆந்திர மாநில அரசு ரயீசுதினுக்கு நட்ட ஈடு வழங்கி யது. ஆனாலும், போலீசு ரயீசுதினைத் தீவிரவாதிகள் பட்டியலில் வைத்தே கண்காணித்து வருகிறது. ரயீசுதின்,

தில்சுக் நகரில் நடந்த குண்டுவெடிப்பில் எதிர்பாராதவிதமாகச்சிக்கிக் காயமடைந்ததையே காரணமாகக் காட்டி, குண்டு வைக்க போனபொழுது அவர் காயமடைந்திருக்கலாம் என்ற கதையைக் கட்டி, அவரைச் சந்தேகத்தின் பேரில் சட்டவிரோதமாகத் தூக்கிச் சென்று விசாரணை நடத்தியது, ஹைதராபாத் போலீசு.

முசுலீம் இளைஞர்களை போலீசு வேட்டையாட, ஏதாவதொரு குண்டு வெடிப்போ அல்லது தீவிரவாதத் தாக்குதலோ நடக்க வேண்டும் என்ற கட்டாயம்கூட இப்பொழுது அருகிவிட்டது. போலீசும் உளவுத்துறையும் தாங்கள் இயங்கி வருகிறோம் எனக் கணக்குக் காட்டுவதற்கே, முசுலீம் தீவிரவாதத் தாக்குதல் பீதியைக் கிளப்பிவிடுவதையும்; தாங்கள் கிளப்பிவிடும் பீதியையே ஆதாரமாகக் காட்டி முசுலீம் இளைஞர்களைக் குறிவைத்துத் தூக்குவதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ளன.

பெங்களூரு நகர போலீசு கடந்த ஆகஸ்டு மாதம் பெங்களூரு மற்றும் ஹூப்ளியில் 15 முசுலீம் இளைஞர்களை வீடு புகுந்து கைது செய்தது. பெங்களூரு போலீசார் கொடுத்த தகவலின் அடிப்படையில் மகாராஷ்டிரா போலீசார் நான்டேட் நகரைச் சேர்ந்த 4 இளைஞர்களைக் கைது செய்தனர். ‘‘இந்த 19 இளைஞர்களும் பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர்-இ-தொய்பா மற்றும் ஹர்கத்-உல்-ஜிஹாத்-அல்-இஸ்லாமி என்ற இரு தீவிரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள்; கர்நாடகாவைச் சேர்ந்த முக்கியமான அரசியல் தலைவர்களையும் பத்திரிகையாளர்களையும் கொல்லும் திட்டத்தோடு இவர்கள் இயங்கி வந்தனர். இக்கும்பலைச் சேர்ந்த ஹகீன் ஜமாதார், ஷோயிப் அகமது ஆகிய இருவரையும் நாங்கள் அவர்கள் அறியாமலேயே வேவு பார்த்து வந்தோம். இந்த இருவரும் ஆகஸ்டு 29 அன்று கன்னட பிரபா பத்திரிகையைச் சேர்ந்த பிரதாப் சிம்ஹா என்ற பத்திரிகையாளரைச் சுட்டுக் கொல்ல முயன்றபோது, நாங்கள் இந்த இருவரையும் அமுக்கிப் பிடித்து விசாரித்து, இந்தக் கும்பலின் திட்டத்தை முறியடித்ததோடு, மற்றவர்களையும் கைது செய்தோம்’’ - என இந்தக் கைதுகள் குறித்து போலீசு ஒரு சுவாரசியமான கதையை அவிழ்த்து விட்டது.

டெல்லியில் குண்டு வைக்க வந்த தீவிரவாதி என்று டெல்லி போலீசாராலும்; பாகிஸ்தானிலிருந்து சரணடைய வந்த முன்னாள் தீவிரவாதி என காஷ்மீர் அரசாலும் கூறப்படும் லியாகத் அலிஷா (வட்டத்துக்குள்).






2007-ஆம் ஆண்டு ஹைதராபாத் நகரில் நடந்த குண்டுவெடிப்பு தொடர்பாகக் கைது செய்யப்பட்டு, பின்னர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட முசுலீம் இளைஞர்கள், இந்திய அரசை மன்னிப்புக் கேட்கக் கோரி நடத்திய ஆர்ப்பாட்டம் (கோப்புப் படம்).

போலீசால் கைது செய்யப்பட்ட இந்த 19 இளைஞர்களுள் ஒருவரான அய்ஜஸ் அகமது மிர்ஸா இந்திய இராணுவத்தின் ஆராய்ச்சி அமைப்பில் இளம் ஆராய்ச்சியாளராக வேலை பார்த்து வந்தார்; முத்தி-உர்-ரஹ்மான் சித்திக் டெக்கான் ஹெரால்டு என்ற ஆங்கிலப் பத்திரிகையைச் சேர்ந்த நிருபர்; இரண்டு இளைஞர்கள் முதுகலை மருத்துவ மாணவர்கள்; மற்றொருவர் கணினிப் பொறியாளர்.

இந்த இளைஞர்கள் அனைவரும் ஒரு மாதம் வரை போலீசு காவலில் வைத்து விசாரிக்கப்பட்டனர். எனினும், இவர்கள் குறித்து போலீசு புனைந்த கதைக்கு எந்தவொரு சிறு ஆதாரத்தையும் போலீசால் காட்ட முடியவில்லை. ‘‘இவர்களுக்குச் சர்வதேச முசுலீம் தீவிரவாத அமைப்புகளோடு தொடர்பு கிடையாது; தீவிரவாதத் தாக்குதல் நடத்தும் திட்டமும் இவர்களிடம் இல்லை’’ என்ற உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு பெங்களூரு நகர போலீசு தள்ளப்பட்டது. எனினும், சட்டவிரோதமான முறையில் இந்த இளைஞர்களைக் கைது செய்ததை நியாயப்படுத்துவதற்காக, இந்த இளைஞர்கள் உள்ளூர் தீவிரவாதிகள் எனக் குற்றஞ்சுமத்தியிருக்கிறது, போலீசு.

கர்நாடகா பா.ஜ.க. அரசு புனைந்துள்ள இந்தப் பொய் வழக்கின் விசாரணையைத் தற்பொழுது மைய அரசின் தேசியப் புலனாய்வு அமைப்பு நடத்தி வருகிறது. இந்த 19 இளைஞர்களுள் 15 பேர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலான பிறகும் நான்கு இளைஞர்கள் மீது எந்தவொரு குற்றச்சாட்டையும் சுமத்த முடியாமல் போனதால், அவர்களைக் கடந்த மார்ச் மாதம் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்திருக்கிறது.

விடுதலையானவர்களுள் இளம் ஆராய்ச்சியாளரான அய்ஜஸ் அகமது மிர்ஸாவும் ஒருவர். அவர் குற்றமற்றவர் என்ற உண்மை ஏறத்தாழ சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமான பிறகும்கூட, இந்திய இராணுவம் அவரைத் திரும்ப வேலைக்கு அமர்த்திக் கொள்ளாமல், அவர் பிணையில் விடுதலையான அதே நாளில் அவரை வேலையிலிருந்து தூக்கியடித்துவிட்டது.

இந்து மதவெறிக் கும்பல் நடத்திய குண்டு வெடிப்பு வழக்குகளில் முக்கியக் குற்றவாளியாகக் கைது செய்யப்பட்டுள்ள கர்னல் புரோகித் விவகாரத்தில், இந்திய இராணுவம் இதே அளவுகோலைப் பயன்படுத்தவில்லை. இந்திய இராணுவம் கர்னல் புரோகித்தை இன்னமும் பதவியிலிருந்து விலக்காமல், சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கும் ஒருதலைப்பட்சமான அணுகுமுறையை அம்பலப்படுத்தியிருக்கிறது, ஜமாத் இஸ்லாமி ஹிந்த் என்ற அமைப்பு.

இந்து மதவெறிக் கும்பலின் தளபதியான மோடியின் குஜராத் அரசு மட்டுமல்ல, மதச்சார்பின்மை பேசும் ஓட்டுக்கட்சிகள் ஆளும் மாநில அரசுகள்கூட முசுலீம் தீவிரவாத பீதியைக் கிளப்பி, தம் மனம்போன போக்கில் முசுலீம்களைக் கைது செய்வதில் மும்மரமாக உள்ளன. ''அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதற்கு பழிவாங்கும் விதத்தில் டெல்லி நகரில் குண்டு வைக்கும் நோக்கத்தோடு, பாகிஸ்தானிலிருந்து சட்டவிரோதமான முறையில் டெல்லிக்கு வந்த ஹிஸ்புல் முஜாஹிதீன் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த காஷ்மீரியான லியாகத் என்ற தீவிரவாதியைக் கைது செய்ததோடு, அவரிடமிருந்து ஏ.கே.47 துப்பாக்கி உள்ளிட்டுப் பல்வேறு வெடிபொருட்களையும் கைப்பற்றியிருப்பதாக'' டெல்லி போலீசு சமீபத்தில் அறிவித்தது. ஆனால், டெல்லி போலீசால் கைது செய்யப்பட்டுள்ள காஷ்மீரைச் சேர்ந்த லியாகத், பாகிஸ்தானிலிருந்து சரணடையும் நோக்கத்தோடுதான் இந்தியாவிற்கு வந்ததாகவும்; தங்கள் மாநில போலீசு அவர் சரணடைவதற்கு அனுமதித்திருப்பதையும் எடுத்துக் கூறி, டெல்லி போலீசின் பித்தலாட்டத்தை காஷ்மீர் மாநில முதல்வர் உமர் அப்துல்லாவே அம்பலப்படுத்தியிருக்கிறார்.



கர்நாடகா மாநில போலீசாரால் தீவிரவாதி என்ற முத்திரை குத்தப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட இளம் ஆராய்ச்சியாளர் அய்ஜஸ் அகமது மிர்ஸா (இடது) மற்றும் பத்திரிகையாளர் முத்தி - உர் - ரஹ்மான் சித்திக்.

போலீசும் உளவுத்துறையும் பரிசு, பதவி உயர்வுக்காகவே இது போன்ற பித்தலாட்டங்களில் ஈடுபட்டு, அப்பாவி முசுலீம்களைக் கைது செய்து, பொய் வழக்குகளில் சிக்க வைத்து வதைத்து வருவது அடுத்தடுத்து அம்பலமாகி வந்தாலும், ஆட்சியாளர்களும் நீதிமன்றங்களும் போலீசின் இந்த அதிகார அத்துமீறல்களைக் கண்டித்து ஒரு வார்த்தைகூடப் பேச மறுக்கின்றனர். முசுலீம் இளைஞர்கள் சட்டவிரோதமான முறையில் பொய் வழக்குகளில் கைது செய்யப்பட்டு, நீண்ட காலம் சிறையில் அடைக்கப்பட்டு வருவது குறித்து சி.பி.எம். நாடாளுமன்ற உறுப்பினர் பாசு தேவ் ஆச்சாரியா எழுப்பிய கேள்விக்கு, ''மைய அரசிடம் அந்த முசுலீம் இளைஞர்கள் குறித்தெல்லாம் எந்தவிதமான ஆவணப் பதிவுகளும் கிடையாது'' எனத் தான்தோன்றித்தனமாகவும் திமிராகவும் பதில் அளித்திருக்கிறார், உள்துறை அமைச்சர் சுசில்குமார் ஷிண்டே.

தில்சுக் நகர் குண்டுவெடிப்பு தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட முகம்மது ரயீசுதீன்.



குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் 1994-ஆம் ஆண்டு ஜகந்நாத் பூரி ரத யாத்திரை நடந்த சமயத்தில் மதக் கலவரத்தைத் தூண்டிவிட முயன்றதாகக் கைது செய்யப்பட்டு, தடா சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 11 முசுலீம்களை விடுதலை செய்த உச்ச நீதிமன்றம், அவர்கள் மீது பொய்வழக்கு புனைந்த போலீசு அதிகாரிகளைக் கண்டிப்பதற்கு மாறாக, ''தீவிரவாதத் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பணிபுரிந்து வரும் போலீசு அதிகாரிகளின் பதற்றத்தையும், அப்பணியின்பொழுது அவர்கள் சந்திக்கும் இடர்ப்பாடுகளையும் நீதிமன்றம் புரிந்துகொள்வதாக'' அத்தீர்ப்பில் குறிப்பிட்டு, போலீசின் அத்துமீறல்களுக்கு வக்காலத்து வாங்கியிருக்கிறது.

தேசிய மற்றும் உள்ளூர் பத்திரிகைகள் இது போன்ற வழக்குகளில் போலீசின் ஊதுகுழல்களாகவே செயல்பட்டு வருகின்றன. ஹைதராபாத் குண்டு வெடிப்பு வழக்கில், ''குண்டு வெடிப்பை நடத்துவதற்கு தீவிரவாதிகள் எப்படியெல்லாம் திட்டம் தீட்டினார்கள்'' என்றெல்லாம் புலனாய்வு என்ற பெயரில் தெலுங்கு ஊடகங்கள் முசுலீம்களுக்கு எதிரான அவதூறு பிரச்சாரத்தை நடத்தியுள்ளன. பெங்களூரு வழக்கில், ''பத்திரிகையாளர் முத்தி-உர்-ரஹ்மான் சித்திக், இராணுவ ஆராய்ச்சியாளர் அய்ஜஸ் அகமது மிர்ஸா ஆகிய இருவர்தான் இந்த நடவடிக்கையின் மூளைகள்'' என்றவாறு கன்னட ஊடகங்களால் கதை கட்டப்பட்டன. அந்த இருவர் மீதும் போலீசால் எந்தவிதமான குற்றச்சாட்டையும் சுமத்த முடியவில்லை என்ற உண்மை அம்பலமான பின்னரும்கூட, கன்னட ஊடகங்கள் தங்கள் அவதூறு பிரச்சாரத்திற்கு மன்னிப்புக் கேட்க முன்வரவில்லை.

பீற்றிக் கொள்ளப்படும் இந்திய ஜனநாயகத்தின் நான்கு தூண்களும் முசுலீம் வெறுப்பு இந்து மதவெறி பாசிச அரசியலில் ஊறிப் போயிருப்பதைத்தான் இந்தச் சம்பவங்கள் அழுந்தச் சொல்லுகின்றன.

● குப்பன்

# இஸ்லாமிய மதவெறியர்களுக்கு எதிராக வங்கதேச மக்களின் எழுச்சி!

**போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இஸ்லாமிய மதவெறியர்களைத் தண்டிக்கக் கோரி வங்கதேச மக்கள் நடத்திவரும் போராட்டங்கள் முசுலீம்கள் குறித்துப் பரப்பப்படும் அவதூறுகளை உடைத்தெறிகிறது.**

முஸ்லிம்கள் என்றால் ஜனநாயக உணர்வற்ற பழைமைவாதிகள், இஸ்லாமிய மதவெறியிலும் பிற்போக்குத்தனத்திலும் ஊறிக் கிடப்பவர்கள் என்று இந்துத்துவ ஆளும் வர்க்கங்களால் சித்தரிக்கப்படும் தவறான கருத்துதான் நமது நாட்டில் நிலவுகிறது. ஆனால், இது எவ்வளவு பச்சைப்பொய் என்பதை அண்டை நாடான வங்கதேசத்தின் மக்கள் இஸ்லாமிய மதவெறிக் கொடுங்கோலர்களுக்கு எதிரான போராட்டங்களின் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

அண்டை நாடான வங்கதேசத்தில் கடந்த பிப்ரவரி மாதத்தின் தொடக்கத்திலிருந்து இஸ்லாமிய மதவெறியர்களுக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து முன்னேறி வருகிறது. இஸ்லாமிய மதவெறிக் கட்சியான ஜமாத்-இ-இஸ்லாமியின் குண்டர்கள் பயங்கரவாதத் தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்டுப் போராடும் மக்களை அச்சுறுத்திய போதிலும், அவற்றைத் துச்சமாக மதித்து வங்கதேச மக்கள் நீதிக்காகவும், மதச்சார்பற்ற ஜனநாயகத்துக்காகவும் தொடர்ந்து உறுதியாகப் போராடி வருகின்றனர்.

வங்கதேசத்தில் - அதாவது, பாகிஸ்தானின் மாநிலமாக இருந்த அன்றைய கிழக்கு பாகிஸ்தானில், 1970-இல் நடந்த தேர்தலில் வங்கதேசத்துக்குக் கூடுதல் தன்னாட்சி உரிமை வேண்டுமென்ற மக்களின் கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்ட ஷேக் முஜிபுர் ரஹ்மான் தலைமையிலான அவாமி லீக் கட்சி 99 சதவீத அளவுக்கு மிக அதிக இடங்களைக் கைப்பற்றியது. இப்பெரும்பான்மையைக் கொண்டு முஜிபுர் ரஹ்மான் ஒட்டுமொத்த (கிழக்கு, மேற்கு) பாகிஸ்தானுக்கும் பிரதமராகும் நிலை ஏற்பட்டது. இதை மேற்கு பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து, வங்கதேசத்தில் நாடு தழுவிய போராட்டங்கள் வெடித்துப் பரவின. பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்கள் வங்கதேச மக்கள் மீதும் அவாமி லீக் கட்சியினர் மீதும் மிகக்கொடிய இனப்படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்டனர். வங்கதேச மதவெறிக் கட்சியான ஜமாத் -இ- இஸ்லாமி, பாகிஸ்தான் ஆட்சியாளர்களுடன் வெளிப்படையாகக் கைகோர்த்துக் கொண்டு போராடும் மக்களுக்கு எதிரான வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டது. தமது மாணவர்-இளைஞர் அமைப்புகளைக் கொண்டு ரசாக்கர்கள் எனப்படும் இரகசிய குண்டர்படைகளையும், அல்-பதார் எனும் கொலைக்குழுக்களைக் கட்டியமைத்து முன்னணியாளர்களையும் அறிவுத்துறையினரையும் கோரமாகக் கொன்றொழித்தது.

“போர்க்குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதித்து, ஜமாத் இ இஸ்லாமி கட்சியைத் தடை செய்!” - டாக்காவின் ஷாபாக் சதுக்கத்தில் நடந்த மக்களின் பேரெழுச்சி.



இராணுவ அடக்குமுறைக்கும் இனப்படுகொலைக்கும் எதிராகப் போராடிய வங்கதேச மக்கள், முக்தி பாஹினி எனும் இயக்கத்தின் மூலம் பாகிஸ்தானிலிருந்து முற்றாக விடுதலை பெறுவதற்கான போராட்டமாக முன்னெடுத்துச் சென்றனர். வங்கதேச விடுதலைப் போரின்போது, ஏறத்தாழ 30 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டு, பெண்களில் நான்கில் ஒரு பங்கினர் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு, ஒரு கோடிப் பேர் அகதிகளாக இந்தியாவில் தஞ்சமடைந்தனர். இந்த அவலத்தைச்



ஜமாத் கட்சியின் குண்டர்களால் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்ட ரஜீப் ஹைதரின் இறுதி ஊர்வலம். உள்ளே: ஜமாத் கட்சியின் அட்டூழியங்களை எதிர்த்து இணையத்தின் மூலம் போராட்டத்துக்கு அணிதிரட்டிய நாத்திக இளைஞர் ரஜீப் ஹைதர்.

சாதகமாக்கிக் கொண்டு, பிராந்திய விரிவாக்க நோக்கத்துடன் அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் வங்கதேச விடுதலைப் போரை ஆதரித்து, முக்திபாஹினி இயக்கத்தின் பெயரால் 1971, டிசம்பர் 3 அன்று இந்திய இராணுவத்தைக் கொண்டு வங்கதேசத்தில் வெளிப்படையாகத் தலையிட்டார். பாகிஸ்தான் இப்போரில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, டிசம்பர் 16 அன்று முஜிபுர் ரஹ்மானை அதிபராகக் கொண்ட வங்க தேசம் என்ற தனிநாடு உருவானது. போர் முடிவுக்கு வரும் முன்னரே, வங்கதேச இடைக்கால அரசாங்கம் மதவாத அரசியல் கட்சிகளைத் தடை செய்தது.

புதிய நாடு உருவான பின்னர், போர்க்குற்றவாளிகளுக்கு எதிரான விசாரணை நடத்தித் தண்டிக்கக் கோரி மக்களின் போராட்டங்கள் தொடர்ந்தன. இருப்பினும் கொலைகள், பாலியல் வல்லுறவு போன்ற கொடிய குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு 1973-இல் முஜிபுர் அரசு பொது மன்னிப்பு அளித்ததேயன்றி, குற்றவாளிகளுக்கு எதிரான விசாரணை தொடங்கப்படவில்லை. முஜிபுர் ரஹ்மானின் ஆட்சியானது, நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முடியாமல், ஒரு கட்சி சர்வாதிகாரத்தைக் கொண்டு மக்களின் போராட்டங்களை ஒடுக்கியது.

பின்னர், 1975-இல் நடந்த இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பில் முஜிபுர் கொல்லப்பட்டு, இராணுவத் தளபதியான ஜியா உர் ரஹ்மான் நாட்டின் அதிபரானார். இந்த இராணுவ ஆட்சியாலும் நாட்டின் அரசியல், பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்க முடியாத நிலையில், இராணுவக் கட்டுப்பாட்டின் கீழான நாடாளுமன்ற போலி ஜனநாயக ஆட்சிமுறையைக் கொண்டு வந்ததோடு, மதவாதக் கட்சிகளின் மீதான தடையையும் ஜியா நீக்கினார்.

இருப்பினும், விடுதலைப் போரில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக நின்று போர்க்குற்றங்களில் ஈடுபட்ட காரணத்தால் ஜமாத் கட்சிக்கு தேர்தலில் நிற்க அங்கீகாரம் கிடைக்கவில்லை. இந்தியாவில் இந்துத்துவப் பரிவாரங்கள் பின்பற்றிய உத்தியுடன், வங்கதேச ஜமாத் கட்சியானது, இஸ்லாமிய ஜனநாயக லீக் என்ற பெயரில் தேர்தலில் போட்டியிட்டது. அதன் இளைஞர்-மாணவர் அமைப்புகள் இஸ்லாமி சத்ர ஷிபிர் என்ற பெயரில் மறுஅவதாரம் பெற்றன. பின்னர் 1982-இல் மீண்டும் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடந்து ஹுசைன் முகம்மது எர்ஷாத் அதிபரான பின்னரே, ஜமாத் கட்சி தனது சொந்தப் பெயரிலேயே செயல்படத் தொடங்கியது.

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழான இந்த ஆட்சியும் தொடர்ந்து நீடிக்க முடியாமல், 1991-இல் நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தின் அடிப்படையில் வங்கதேசத்தில் தேர்தல்கள் நடந்தன. முஜிபுர் ரஹ்மானின் மகள் ஷேக் ஹசீனா பேகம் தலைமையிலான அவாமி லீக் கட்சியும், ஜியா உர் ரஹ்மானின் மனைவி பேகம் கலீதா ஜியா தலைமையிலான வங்கதேச தேசியக் கட்சியும் மாறி மாறி தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி செய்தன. ஆண்டுகள் பல கடந்த போதிலும், போர்க் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமென்ற வங்கதேச மக்களின் நீதிக்கான உணர்வு மங்கிவிடாமல் நீறுபூத்த நெருப்பாகவே நீடித்து வந்தது.

இந்நிலையில், 1971 விடுதலைப் போரின் போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது விசாரணை நடத்தித் தண்டிப்பதாகக் கடந்த 2008 தேர்தலின் போது வாக்களித்து ஆட்சிக்கு வந்தார், அவாமி லீக் கட்சியின் தலைவியான ஹசீனா பேகம். அதன்படி, 2009-ஆம் ஆண்டு 3 உறுப்பினர் கொண்ட பன்னாட்டு போர்க்குற்ற விசாரணை நீதிமன்றம், 7 உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக் குழு, 12 உறுப்பினர்களைக் கொண்ட வழக்குரைஞர்கள் குழு - ஆகியன உருவாக்கப்பட்டன. இப்போர்க்குற்ற விசாரணை மன்றம், பாகிஸ்தானுக்குத் தப்பியோடித் தலைமறைவாகிவிட்ட அப்துல் கலாம் ஆசாத் என்ற போர்க்குற்றவாளிக்கு கடந்த ஜனவரி 2013 -இல் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

ஜமாத் இ இஸ்லாமி கட்சியின் முக்கியத் தலைவரும், மீர்பூரின் கசாப்புக் கடைக்காரன் என்று மக்களால் காறி உமிழப்படும் போர்க்குற்றவாளியுமான அப்துல் காதர் மொல்லாவுக்கு கடந்த பிப்ரவரி 5 அன்று இந்த





தண்டிக்கப்பட்டபோர்க்குற்றவாளிகள்: ''மீர்பூரின் கசாப்புக்கடைக்காரன்'' என்று மக்களால் காறி உமிழப்படும் ஜமாத் கட்சியின் முக்கிய தலைவரான அப்துல் காதர் மொல்லா (இடது). மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஜமாத் கட்சியின் துணைத் தலைவர் தெல்வார் ஹுசைன் சயீதி.

விசாரணை நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. அதைத் துச்சமாக மதித்து, அப்துல் காதர் மொல்லாவும் ஜமாத் கட்சியின் குண்டர்களும் இரண்டு விரல்களைக் காட்டி வெற்றிப் பெருமிதத்துடன் ஆரவாரமாக நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்ததைக் கண்டு ஆத்திரமடைந்த மக்கள், அவனுக்கு மரண தண்டனை விதிக்கக் கோரி தலைநகரான டாக்காவிலுள்ள ஷாபாக் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். பிப்ரவரி 5-ஆம் தேதியன்று ஷாபாக் சதுக்கத்தில் தொடங்கிய இந்த ஆர்ப்பாட்டம், ''போர்க்குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும், பயங்கரவாத மதவெறிக் கட்சியான ஜமாத் இ இஸ்லாமியைத் தடை செய்ய வேண்டும்'' என்ற கோரிக்கையுடன் முழக்கத் தட்டிகள், கருத்தோவியங்கள், கேலிச்சித்திரங்கள், கொடும்பாவி எரிப்பு - எனப் பல்வேறு வடிவங்களுடன் காட்டுத்தீயாக நாடெங்கும் பரவியது. 1971-இல் ஒவ்வொரு வங்காளிக் குடும்பமும் தமது உறவினர்களைப் பறிகொடுத்துள்ளதால், எத்தனை ஆண்டுகளானாலும் இக்கொடிய வன்கொடுமையை மக்கள் மறக்கத் தயாராக இல்லை.

இதைக்கண்டு ஆத்திரமடைந்த ஜமாத் கட்சியின் குண்டர்கள் போராடும் மக்கள் மீது வெடிகுண்டுகளை வீசி எதிர்ப்போராட்டங்களை நடத்தினர். இணையத்தின் மூலம் ஜமாத் கட்சியின் அட்டூழியங்களை எதிர்த்துப் போராட்டத்துக்கு அணிதிரட்டிய நாத்திகரான அகமது ரஜீப் ஹைதர் என்ற இளைஞர், ஜமாத் கட்சியின் சத்ர ஷிபிர் எனும் மாணவர் அமைப்பின் குண்டர்களால் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டார். ஜமாத்தின் மாணவர் அமைப்பானது, போலீசையும் பத்திரிகையாளர்களையும் கொடூரமாகத் தாக்கியதோடு, பொதுச்சொத்துக்களையும் நாசமாக்கிக் கையெறி குண்டுகளை வீசி வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டு அச்சுறுத்தியது. இந்தத் தாக்குதலில் ஜமாத் குண்டர்களும் போலீசாரும் உள்ளிட்டு ஏறத்தாழ 80 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இருப்பினும், இந்த அச்சுறுத்தல்களால் மக்களின் போராட்டத்தைத் தடுக்க முடியவில்லை. ஜமாத் கட்சியின் வர்த்தக அமைப்புகளான இஸ்லாமி வங்கி, ஐ.பி.என். சினா உள்ளிட்ட இதர நிறுவனங்களையும், டிகந்தா தொலைக்காட்சி, நயா டிகந்தா தினசரி, அமர்தேஷ், சங்க்ராம் நாளேடு, சோனார் பங்களா வலைத்தளம் உள்ளிட்ட ஊடகங்களையும், ஜமாத் கட்சியின் கல்வி மற்றும் கலாச்சார நிறுவனங்களையும் தடை செய்யுமாறும், ராசாக்கர்கள் - அல் பதார் குண்டர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து அவர்களைத் தண்டிக்கக் கோரியும் வங்கதேச மக்கள் போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றனர். பிப்ரவரி 28 அன்று போர்க்குற்ற விசாரணை நீதிமன்றம் ஜமாத் இ இஸ்லாமியின் துணைத் தலைவரான தெல்வார் ஹுசைன் சயீதிக்கு மரண தண்டனை விதித்ததும், போராடும் மக்கள் இதனை நாடெங்கும் திருவிழா போலக் கொண்டாடினர். போர்க்குற்றவாளிகளுக்கும் மதவெறியர்களுக்கும் எதிராக மாபெரும் எழுச்சியை வங்கதேச மக்கள் நடத்தியுள்ள போதிலும், பிரித்தாளும் சூழ்ச்சியைக் கொண்டுள்ள ஏகாதிபத்தியவாதிகளும் இந்திய ஆட்சியாளர்களும் இப்போராட்டம் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து இருட்டடிப்பு செய்து வருகின்றனர்.

முன்னணியாளர்கள் பலரும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்க்கட்சியான கலீடா ஜியாவின் வங்கதேச தேசியக் கட்சியின் ஆதரவோடு ஜமாத் கட்சியின் ஒரு சிறுகும்பல் வன்முறை வெறியாட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. வங்கதேச சிறுபான்மை இந்துக்களைத் தாக்கியும் இந்துக் கோயில்களைச் சேதப்படுத்தியும் பிரச்சினையைத் திசை திருப்ப இக்கும்பல் முயற்சிக்கிறது. இந்தியாவின் சதி, நாத்திக சதி, காஃபிர்களின் சதி என்றெல்லாம் அவர்கள் கூச்சலிட்டாலும், வங்கதேச மக்கள் இஸ்லாமிய மத வெறியர்களைத் தண்டிப்பதில் ஓரணியில் நின்று உறுதியாகப் போராடி வருகின்றனர்.

''நீ யாரென்று கேட்டால், நான் வங்காளி என்று சொல்!'' என்ற முழக்கத்தோடு போராடும் வங்கதேச மக்கள் இஸ்லாத்தையும் இஸ்லாமிய மதவெறியையும் விட வங்காள தேசியத்தையே பெருமிதமாகக் கருதுகின்றனர். இத்தகைய மக்கள்திரள் போராட்டங்களின் மூலம்தான் எந்த நாட்டிலும் மதவெறியர்களையும் போர்க்குற்றவாளிகளையும் தண்டிக்க முடியுமே தவிர, கடுமையான காகிதச் சட்டங்களாலோ, மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் தயவினாலோ அல்ல என்பதை வங்கதேச மக்கள் போராட்டம் படிப்பினையாக உணர்த்துகிறது. இந்து வெறி பயங்கரவாதிகளுக்கு எதிராக நம்நாட்டிலும் இத்தகைய மக்கள் போராட்டங்கள் பெருகும்போது, இந்து வெறி பாசிசப் பரிவாரங்கள் தண்டிக்கப்பட்டு, வரலாற்றின் குப்பைத் தொட்டியில் வீசியெறியப்படுவார்கள்.

● குமார்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

- அறிவியல் கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் வகையில், ''ஈழத் தமிழரின் தன்னுரிமைக்கான மாணவர் முன்னணி'' என்ற அமைப்பினை உருவாக்கிப் போராடி வருகின்றனர்.



17.03.2013 அன்று தியாகராய கல்லூரி மாணவர்களை அணிதிரட்டி சென்னை மத்திய ரயில் நிலையத்திலிருந்து தில்லி செல்லும் ரயில்களை மறித்து முற்றுகையிட்டு ஆர்ப் பாட்டத்தை நடத்திய ஈழத் தமிழரின் தன்னுரிமைக்கான மாணவர் முன்னணி, 18.3.2013 அன்று ஜெயின் கல்லூரி, பொன்னேரி அரசு கலைக்கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி உள்ளிட்ட அனைத்து கல்லூரி மாணவர்களை அணிதி ரட்டி சென்னை பன்னாட்டு விமான நிலையத்தை முற்று கையிட்டு எழுச்சிமிகு போராட்டத்தை நடத்தியது. அதன் தொடர்ச்சியாக, 19.3.2013 அன்று பகல் 12 மணியளவில் மீனாட்சி பொறியியல் கல்லூரி மாணவர்களை அணிதிரட்டி சத்தியமூர்த்தி பவனை முற்றுகையிட்டுப் போராடியது. 20.3.2013 அன்று ஜெயின் கல்லூரி மாண வர்களை அணிதிரட்டி பழவந்தாங்கல் ரயில் நிலையத்திலிருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளின் வழியாக விண்ணதிரும் முழக் கங்களுடன் ஊர்வலமாக வந்து நெரிசல் மிக்க தென்பெரும் நெடுஞ்சாலையை மறித்து, போக்குவரத்தை முற்றாக முடக்கி பரங்கிமலை இராணுவ பயிற்சி முகாமை முற்றுகையிட்டு ஆர்ப் பாட்டத்தை நடத்தியது. இதையறிந்து, ஆலந்தூர் வழக்கு மன்றத் தில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த வழக்குரைஞர்கள் திரண்டுவந்து போராட்டத்தில் பங்கேற்று முழக் கமிட்டனர். 21.3.2013 அன்று பொன்னேரி எல்.ஜி அரசு கலைக் கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து பொன்னேரியில் இர யில் மறியல் போராட்டத்தையும்; ஏ.எம்.ஜெயின் கல்லூரி மற்றும் தாகூர் கலை அறிவியல் கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து குரோம்பேட்டையிலும்; பச்சையப்பன் கல்லூரி மற்றும் செயிண்ட் தாமஸ் கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து பச்சையப்பன் கல்லூரி முன்பாகவும் ஈழத் தமிழரின் தன்னுரிமைக்கான மாண வர் முன்னணி போர்க்குணமிக்க சாலை மறியல் போராட்டத்தை நடத்தியது. கலை - அறிவியல் கல்லூரிகள் மட்டுமின்றி, மீனாட்சி, கிருஷ்ணா, பிரின்ஸ் வெங்கடேஸ்வரா உள்ளிட்ட பொறியியல் - தொழிற்நுட்பக் கல்லூரி மாணவர்களையும், சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்களையும் அணிதிரட்டி உண்ணாவிரதம், ஆர்ப் பாட்டம், சாலைமறியல் முதலான போராட்டங்களில் பங்கேற்க வைத்தது.

15-ஆம் தேதியன்று இப்புரட்சிகர அமைப்புகள் இணைந்து அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் தொடர்முழக்க ஆர்ப் பாட்டங்களையும், மைய அரசு அலுவலகங்களை முற்றுகையிடும் போராட்டங்களை நடத்தின. அன்று சென்னை - அண்ணா சாலையில் அண்ணாசிலை அருகிலிருந்து செங்கொடிகளுடன் ஊர்வலமாகத் திரண்ட தோழர்கள், நெடுஞ்சாலையை மறித்து தலைமை அஞ்சலகத்தை முற்றுகையிட்டு, மன்மோகன்- சோனி யாவின் கொடும்பாவிகளைத் தீயிட்டு எரித்து ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். திருச்சியில், மன்மோகன் - ராஜபக்சே கொடும்பாவி களை எரித்து தலைமை அஞ்சலகத்தை முற்றுகையிட்டும், புதுச் சேரியில் மைய அரசு அலுவலகங்களையும் சட்டசபையையும் முற்றுகையிட்டு மன்மோகன் - சோனியாவின் கொடும்பாவிகளை எரித்தும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். மதுரை பெரியார் பேருந்து நிலையத்தில் இப்புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த சிறுவர்கள் அணிதிரண்டு நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கண்ட ஆயிரக்கணக் கான உழைக்கும் மக்கள் வாழ்த்தி வரவேற்றதோடு, ''இந்தச்சின்னப் பசங்க மூத்திரத்தைப் பார்சல் பண்ணி டெல்லிக்காரனுங்களுக்கு அனுப்பனும். அப்பவாவது அவனுங்களுக்குப் புத்தி வருதான்னு பார்ப்போம்!'' என்று காங்கிரசுக் கயவாளிகளைச் சாடினர். இப்ப குதிகள் மட்டுமின்றி, கடலூர், கோவை, நாமக்கல், ஒசூர், மதுராந் தகம், பட்டுக்கோட்டை ஆகிய நகரங்களிலும், தருமபுரி மாவட் டத்தில் பென்னாகரம், நல்லம்பள்ளி ஆகிய இடங்களிலும் தொடர் முழக்க ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

புரட்சிகர அமைப்புகளின் துண்டுப் பிரசுரம் மற்றும் பிரச்சாரத் தால் உந்தப்பட்டு 19-ஆம் தேதியன்று ஓசூரில் அதியமான் பொறி யியல் கல்லூரி, எம்.ஜி.ஆர். கல்லூரி மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அதேநாளில் கும் மிடிப்பூண்டியிலும், கிருஷ்ணகிரி மாவட்டம்- தேன்கனிக் கோட்டை வட்டத்திலுள்ள நாட்ராம்பாளையத்திலும், பென்னாக ரம் அருகிலுள்ள கே.அக்ரஹாரம் கிராமத்திலும் புரட்சிகர அமைப் புகளின் சார்பில் தொடர் முழக்க ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற ன.

20.3.2013 அன்று சென்னை-பல்லாவரம், மதுராந்தகம், செய்யாறு -காவலான் கேட், விழுப்புரம் மாவட்டம் அரசூர், பட்டுக் கோட்டை, ஓசூர்-ராம் நகர், திருச்செங்கோடு, சிவகங்கை, திருவாரூர், கோவை-துடியலூர், வேலூர் ஆகிய இடங்களிலுமாக தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகள் தாங் கள் செயல்படும் பகுதிகளில் தொடர் முழக்க ஆர்ப்பாட்டங்களை நடத்தின. திருச்சியில் பெண் கள் விடுதலை முன்னணியினர் ஐ.நா. தீர்மானத் தின் மோசடியையும், மன்மோகன் - சோனியா கும் பலின் கபட நாடகத்தையும் தோலுரித்துக் காட்டும் வண்ணம் மன்மோகன், ராஜபக்சே, ஒபா மாவின் முகமூடி அணிவித்து, அவர்களிடம் தமிழக ஓட்டுப் பொறுக்கிகள் கையேந்தி நிற்பது போன்று வீதிகளில் காட்சி விளக்க நிகழ்ச்சியுடன் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். 21 அன்று செங் குன்றத்திலும், 22 அன்று சோழிங்கநல்லூர் கே.கே. சாலையிலும், உசிலம்பட்டியிலும் இப்புரட்சிகர அமைப்புகள் தோழமை அமைப்புகளை இணைத்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளன.

-பு.ஜ. செய்தியாளர்கள்.



PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14

- ஈழத் தமிழினப் படுகொலைக்கு நீதி கேட்டு ராஜபக்சேவின் கூட்டாளி டெல்லிக்கும், பங்காளி ஐ.நா.-வுக்கும் காவடி தூக்குவதை நிராகரிப்போம்!
- நூரம்பர்க் போன்ற போர்க்குற்ற விசாரணைக்குக் குறைவான எதையும் ஏற்க மறுப்போம்!
- காங்கிரசு, பாரதிய ஜனதா, வலது-இடது போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட தேசியக் கட்சிகள் அனைத்தும் என்றும் ஈழத்துக்கு எதிரானவர்களே!
- தமிழகத்தில் மீண்டும் மக்கள் எழுச்சியைத் தோற்றுவிப்போம்!!

## - மார்ச் 15 மற்றும் 20-ஆம் தேதிகளில் தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் நடத்திய

# ஆர்ப்பாட்டங்கள்





திருச்சியில்...



புதுக்கோட்டையில்...



ஓசூரில்...


நல்லம்பள்ளியில்...